
விழுங்கப்பட்ட
விதைகள்
திருக்குமரன்

# விழுங்கப்பட்ட விதைகள்

திருக்குமரன்

தமிழோசை பதிப்பகம்

நூல் அமைப்பு விளக்கம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | - | விழுங்கப்பட்ட விதைகள் |
| பொருள் | - | கவிதை |
| ஆசிரியர் | - | திருக்குமரன் |
| முதற்பதிப்பு | - | 2015 மே திருவள்ளுவர் ஆண்டு 2046 |
| பக்கங்கள் | - | 176 |
| வெளியீடு | - | தமிழோசை பதிப்பகம்<br>21 / 8, கிருஷ்ணா நகர்,<br>மணியகாரம்பாளையம்<br>கணபதி, கோவை - 641006<br>தமிழ்நாடு. |
| பேச | - | 97 88 45 90 63 |
| மின்னஞ்சல் | - | tamilosai11@gmail.com |
| நூல் வடிவமைப்பு | - | தமிழோசை பதிப்பகம், கோவை - 6 |
| அச்சாக்கம் | - | ஸ்ரீவிக்னேஷ் பிரிண்ட்ஸ், சென்னை |
| விலை | - | ரூ. 120 |

Title - **Vilungappatta Vithaikal,** ***Poems***, Author- **Thirukkumaran**
First Edition, 2015 May, Thiruvalluvar Era - 2046,
Published by **Tamilosai Pathippagam, 21 / 8 Krishna Nagar,**
**Maniakarampalayam, Ganapathy, Coimbatore - 641006**
**Tamilnadu, India. Mobile -91 97 88 45 90 63,**
Email - tamilosai11@gmail.com
www.ulagathamilosai-Blogspot.com,
Front Wrapper & Type Set - Tamilosai Pathippagam
Printed At Sri Vignesh Prints Chennai
Price - **INR 120**

# பதிப்புரை

**உ**லகின் பல பாகங்களிலும் பலதரப்பட்ட மக்களால் தேசிய இன விடுதலை, சூழலியல், அரச ஒடுக்குமுறைக்கு எதிராக எனப் பல்வேறு வகையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றால் பாதிப்புக்குள்ளான மக்கள் தங்கள் உணர்வுகளை ஓவியம், கவிதை, புனைவிலக்கியம், திரைப்படம் எனப் பல வடிவங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் ஈழ தேசிய விடுதலைப்போராட்டத்தினால் பல்வேறு நாடுகளிலும் அடைக்கலம் புகுந்துள்ள நம் ஈழத் தமிழர்கள் அவர்கள் பட்ட துன்ப துயரங்களை எழுத்தில் பதிந்து வருகின்றனர். அப்படிப் பட்ட ஓர் வரலாற்றுப் பதிவே கவிஞர் திருக்குமரன் அவர்களின் இந்த **விழுங்கப்பட்ட விதைகள்** என்ற கவிதை நூல்.

உயிர்த்துடிப்போடு தனது வலிகளை எழுத்தில் பதிவு செய்துள்ளார் கவிஞர். மரபுக்கவிதைகள் தமிழகத்தில் செல்வாக் கிழந்து கொண்டிருக்கின்ற காலத்தில் ஈழக் கவிஞர்களின் மரபுக் கவிதைகள் மட்டும் ஏன் இன்னும் வீச்சோடு இருக்கின்றன என்பதை இந்த நூலில் நாம் காண முடியும்.

தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான மரபுக்கவிதைகள் எழுதப் பட்டிருந்தாலும் பாரதிதாசன், பெருஞ்சித்திரனார் தவிர்த்து மற்றவர்களால் எழுதப்பட்டவை உயிரற்றுக் கிடக்கின்றன. தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் எந்தப் போராட்டத்திலும் மக்களின் துயரங்களிலும் பங்கெடுக்காதவர்களாக அதை எழுதியவர்கள், எழுதுபவர்கள் இருப்பதே காரணம்..

வில்வரத்தினம், புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் ஆகியோரோடு சேர்ந்து மதிக்கப்பட வேண்டியவர் கவிஞர் திருக்குமரன். ஈழத் தமிழ் இலக்கியம் இன்று போர் இலக்கியம் என்ற புதியதோர் வடிவத்தைத் தொட்டிருக்கிறது. அவ் வகையில் **விழுங்கப்பட்ட விதைகள்** நூல் அமையும். இதனை வெளியிடு வதில் எமது தமிழோசை பதிப்பகம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறது. இதனை வெளியிட எமக்கு அனுமதியளித்த கவிஞர் திருக்குமரன் அவர்களுக்கு என் நன்றிகள்.

தமிழோசைப் பதிப்பகத்தின் இந்நூலைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் படித்து உணர்வு பெறுவார்களாக.

மே 1
2015

என்றும் தமிழ்ப்பணியில்
**க.விசயகுமார்**

# எனது இன்றைய இருப்புக்கான நேற்றைய சுவடுகள்

காலம் என்மீது பலவந்தமாகத் திணித்த வாழ்க்கை அனுபவங்களே என்னுடைய கவிதைகள். அவற்றை முடிந்தளவுக்கு பாசாங்கில்லாமல் மனசால் எழுதி இருக்கிறேன்.

இது என்னுடைய இரெண்டாவது கவிதைத் தொகுப்பின் இரெண்டாவது பதிப்பு. இதற்கு முன்னர் திருக்குமரன் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பும் சேதுக்கால்வாய்த் திட்டம் - அரசியல், இராணுவ, பொருளாதார, சூழலியல் நோக்கு என்ற நூலும் வெளிவந்திருக்கிறன.

என்னுடைய முதல் கவிதைத் தொகுதிக்கும் இந்த இரெண்டாவது தொகுதிக்குமிடையிலான சில ஆண்டு இடைவெளியில் தேச விடுதலைப் போராட்டத்திலும், என்னுடைய தனிப்பட்ட வாழ்விலும் இன்னும் என்னால் நம்பிவிட முடியாத அதிலிருந்து மீண்டெழ முடியாத பல மாற்றங்களைக் காலம் கண் முன்னால் நிகழ்த்திக் காட்டிப் போயிருக்கிறது.

உலக வல்லாதிக்கச் சக்திகளின் பிராந்திய நலன் என்ற கோரப் பசிக்கு எம்முடைய இத்தனை ஆண்டுக் காலப் போராட்டமும் கனவுகளும், வாழ்க்கையும் சிங்கள அரச இயந்திரத்தால் மிகத் தந்திரமான உலக நியதிகளுக்கு ஏற்பில்லாத முறையில் ஈவிரக்கமற்று சூறையாடப்பட்டது. ஆயினும் ஓர்மம் நிறைந்த எங்களின் இடைவிடா முயற்சி மீதும் இயற்கைச்சக்தி மீதும் இன்னும் மீந்திருக்கிற நம்பிக்கைகளால்தான் எம்முடைய வாழ்க்கை தொடர்ந்தும் ஏதோ இயங்கிக் கொண்டிருக்கிறது.

தேசம் விடுதலை அடைந்து விட வேண்டும் என்கிற தீராத ஆசையில் இதற்குள் அகப்பட்ட என்னுடைய வாழ்வும் இன்றுவரை என்னால் மீள முடியாத வேதனையான வாழ்வியல் அனுபவங்களை எனக்குத் தந்திருக்கிறது. 2008-ல் இலங்கை இராணுவத்தால் கடத்தப்பட்டு மிக மோசமாக வதையின் பின்னர் ஒருவாறு தப்பித்து உடலில் உயிர் மட்டும் இருக்கிறது என்கிற அளவில் நாட்டை விட்டுத் தமிழ் நாட்டுக்கு தப்பி ஓடி, பின்னர்

அங்கும் கைது செய்யப்பட்டு செங்கல்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, சில காலங்களின் பின் பலரின் முயற்சியால் அங்கிருந்து ஒருவாறாக விடுதலையாகி வெளி நாடொன்றுக்கு வந்து, அங்கும் எல்லை முகவர் நிலையத்தால் அதே களைப்போடு மீண்டும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுச் சில மாதங்களின் பின் அதிலிருந்தும் வெளியேறி, வேறொரு ஐரோப்பிய நாட்டுக்குத் தப்பி ஓடி இன்னமுமே ஓட்டம் முடியாமல் அகதி முகாம் ஒன்றில் என் வாழ்வு அடைபட்டுக் கிடக்கிறது, நான் இப்போது எதிர்கொள்கின்ற வாழ்க்கை என்பது வருடங்கள், மாதங்கள், நாட்கள், மணி நிமிடம் அறுந்து போன நேரம் உறைந்த நிலையில் உள்ள ஒரு வாழ்க்கைதான்.

இங்கேயே வாழ்வு முடிந்து போவதற்கு முன்னர் என்றாவது ஒரு நாள் தேசம் திரும்புகிற காலம் எனக்கு வந்து விடும் என்கிற நம்பிக்கையிலும், திருமணமாகி ஓராண்டிலேயே தவிர்க்க முடியாமல் பிரிய நேர்ந்த என் மனைவியையும், தவழும் குழந்தை யாகப் பார்த்த என் மகனையும், என்னைப் பார்த்து விடுவதற்காகக் காத்திருக்கும் என்னுடைய வயோதிகப் பெற்றோரையும் எப்படி யாவது அந்திம காலத்துக்குள் பார்த்து விடுவேன் என்கிற பேராசை யிலும் தான் உயிர் வாழ்தல் என்கிற ஒற்றைக் காரணத்தை என்னுள் சுமந்தபடி இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறேன். இத்தகைய என் னுடைய வாழ்வனுபவத்தில் இருந்து நான் புரிந்து கொண்ட வற்றையே இங்கு கவிதைகளாகச் செதுக்கி இருக்கிறேன்.

என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்திருந்த என் அன்புக்குப் பாத்திரமான கவிஞர் இ. முருகையன், எழுத்தாளர் செ. யோகநாதன், கவிஞர் புதுவை இரெத்தினதுரை, பல வழிகளிலே எனக்கு எப்போதும் உறுதுணை யாக இருந்த பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் இந்த இரெண்டாவது தொகுப்பு வெளிவரும் சில ஆண்டு இடை வெளிக்குள் இனி ஒரு போதும் சந்திக்க முடியாதபடிக்கு விடை பெற்றுச் சென்று விட்டார்கள் என்பதை நினைக்கும்போது, நாளை பற்றிய நிச்சயமின்மையையும் எழுதித்தான் என்ன? நான் போன பின் என்னுடைய எழுத்துக்கள் என்றோ ஒரு காலத்தில் யாரோ ஒருவரால் மீளவாசிக்கப்பட்டாலும் கூட எனக்குத் தெரிந்து விடவா போகிறது என்ற வெறுப்பும் என்னுள் எழும். ஆயினும் மீந்திருக்கும் என் உயிரை இயங்க வைப்பதற்கு எழுதுதல் தவிர

வேறெதுவும் உயிரியக்கி என்னிடம் இப்போது கைவசம் இல்லை யென்பதால் தவிர்க்க முடியாமல் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இடர்பாடுகள் நிறைந்த என்னுடைய நீண்ட பயணத்தில் பல வழிகளிலும் எனக்கு உறு துணையாக இருக்கும் நண்பர்களை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர விரும்புகிறேன், பெயர் குறிப்பிடாத என் நண்பர்கள் பட்டியல் நீளமானது அதனால்தான் என் உலகு இன்னும் சுழல்கிறது

ஒரு தேசம் முழுமையாக விடுதலையடைகிறபோது தான் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை சுதந்திரம் நிறைந்ததாகவும் அர்த்த முள்ளதாகவும் இருக்குமெனக் கருதி, அதற்கான போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான போராளிகளும் மக்களும் தம் வாழ்வைத் தன்னலமற்று அர்ப்பணித்தபோதும் அதற்கான பலன் இன்றுவரை கிடைக்கவில்லை.

ஒவ்வொரு தேசம் விடிவதற்கென்றும் ஒவ்வொரு காலம் இருக்கிறது அதற்கான காலம் வரும்போது தனக்கெதிரான சகல தடைகளையும் உடைத்தெறிந்து கொண்டு தேசம் விடிந்தே தீரும் என்கிற இயற்கையின் விதியில் எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது, விடிகின்ற அந்தப் பொற்காலம் என் வாழ்வுக் காலத்தி லேயே நடந்துவிட்டால் அதைத்தான் என்னுடைய இந்தப் பிறப்பின் பேறெனக் கருதுவேன்.

நன்றி

என்றும் அன்புடன்

**தி. திருக்குமரன்**

# விதைகள்


| | |
|---|---|
| 1. பல்லுள்ள போதே பறை | 11 |
| 2. திரும்பலுக்கான சத்தியம். | 13 |
| 3. மழையும் நினைவும் மனசளையும்.. | 17 |
| 4. நமக்கான விதி நதிக்கும்.. | 19 |
| 5. கட்டி அழுதது காமம்.. | 22 |
| 6. நினைவின் வாசம் நிசமாகும்.. | 24 |
| 7. எங்கேயோ இருக்கிறீர்கள்..? | 26 |
| 8. ஏழுகடல் ஏழுமலை தாண்டி. | 28 |
| 9. இறப்பதற்கு முன் அந்த இருநொடிகள்.. | 31 |
| 10. ஊன்றிவிட்டுச் செல்லுங்கள்.. | 33 |
| 11. வாழும் நாட்களில் நீளும் நாட்கள்.. | 37 |
| 12. மனைவி எழுதிய கடிதங்கள்.. | 39 |
| 13. மெல்லக் கொல்கின்ற நோய்.. | 43 |
| 14. சாவினால் சுற்றிவளைக்கப்பட்டவர்கள்.. | 46 |
| 15. நேரம் உறைகின்ற காலம்... | 49 |
| 16. 'சா' பற்றி எண்ண(ச்) சஞ்சலங்கள்.. | 52 |
| 17. சன்னம் வரைகிற வட்டம்.. | 54 |
| 18. காலம் ஆகினீர்.. – பேராசிரியர் கா.சிவத்தம்பி | 56 |
| 19. கால வல்லரசின் கையில்.. | 57 |
| 20. ஊடுருவும் பேருறவு... | 60 |
| 21. நினைவின் கனவு நீள்கிறது.. | 62 |
| 22. திருகும் மனமும் கருகும் நானும். | 65 |
| 23. எனது நீ.. | 69 |
| 24. ஓடிப் பறக்கிறது காலம்.. | 70 |
| 25. நீ வந்த நாளும் நெஞ்சார்ந்த எதிர்பார்ப்பும்.. | 75 |
| 26. தூரத்தில் இருக்கின்ற தோழனுக்கு.. | 78 |
| 27. இறுதிக்கால இரவுகள்.. | 81 |
| 28. பனிப்புகை மனசுக்குள் படர்கிறது.. | 83 |
| 29. எங்களை மறந்து விடாதீர்.. | 87 |
| 30. வாழத்தெரியாதவன்.. | 89 |
| 31. எப்படித்தான் மறப்பேன் இந்நாளை.. (மே 18) | 91 |
| 32. ஆவி உயிர்ப்பாக.. | 94 |
| 33. தந்ததுன் தன்னை.. | 96 |

| | |
|---|---|
| 34. இப்படியாகத்தான் தோழர்களே.. | 97 |
| 35. இனிதே நிறைவுறட்டும்.. | 100 |
| 36. ஈர்ப்பில் துடிக்கின்ற இயக்க விசை.. | 102 |
| 37. நானும் மகனும்.. | 103 |
| 38. பார்வைகள்.. | 104 |
| 39. இதே இரவில்.. | 105 |
| 40. எமக்கான சூர்யோதயம்.. | 107 |
| 41. சும்மா இருத்தலின் சுகம் | 108 |
| 42. வாழ் கனவே.. | 109 |
| 43. எல்லாம் நன்மைக்கே .. | 112 |
| 44. தப்படா இந்தப் பிறப்பு.. | 115 |
| 45. சாகாமல் இருப்பதற்கே.. | 116 |
| 46. பசுந்தரையாகப் படருவேன்.. | 119 |
| 47. வேரறுந்த சோக வலி.. | 122 |
| 48. காற்றுக்களும் காலமும்.. | 124 |
| 49. அணையாத தீபம்.. | 127 |
| 50. குஞ்சு பறந்த முட்டைக் கோது.. | 129 |
| 51. அதே வாசல்.. | 130 |
| 52. இது நடக்கும்.. | 132 |
| 53. வாழ்தலுக்கான ஆசை.. | 135 |
| 54. இருக்கின்றான் என்பதுவே.. | 137 |
| 55. அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் | 139 |
| 56. நிச்சயமற்ற காலமும் நினைவுகளும்.. | 142 |
| 57. ஒரு கணம்.. ஒரு தருணம்.. | 146 |
| 58. கொடுப்பனவு.. | 148 |
| 59. நிறுத்தமற்ற பயணம்.. | 150 |
| 60. துயரப் பெருவெளி.. | 153 |
| 61. சுதந்திரத்தின் பின்னான சோகம்.. | 157 |
| 62. நலனற்றுப்போதல்.. | 159 |
| 63. கத்தி நீ சொல்லுவாய்.. | 160 |
| 64. விடுதலைக்கான பாடல் | 163 |
| 65. கண்ணாடி முன்னின்று கதைத்தல்.. | 165 |
| 66. நிசம் உணர்ந்தணிந்த நெருப்பாடை.. | 168 |
| 67. மனத்தின் பயணம்.. | 171 |
| 68. பயணத்தின் நாட்கள்... | 173 |

# விழுங்கப்பட்ட விதைகள்

## 1. பல்லுள்ள போதே பறை

எவ்வளவு சீக்கிரமாய்
இயல்கிறதோ முடிந்தளவு
அவ்வளவு சீக்கிரமாய்
எழுதி விடு, கவி மனதை

எங்கிருந்தோ வரும்
அழைப்பொன்று, மீண்டோடி
மங்கலாய்த் தெரியும்
முகமொன்று, எண்ணாமல்
நண்பன் உனை வைத
வரி ஒன்று, தலை சுற்றி
கண் முன்னால் வெண் பூச்சி
கடக்க நினைவின் மேல்
எதிர்காலம் பற்றி
ஏதேனும் ஓரெண்ணம்
எழுந்து கவி மனதை
எட்டிட முன் விரைவாக
வழிந்தோடி விழுகின்ற வரியை
வரைந்து விடு, உன் பழைய

காதல் பற்றி ஏதும்
கரைந்துருகிக் கிறுக்கிடு முன்
மோதல் குடும்பத்துள்
முட்டி வெடித்திட முன்
விசாரணைக்கு நீ விளக்கம்
வீழ்ந்தடித்துச் சொல்லிட முன்
விளக்கத்தைக் கேட்காமல்
விவாகம் ரத்தாகி
ஏதேனும் நீ எழுதித்
தொலைத்திடு முன்
இப்போதே
பக்கத்தை நிரப்பி
மறு பக்கம் தொடங்கி விடு

வறுமை உனை வளைத்து
வலைக்குள்ளே இறுக்கிடு முன்
இறுக்கம் தாங்காமல்
இதயத்தூண் தகர்ந்திட முன்
தகர்ந்து உடல் நலிந்து
தள்ளாடிப் போய்விட முன்
தள்ளாட்டம் தாங்காது
தளிர் மனது சோர்ந்திட முன்
சோர்ந்தது கண்டுந்தன்
சொந்தங்கள் விலகிட முன்
விலகிப் போய் உன்பாதை
வெறிச்சோடிப் போய்விட முன்
போய் விட்ட வாழ்வெண்ணிப்
பொறி கலங்கி வீழந்திட முன்
வீழந்து விட்டான் இவன் வாழ்வு
விழல் என்று தூற்றிட முன்

சொல்லுள்ளே வாழ்வின்
சூட்சுமத்தை வாயிற்
பல்லுள்ள போதே பறை

## 2. திரும்பலுக்கான சத்தியம்..

எம்முடைய பறப்பின்
கதை என்பது
சத்தியத்தின் கதை
அல்லது
திரும்பலுக்கான சத்தியம்

எமக்கெதிரே மோசமான
பருவங்கள் உருவாகின்ற போது
சுதந்திரமாய் வாழ்தல் என்ற
ஒற்றைக் காரணத்துக்காக
பல்லாயிரக் கணக்கான
மைல்களையும்
பல லெட்சம் இடர்களையும்
ஊடறுத்துப் பறக்கிறோம்

புறப்படுவது என்று
முடிவாகி விட்ட பிறகு
இறுதியாக ஒரு முறை
நாம் வாழ்ந்த இடங்களை
கண்ணில் பதித்தபடி
பறக்கத் தொடங்குவோம்

நிலா, விண்மீன், மழை, மின்னல்
காடுகள், மலைகள்
எத்தனையோ எத்தனையோ
அழகும் ஆபத்தும் நிறைந்த
இடங்கள், எல்லாம் கடந்து
இலக்கை அடையும் வரை
இராப்பகல் பார்க்காமல்
எங்கள் பயணம் தொடரும்

எங்கள் வாழ்வின் மீதான
போராட்டம் தான்
இந்த நெடும் பயணம்

எமக்கு முன் சென்ற
தோழர்களிற் சிலர்
எல்லைச் சிறைக் கூடுகளில்
அடைக்கப் பட்டிருப்பதையும்
எம்மைக் கண்டவுடன்
சிறைக் கம்பிகளில் முட்டி
விடுதலை வேண்டி அவர்கள்
ஈனஸ்வரம் எழுப்புவதையும்
கண்ணீர் சிந்தலுடன்
கடந்திருக்கிறோம்

எம் பறப்பின் நெடிய துயரும்
சாக்களையும் அறியாப் பலர்
வழிகளில் எம்மையும்
சிறை வைக்கலாம்
பசி எனில் சுட்டு வீழ்த்தவும் கூடும்
ஒரு வேளை இது
பொழுது போக்காகவும் கூட
அவர்களுக்கு இருக்கலாம்

ஆயினும்
நாம் கடந்து வந்த
பாதையின் சுவடுகள்
காற்றில் வாசமான ஓவியங்களாக
வரையப் பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில்
நாம் பறந்து கொண்டே இருக்கிறோம்

வாழ்வதற்கான
நிறைந்த ஆசைகளோடு கூடிய
பறப்பின் இடைவெளியில்
நாம் கொல்லப் படுகிறபோது
வானிற் சிதறிய

வண்ணம் நிறைந்த பறப்பின்
கனவுகள் தான்
முகில்களாக அங்குமிங்கும்
அலைந்தோடிக் கொண்டிருக்கிறதோ
தெரியவில்லை!
கண்டங்களும் கடல்களும்
கடக்கக் கடக்கத் தான்
திரும்பிச் செல்ல வேண்டும்
என்ற எண்ணம்
எம்முள் தீவிரமாகிறது
பூமிப் பந்தின்
ஒவ்வொரு மூலையில் இருந்தும்
எத்தனை எத்தனையோ தோழர்கள்
திரும்பி விடுவோம் என்ற உறுதியில் தான்
துருவங்களைக் கடக்கிறார்கள்

எம் பயணக் குறிப்புகள்
கடற்கரைகளிலும் காடுகளிலும்
இறகுகளாயும்
இறந்து போய் விட்ட
எம் தோழர்களின் என்புக் கூடுகளாயும்
எம் நெடு வழிப் பயணத்தின்
கதைகளைப் பேசிய படி
கிடக்கும்,

இங்கேயும் வாழலாம்
என்றுணர்கிற போது
அங்கே இறங்குவோம்
கூடிக் குலவுவோம், ஆடிமகிழுவோம்
ஆயிரம் இங்கு நடந்தாலும்
எங்கள்
வயல் வெளிகளின் வாசனையும்
மரங்களின் சுவாசமும்
இன்னமும் எங்கள் மூக்குகளில்
மணத்துக் கொண்டே தான்
இருக்கிறது,

நாளாந்த வாழ்க்கையில்
வாரிசுகள் எமக்கிங்கு வாய்த்தாலும்
சொந்த மண்ணின் சுகந்தத்தை
அவர்கள் எங்கள் மூக்குகளில்
இருந்து உணர்ந்தறிவார்கள்.
ஒரு வேளை
இந்த இடங்களிலேயே நாங்கள்
இறக்க நேர்ந்தாலும்
வந்த வழி நெடுக வரையப் பட்டிருக்கும்
எங்கள் வாழ்வுக் கனவுகளின்
தடம் அறிந்து பிள்ளைகளும்
சொந்தக் கூடடைவர் என்கின்ற
நம்பிக்கை
இன்னும் இருக்கிறது எங்களுக்கு,
இதுவும் கூட
திரும்பலுக்கான சத்தியம் தான்.

எமக்கான பருவம் என்று
ஒரு நாள் வரும்..!
அன்று
கூட்டம் கூட்டமாய் நாங்கள்
கூடு திரும்புவோம்
எங்கள் மண்ணும், காற்றும்
வயல் வெளிகளும், மரங்களும்
எங்களுக்காகத்தான்
தோழர்களே !
காத்துக் கிடக்கின்றன.

## 3. மழையும் நினைவும் மனசளையும்..

கருக்கட்டி விட்ட
மேகங்கள் வானத்தில்
உருக் கொண்டலைய
உள்ளத்தில் நினைவென்னும்
கருவும் உள் வளர்ந்து
காலுதைக்கத் தொடங்கி விடும்

மேகம் பிரண் டிருண்டு
மிதந்திணைய நினைவலைகள்
மோகம் கொண்டுவிட்ட
முரட்டாண் யானையைப் போல்
ஏகமாய் உள்ளிரைந்து
இயலாமல் உடல் பிரட்டும்

ஏதோ ஓர் வகையான
இத இருளில் ஈரத் தீ
மோதி உரசி விட
மொய்த்தூரும் காற்றினிலே
போதி மர நிழலீரம்
பொழிய நினைவு வலி
ஆதிப் பிறப்பொன்று
அவதரிக்கப் போவதெண்ணி
வேதனையின் இன்ப
வெப்பத்தில் குளிர்ந்துருகும்

மெள்ளத் தூவான
விழுதிறங்கி மண் மணக்க
உள்ளே இருக்கின்ற
உயிர்க் குழந்தை வருவதற்காய்

வெள்ளை கறுப்பாக
விழத் தொடங்கும் நினைவுகளும்

பெருந்துளியாய் மேகம்
பிறப்பிக்கும் ஒவ்வொன்றும்
அறுந்தவிழ்ந்து மண்ணை
அடைகின்ற போதிலங்கு
தெறிக்கின்ற சின்னத்
துளிகளாய் என் நினைவு
பறந்து ஊர்க் கோடிப்
பக்கத்தில் வீழுகையில்

நீண்ட நினைவின் நேரா
நேரமும் கூடி வர
மாண்டு பிறப்பது போல்
மன யோனி திறந்து விட
ஆண்டு அனுபவிக்க
அழகான கவிக் குழந்தை
தோன்றி வெண் தாளில்
துள்ளி விழுந்திடுவான்

மேகம் பெற்றெடுத்த
மென் குழந்தை மழையாலே
யோகம் பெற்றுவிட்ட நிலமும்
அதனாலே
தாக நினைவெழுந்து
தான் பெற்ற கவியாலே
போகும் வழி அறிந்த மனமும்
இப்போது
ஏகம் அகமாகி
இரண்டற்ற ஒன்றாகி
ஈக மனம் போல
ஈரலிப்பாய்க் கிடக்கிறது..

## 4. நமக்கான விதி நதிக்கும்..

எங்கேயோ நிகழும்
ஏதோவோர் சேர்க்கையினால்
இங்கே வந்திறங்கி
இழுபட்டு இறுதி வரை
ஓயாமல் ஓடி
ஓர் நாள் முடிகையிலே
கடந்த பாதைகளும்
கனவுகளும், நினைவுகளும்
உடன் வராமலேயே
ஒன்றுமற்றுப் பேரிழந்து
வேறொன்றாகும்
விதி ஒன்றே இப்பாரில்
வேறொன்றே இல்லாத
விதியாய், நிரந்தரமாய்
நமக்கென்றும்
நதிக்கென்றும் நல்கியது,
அப்படியே
நதிக்கான வாழ்வும்
நம் வாழ்வும் ஒன்றே தான்

ஒரு சிறிய முளையாக,
ஒவ்வோர் துளியாக,
கரு அசையும் படியாக,
கசிந்தூரும் வடிவாக
உரு பின்னர் எப்படியாய்
உருவாகப் போகுதென்று
தெரியாத நிலையிற் தான்
திசையின்றி அவராகத்
தெரியாத வாழ்வொன்று

தெரிவாகும், பயணங்கள்
உடல் பிரட்டி மெல்ல
உருண்டு, தவண்டோடி
மடலொத்த பாதங்கள்
மண் தொட்டுத் தத்தி
முடிவிடத்தைத் தூரத்தை
முற்றிலுமே அறியாமல்
அடியெடுத்து வைக்கும்
அறியாத பயணத்தில்

ஓடும் வழி இதுவென்று
ஒரு போதும் இருவருமே
கோடொன்றைப் போட்டந்தக்
குறிப்பு வழி செல்வதில்லை
கட்டிக் காவிவந்த
கனவுகளின் மூட்டை எல்லாம்
முட்டி எதிர் மோதும்
முரட்டு வழித் தடைகளிலே
தட்டுப்பட் டொவ்வொன்றாய்த்
தவறி விழும்,வீழந்தவைகள்
திட்டுகளாய் அதிலேயே
தேங்கி உலர்ந்து விடும்

எஞ்சி இருப்பவற்றை
இயன்றவரை மோதாமல்
அஞ்சுவதாய்க் காட்டாமல்
அஞ்சி, தடைகளின் மேல்
பட்டும் படாமலுக்குப்
பக்குவமாய் மெதுவாக

வேகத்தைக் குறைத்து
விலத்தி, கரைகாணும்
மோகம் தருகின்ற
முனைப்பில் இன்னமுமே
தெரியாத முடிவிடத்தின்
திக்கை அறியாமல்
புரியாத பாதை வழி
போகின்றோம், இறுதியிலே

இந்த இடத்தை நாம்
எட்டுதற்கா இவ்வளவும்
நொந்து வழி நெடுக
நொடிந்தோம் எனுமெண்ணம்
கண்ணுள் இமைப்பதற்குள்
கரைந்து நாம் வேறொன்றாய்
மண் வாழ்வை விட்டெங்கோ
மறைவோம், அதன் பின்னே
வந்த வழித்தடத்தில்
வரலாறில் எம்பெயர்கள்
எந்தப் புகழ்த் தூசாய்
எழுந்தாலும் அது எங்கள்
கண்களிலே விழுமோ
கலங்கத்தான் வைத்திடுமோ
எண்ணச் சுவாசத்தில்
ஏறிப் புரக்கடித்திடுமோ
ஒரு மண்ணும் மிஞ்சாத
உயிர் வாழ்க்கை பூமியிலே
நமக்குத்தான் மட்டுமல்ல
நதிக்கும் தான்...

செழித்து மதாளித்து நெளிந்த படி
கொளித்துப் போய்க் கிடக்கிறதுன்
உடல்ச் செடி

இருளாய்ப் படர்ந்திருக்கும்
உன் பிடரி முடி அடிவேரில் என்
பத்து விரல் நுளைத்து பற்றவும்
ஒளி நிறைந்து
அல்லியாய் அவிழ்கிறது
உன் முகம்

நெற்றி கண்களென
நீளுகிற முத்தம், உதடுகளைப்
பற்றி உண்கையில்
பட படக்கும் நாடிகளைச்
சுற்றித் தெறிக்கிறது வெப்பம்

தகிப்பதனால் தான் தேகமோ
மயிர்க்காலின்
ஒவ்வோர் துளை வழியும்
ஊறுகின்ற உயிர்க் கனலில்
ஆவி உயிர்க்கிறது வியர்வை

மண்ணை மழை தொடவும்
மதர்த் தெழும்பும் வாசம் போல்
சின்னப் பூப் பூவாய்
சிந்துகிற என் வியர்வை
வண்ண மிகு உன் உடலில் வடிய
எழுகின்ற
ஆத்ம தாகத்தின் வாசத்தை
உயிர் குடிக்கும்

தோலின் நிறம் மாறும்,
துடித்தாடும் ஆசைக்கு
அடிக்கின்ற தவிலாய்
இமை ஆடும்

## 5. கட்டி அழுதது காமம்..

மென் தண்டின்
இளந்தளிரின் சிவப்பு
விழி ஏறும்

கண மொன்றில்
கூடு விட்டுக் கூட்டுக்குக்
குதிப்பது போல் மின்சாரம்
ஓடிப் பாய்கின்ற உணர்வொன்றில்
உன் கண்கள்
கூடி எங்கே தான் ஒழிந்ததுவோ..?
தீராத
ஆசைகளைத் தீராமல்
அடைவதற்கு மேற் செருகி
தியானித்திருக்கிறதோ
அருள் வேண்டி..
உடலுள்ளே
தீ வடிவாய் இருக்கும் அத்
தெய்வத்தைக் காண்பதற்கு
காவடி எடுத்தாடிப் போயிற்றோ

உடலிணைவின்
உச்ச நிலையில் மன மலையில்
ஊற்றெடுத்த
அமுத நீர் வீழ்ச்சி
அளைவதற்கு ஓடிற்றோ

எங்கே சொல்லடி உன்
கண்ணெங்கே என்ற படி
கட்டி அணைத்திடவும்
கைகளுக்குள் வெறும் பஞ்சாய்
முட்டுப் பட்ட தெந்தன்
தலையணை தான்
அவள் இல்லை..
திட்டுத் திட்டாய்க் கண்ணில்
நீர்த் திவலை, தாங்காமல்
கட்டி அழுததென்னைக்
காமம்..

## 6. நினைவின் வாசம் நிசமாகும்..

செம்பாடாய் வெண் துகளாய்
செங்கறுப்பு நீலமதாய்
எம் பால்யக் காலத்து
மேனிகளில் இருக்கையில் நீ
எம்மோடு கொண்டிருந்த உறவை
இறக்கையிலும்
இறுதிச் சேடமதாய்
எழப்போகும் உன் நினைவை
அன்றுன்னில் வெய்யில் மண்
அடித்துத் திரிகையிலே
என்றைக்கும் நானன்று
இன்றளவுக் குணரவில்லை
ஒவ்வொரு மைல்மைலாய்
உனைப் பிரியப் பிரியத்தான்
அவ்வளவுக் கவ்வளவாய்
ஆவியில் நீ ஊறுகிறாய்

ஊரே உறங்கி உள்ள
ஓசை அற்ற ராத்திரியில்
தூரத்தில் எங்கோ
துணைதேடும் பறவையொன்றின்
பாசம் நிறைந்த மனப்
பதைபதைப்பின் குரல் போல,
மூலத்தைப் பிரிந் திடையில்
முடங்கி உள்ள நீர் நிலையில்
கூளாங்கல் எறியக்
குதிக்கின்ற நீர்த் தெறிப்பாய்,
அதிலிருந்து அகண்டு
அகண்டகண்டு விரிகின்ற
விதியின் நீர் வளைய
விரிவைப் போல்,
விசை அழுத்த
எங்கோ துப்பாக்கி வ்ாயாற் புறப்பட்ட
அங்கம் பிளக்கவந்த குண்டு
அரங்கிப் போய்
உய்ங் கென்றென் காதை

உரசிச் செல்வது போல்,
தாகத்தில்
ஒட்டி உலர்ந்துள்ள வாய்க்கு
கிடைக்கின்ற
ஓடைக் குளிர்நீரின்
ஒரு மிடறாய், காலுரஞ்சி
குர்குர்ரென்று குளைகின்ற
பூனையென,
விபத்தொன்றில்
முழங்காலின் கீழே கால்
போனாலும் மூளைக்கு
பாதம் கடிப்பதுவாய்ப்
படுவது போல்,
இப்போதில்
உந்தன் நினைவெந்தன்
உயிருள்ளே மணக்கிறது

இன்றைக்கோ
விடியல்க் கனவோடும்
விழுப்புண் ரணத்தோடும்
அடைபட்டுக் கிடக்கின்றாய்
அன்பே, பொறுத்திரு நீ

கைகளை விலங்கினால்
கட்டினால் கால்களால்
கால்களை வெட்டியே
வீசினால் இமைகளால்
இமைகளை இழுத்துப்
புடுங்கினால் பற்களால்
பற்களை உடைத்தும்
பறத்தினால் மூச்சினால்
எப்படியேனும் எழுந்து நாம்
எம்முடை
இப்பிறப் பறுந்து செல்லுமுன்
உன்னிலே
அப்பனே நாம் எழுதுவோம்
விடுதலை..

# 7. எங்கேயோ இருக்கிறீர்கள்..?

எனக்குத்தெரியும்
நீங்கள் எங்கேயோ இருக்கிறீர்கள்
கடைசியாக நீங்கள் வேலையால் வந்து
கழற்றிப்போட்ட ஆடைகள்
உங்களில் நான் கிறங்கும்
அதே வியர்வை மணத்துடன்
கொழுக்கியில் தொங்கிக்கொண்டு இருக்கிறது..

அன்றிரவு அவர்கள் உங்களை
அடித்து இழுத்துச்சென்ற போது
நான்கதறிய கதறல்
இப்போது ஒவ்வொரு வீடாய்
கேட்கத்தொடங்கி இருக்கிறது
காலையில் எழுந்து
அப்பா எங்கே என மகன் கேட்டான்
எப்படித்தான் காணாமல் போனமை பற்றி
அவனுக்கு நான் விளக்க முடியும்..?
வருடங்கள் உருண்டோடி விட்டன
காலமும் மனிதர்களும்
எதுவுமே நடந்து விடாதது போல்
போய்க் கொண்டிருக்கிறார்கள்...!

உங்கள் நெஞ்சில் இருந்து
துள்ளுவது போலவே
நேற்றைக்கு மாலையும்
என் மார்பில் குதித்தபடி
அப்பா புராணம் பாடிக்கொண்டிருந்தான் மகன்,
பொறுக்க முடியாமையின் விளிம்பிலும்
காலநீட்சியின் விரக்தியிலும்
அப்பா அப்புச்சாமியிடம் போய்விட்டார்
எனச்சொல்ல வாயெடுப்பேன்
ஆனால் ஏதோ ஒன்று
உள்ளிருந்து தடுக்கும்

எத்தனையோ இரவுகள்
தலையணையைக்கட்டி அணைப்பதும்
வெறுங்காற்றில் காலைத்தூக்கிப் போடுவதுமாக
கழிந்துவிட்டன..
ஜோசியர்கள் சொன்னபடி
ஈசானமூலை, அக்கினிமூலை என
அத்தனை திசைகளிலும் உள்ள
இராணுவ முகாம்களிலும்,
நடுநிசியின் நாய்க்குரைப்பு
ஓசைகளைக் கிழித்தபடி
வாசலில் நின்று செல்லும்
வாகனங்களின் பின்னாலும்
பல ஆண்டுகளாக
ஓடிக்களைத்து விட்டேன்,
உண்மையில்
உங்களைத்தேடி நான் ஏறாத
வாசல்கள் இல்லை
சுவர்க்க வாசலைத்தவிர,

நான் உணர்ந்து கொள்கிறேன்
என்னுடைய இந்தப்பிறப்பின்
வாழ்க்கைக்காலத்தில்
இனி ஒருபோதும்
உங்களை நான் காணப்போவதில்லை..
ஆனாலும் இப்போது கூட
உள் மனசு சொல்கிறது
நீங்கள் எங்கேயோ இருக்கிறீர்கள்...?

தூக்கத்தில் வந்தென்னைத்
தொட்ட கனவுக்குள்
தூங்கி ஓர் கனவைக் காண்பதுவாய்க்
கனவொன்று

நிரை நிரையாய் மரங்கள்
நிழலைச் சொரிந்த படி
உரையும் கொப்புகளின்
உயிரோசை கிரீச் என்று
கரையும் குருவிகளின்
காந்தக் குரலோசை
புரியாவிட்டாலும்
புல்லரித்துச் சிலிர்க்கிறது
பல முறை நான் சென்று
பழகிய இடம் போல
அழகிய குளக்கரை
அப்பாலே மணற்கும்பி
மன வெளியை நிரப்புகிற
மணல் வெளிகள் வெளிதாக
ஆத்ம சரீரத்தில்
அதன் மணத்தை நுகருகிறேன்
ஆளரவம் இல்லாத
அமைதி ஒலி எங்கணுமே

ஆண்டாண்டு காலமாய்
அனுபவித்துத் திளைத்திருந்த
பூண்டு எனைப்போற்றி
பூக்க வைத்த மண்ணுக்கு
மீண்டு நான் வந்துவிட்ட
மிதப்பில், புழுகத்தில்
உங்காலும் அங்காலும் ஓடி
உடல் வேர்த்து, களைத்துப் போய்
எங்காலும் மரத்தடியில்
இருப்பமெனக் குந்தி விட
அப்படி ஓர் தூக்கம்
அதற்குள்ளும் ஓர் கனவு
இப்போது நான் பார்த்த
இதே போன்ற நிலக் காட்சி
எப்போதோ நான் கண்ட

## 8. ஏழுகடல் ஏழுமலை தாண்டி.

என் பால்ய நண்பர்கள்
தென்னங் குரும்பைத்
தேரோடும்,உருட்டுகிற
சின்னப் பனை நுங்குச்
சில்லோடும் அப்படியே
அப்படியே நிஜமாக
அதே அந்தக் காலத்தில்,
அப்பன் வந்துள்ளே
சாப்பிட்டு விளையாடு
எப்போதும் எனை அதிரப்பேசாத
என் அப்பா
அப்பாலே நின்று அழைக்கின்றார்
இப்போது
கனவுக்குள் வந்த கனவென்னுள்
கலைகிறது, இன்னும்
கலையாத கனவுள்
கண் விழித்துப் பார்க்கின்றேன்
கனவின் கனவுள்ளே
கண்டவைகள் கலையாத
கனவின் கண்களுக்கு
காட்சி தர மறுக்கிறது

அப்பன் எழும்பிச்
சாப்பிட்டுப் படனப்பன்
அப்பாதான் மீண்டும்
இப்போதும் அழைக்கின்றார்..

ஓம் என்று சோம்பல்
உதறி முழிக்கின்றேன்
ஒருத்தருமே இல்லை!
உலகொன்றின் மூலைக்குள்
தரித்திரம் பிடித்துப் போய்த்
தனியே நான் கிடக்கின்றேன்
கனவுக்கு அதன் கனவு
கலைந்து விட்ட பின்னாலே
காட்சியாய் அதை மீண்டும்
காணக் கிடைக்கவில்லை
இரு கனவும் கலைந்து விட்ட
இப்போதில் நனவினிலே

ஒரு காட்சி கூட இப்ப
உயிர்ப்பாகத் தெரியவில்லை
நினைவுகள் மட்டுமே
நெடுஞ்சாணாய்க் கிடக்கிறது

காமம் கடுங்கோபம்
காழ்ப்புணர்வு காசீட்டம்
வெற்றி வேட்கை என்ற
வெறித்தன்மை படிந்துள்ள
மூளை, விழித்திருந்து
முழுதாக எம்மைத் தன்
ஆளாக நடத்தும் போதினிலே
எம்மாலே
காலங்களைக் கடக்க முடியாது
அது சோர்ந்து
கண்ணயர்ந்து போகும்
கட்டத்தில் ஆழ் மனது
விண்ணுயர எழுந்து விரிந்து காலத்தை
மண்ணளவாய்த் தன் கையுள்
மடக்கும், அதனாலே

பசிய நினைவுகளும் பாசங்கில்லாத
பாச உறவுகளும் பால்யமும்
முன்போல
கசிந்து வழிந்தோடும்
காலத்தின் காட்சிகளைக்
கண்டுணர்ந்து வாழ்ந்தெந்தன்
காலத்தைக் கடப்பதற்காய்
ஆழ் மனதை அது தோன்றும்
ஆழுறக்க நிலைதன்னை
அப்படியே கட்டி அணைத்தபடி
அசராமல்
ஏழுகடல் ஏழுமலை கடந்து
எழுந்துள்ள
காலத்தைப் பிளந்து கடக்கின்றேன்
இதை விடவும்
ஏதும் வழி தெரிந்தால்
எந்தனுக்குக்கும் சொல்லுங்கள்..

# 9. இறப்பதற்கு முன் அந்த இருநொடிகள்,

செயலில் செயலற்ற நிலையில்
சிந்தனைகள்,
உச்சிக்கேறி நின்று
உரக்கப் பறந்த பட்டம்
மூச்சறுந்து மெல்ல மெல்ல
வீழுவதாய் உடல் நிலமை,

இறுதிக் கணங்களிவை என
ஊறும் உள்ளுணர்வு
இதயக் கனத்தை எல்லாம்
இறக்கி மென்மனசை
பச்சத் தண்ணியிலும்
பதமாக்கி வெறு வெளியாய்
சாந்தம் எனும் ஒளியின்
சாட்சியமாய் ஆக்கிடினும்
உள்ளாடும் நினைவலைகள் ஓடி
உயிராற்றின்
கடைசித் துளியினிலும் கனக்கிறது,

இடைநடுவில்
ஏமாற்றப்புரை ஏறி எந்தன்
நெடும்பயணம்
இறக்கேலாச்சுமைகளினால்
இடிந்தாலும், விடைபெறுமுன்
என் பார்வைக்குட்பட்ட
ஏதோ ஓர் மூலைக்குள்
எட்டி முகம் காட்டி
ஓரவிழி நீர் நிறைய
குட்டி! உன்னினைவு
இப்பொழுதும் என்மனதை
தட்ட உடலெல்லாம்
தகிக்கிறது எனும்படியாய்

ஓர் பார்வை என் முடிவில் இனிக்காதா
என்பதையே
போகையிலும் எதிர்பார்த்து
போகின்றேன்...,

அதை விடவும்
நான் படித்த கல்லூரி
நடைபயின்ற நல்லூர் மண்
கூள் காய்ச்சிக்குடித்து
கும்மாளம் போடுகிற
காரைநகர் வீடு கடற்கரை மண்
எல்லாமே
வரிசைகளில் வந்து வந்து
போகிறது...

ஆனாலும்
பெற்ற வேதனத்தில்
பெரிதாய் எனை வளர்த்து
இற்று நானுடைந்து போகையிலும்
என்வழிக்கு
உற்ற துணையாய் இருந்து
ஒருங்கிணைந்து, சொந்தங்கள்
வைத்த சுருகுதடக் கயிறுகளில்
மனம் உடைந்தும்,

இதற்கெல்லாம் பதிலாய்
இவன் இருப்பான்
எனும் கனவு
முற்றாய் சிதறி என்முடிவில்
பெற்றவர்கள்
வெற்று வாழ்வாகிப் போவார்கள்
எனும் நினைவே
இறுதியிலும் என்நெஞ்சில்
அறைகிறது.

## 10. ஊன்றிவிட்டுச் செல்லுங்கள்..

உந்த வேடுவரின் கற்களுக்கு
எப்பேனும்
இந்த மாதிரியாய் தேன் கூடு
வரலாற்றில்
வெந்து வீழ்ந்தடங்கிப் போனதுண்டோ
தேனீக்கள்
நொந்து வீழ்ந்தாலும்
நூறொன்றாய்ச் செத்தாலும்
சந்து பொந்துகளில்
மறைந்திருந்த வேடரது
சங்குகளிற் போட்டுக் கலைக்காமல்
விட்டதுண்டோ..!

எந்தக்காலத்தில்
இப்படியாய்த் தேனீக்கள்
கையுயர்த்திக் கால் மடங்க
வீழ்ந்ததுண்டு..?இதன் பின்னால்
கல்லில் எரி நெருப்பை
கண் செருகும் ஓர் மருந்தை
பூசி அதை வீசும் பக்குவத்தை
எறி வீச்சை
யாசித்து யாசித்து
உலகெல்லாம் கையேந்தி
கூசாமல் ஓர் குலத்தை
அழித்தார்கள், இதையுலகு
பேசாமல் பார்த்துவிட்டு
இருந்ததுடன் அதன் மேலால்
யோசனையும் சொல்லிக்
கொடுத்ததடி, தேன் கூட்டில்

உலகினெரி கற்களெலாம்
ஒருமித்துப் பட்டதனால்
திலகம் போலிருந்த
தேன் கூடு திக்கிழந்து
தீயினெரி நாக்குகளிற்
தீய்ந்ததடி மற்றபடி
வேடுவரால் எந்தவொரு
விரல் நுனியும் வீழவில்லை
ஆனாலும்

அடைக்கதவாய் இருந்து
அர்ப்பணித்த தேனீக்கள்
விடைபெற்ற நாளிருந்து
வீட்டடையிற் கதவில்லை
வேண்டியவன் வந்துவிட்டும்
போகின்றான், தேனீக்கள்
கொடுக்கெடுத்துக் கொத்திக்
கலைக்காது என்கின்ற
தடித்திமிர் வேடனுக்கு
இருக்கட்டும் வீட்டுள்ளே

குழந்தைத் தேனீக்கள் தூங்குகிறார்
அவர் மேலே
காற்றோ அடைமழையோ
கடிக்கின்ற விஷயந்தோ
தோற்ற மன நிலையின்
துளியோ படாமலுக்கு
கீற்றுகளைக் கிழித்துப் பின்னி
ஓர் கதவை
மாற்றம் வரும் வரையில்
மறைத்திடுங்கள், அவர் வளர்ந்து
தோற்றம் பெற்றவுடன் திறப்பார்
கை உதறேல்..!

தேனாய் இருந்த வளம்
திருட்டுப் போய் விட்டாலும்
ஊனை உருக்கி
உயிர் கொடுத்து அதனுள்ளே
தேனைத் துளித்துளியாய்
தேடி வைத்த தேனீக்கள்
இறந்தும் இருளுள்ளும்
எங்கெங்கோ மறைந்தாலும்
பறந்தும் அதற்குள்ளால்
பாதைகளை ஊடறுத்த
சிறந்த மனத்தேனீக்கள்
சிலவுண்டு அவை மீண்டும்
பிறந்து வருவது போல்
வரக்கூடும்..!, ஏனென்றால்

ஏதோவோர் நூலிளையில்
இன்னும் அடை இருக்கு
பாதைகளில் எங்கும்
பரவிக் கிடக்கின்ற
விடியாத கனவில்
விழுந்திறந்த தேனீயின்
மடியாத வீர உரமுண்டு
அதன் மேலே
செடி ஒன்று வைக்க மாட்டாரோ..!
செழித்ததுவும்
விடியல் மணமுள்ள
பூப் பூவாய் வழி எங்கும்
கொடி போல பூத்துவிட மாட்டாதோ..!
அதன் வேரால்
உரமான தேனீயின்
உர மான எண்ணங்கள்
தரமான தேனாகத் தவளாதோ
பூவுக்குள்..!

விரைவாக இல்லை என்றாலும்
அக்காலம்
உருவாகும் மெதுவாக மெதுவாக
தேனீக்கள்
சிறிதாகச் சிறிதாகப் பெரிதாகி
அத்தேனை
வறிதான அடைவாயில் வார்க்கும்
பருவத்தில்
அடைமாறித் தேன் கூடாய் ஆகும்
இதற்காக

எது செய்யப் போகின்றீர் நீவீர்..?
உம் கையில்
செடியுண்டு நீருண்டு
நட்டூற்ற மனமுண்டோ..?
இடம் கொஞ்சம்
மனத்துண்டு ஆயின் இப்போதே
உரத்துக்கு மேலொன்றை
ஊன்றி விட்டுச் செல்லுங்கள்
ஆடு கடிக்காமல் அவதானமாகவுந்தான்
உரத்துக்கு மேலொன்றை
ஊன்றி விட்டுச் செல்லுங்கள்...

நரம்புக்குள் இழையாயும்
நாடிக்குள் துடிப்பாயும்
வரம்புடைத்து மேவிப் பாய்ந்தோடி
வழிகின்ற
வெள்ளத்துள் வெள்ளம் போல்
விழுந்தோடிப் புரண்டுருண்ட
பிள்ளை மனம் போன்ற
பெருங்காமத் தீயொன்றில்
கொள்ளை இன்பத்தைக்
குடித்தாடி வெறியுற்ற
கள்ளின் மண எண்ணக்
கன நினைவு கசிந்தின்று
மெள்ள என் நாசிக் குழிகளிலே
மீள்கிறது..

இன்று நத்தை போல்
இயங்காமற் கூட்டுக்குள்
சென்று நகராமற் கிடக்கின்ற
நெடு நாளே..!
அன்றின் இரவுகளில்
அவள் கரத்தைத் தொடுவதற்குள்
சென்று கூவென்று
சேவலினை அனுப்பி விட்டு
கன்றொன்றை விரைவாய்க்
கையினிலே தந்து விட்டு
நின்று நிதானித்து
நிசமான வாழ்க்கையினை
நன்று உறவாட
நான் நினைத்து முடிப்பதற்குள்
சென்று காற்றாகச்
சிதறிப் பறந்து விட்ட
என்றும் என் வாழ்வின்
இனிய நாட் பொழுதுகளே..
கன்றை அதன் தாயைக்
காணாமற் பிரிந்துள்ள
இன்றில் மட்டும் ஏன்
இமயம் போற் கிடக்கின்றீர்..?

## 11. வாழும் நாட்களில் நீளும் நாட்கள்..

ஒரு கூட்டுள் இருந்தங்கே
உறவாடும் நேரத்தில்
உருவத்தைப் போலிருந்த
ஓராண்டுக் காலத்தை
அருவத்தின் சாயை போல்
அரை நொடியில் கடத்தி விட்டு
அரை நொடியை இன்றேன் நீர்
ஆண்டாண்டாய் நீட்டுகிறீர்..?

எனக்கு அவள் சொல்லும்
எதிர்காலக் கீதையினை
நினைத்து ஏதோ நான்
நீட்டிக் கிடந்திடுவேன்
நான் சொல்லும் நாலைந்து
நாளைகளின் வார்த்தைகளில்
என் செய்வோம் எனச் சொல்லி
எப்படியோ இருந்திடுவாள்!
பட்டு அடிபட்டு
பதப்பட்ட மனசுகளோ
தட்டுத் தடுமாறித்
தங்களுக்குள் வார்த்தைகளை
கொட்டி இறைத்தேனும்
குளிர் காயும், தாபமுடன்

பேச்சுக் கேட்காமல்
பெருங் குழப்பம் செய்தபடி
தலை கீழாய் நிற்கின்ற
கருஞ்சுடரும், விறைத்தபடி
முற்கோபக்காரன் போல்
முட்டிவிட எத்தனிக்கும்
பால் மணம் மாறாமல்
படுத்தி சிணுங்குகிற
பரிதியின் கணப்புள்ள பனிவிரலும்
நாட் பிரமா..!
எப்படித்தான் தாங்கும்
இனியுமிந்தப் பிரிவுகளை
செப்படி வித்தையினிப் போதுமடா
சேர்த்து விடு..

## 12. மனைவி எழுதிய கடிதங்கள்..

வாழ்க்கைப் பயணத்தில்
ஒரு
வாழ்க்கையில் பயணம்.

விமான நிலைய விடை கூறலில்
இறுதியாக
கை காட்டும் தினவற்று
மகனின் கையைப் பிடித்து காட்டி
உன்னை வழி அனுப்பியது
எனக்கின்னும்
ஞாபகம் இருக்கிறது.

வீடு திரும்பிய போது
நீ நாளாந்தம்
போட்டுத் திரிகிற செருப்பு
அப்படியே இன்னும்
வாசலில் கிடந்தது
போடக் கால்கள் இன்றிப்
போனதை எண்ணுகையில்
வாடிச் சொரிகிறதென் கண்ணீர்.

இப்போது
உங்கள் மகன் அதை
கொண்டோடித் திரிகிறான்
மேசையில் வைக்கிறான்
கட்டிலில் வைக்கிறான்
சாமித் தட்டில் கூட
ஒரு நாள் வைத்திருந்தான்
செருப்பை ஏன் இங்கெல்லாம்
வைக்கிறாய் எனக் கையோங்கினால்
அப்பா எனக் காட்டி
அழவைத்து விடுகிறான்.
வாழ்ந்து சென்ற தடங்களின்
வெறுமையை வீசும்

கொடுமையைச் சொன்ன
பரதன் என்கிற
பாத்திரத்தைக் கூட
இவன் மூலம் தான்
நான்
இன்னுமின்னும் விளங்குகிறேன்.

உள்ளிருக்கும் உன்னுயிரின்
நினைவெண்ணி
எனக்கு நானே ஊட்டிக் கொண்டிருக்கும்
சோறிலும்
மார்பிலும் கழுத்திலும்
முகம் தேய்த்து
குறுகுறுக்கும் உன் மகனின்
கணகணப்பிலும் தான்
இன்னமும் கூட
என்னுடைய காலங்கள்
ஏதோ.. தவறி விழாமல்
தன்னுடைய காலத்தைக்
கடக்கிறது.

உனைப் பற்றிய நினைவுகளோடு
உறங்கப் போகையில்
சாமம் தாண்ட, வழமை போலவே
என்புகள் உடையும் படியாய்
என்னை
இறுகக் கட்டி அணைப்பாய்!
நானும் உன் மீது
காலைத் தூக்கிப் போடுவேன்
கட்டிலின் மீது
படாரெனக் கால் விழும்.
திடுக்குற் றெழுந்தால்
வெறிச் சோடிப் போய்க் கிடக்கும்
வெறுமையைப் பார்த்தெந்தன்
விரகப் பிரமை வீறிட்டழும்!

இனியும் வரா விட்டால்
"முலைகளைக் கிழங்கோடு பிடுங்கி
உன் மார்பில் பட வீசி எறிந்து
என் வெம்மையைத் தீர்ப்பேன்
முடியா விட்டால்
அவன் கட்டி இருக்கும் கோவணத்தை
கணச்சூட்டோடே கழற்றி வாருங்கள்
அதை ஒற்றியாவது
என் அழலைத் தீர்க்கிறேன்"
என்று
வாழ்ந்துணரா ஆண்டாளே
வாய் விட்டுக் கதற முடியுமென்றால்
ஒவ்வொரு அணு அணுவாய்
உணர்ந்துணர்ந் துன்னோடு
எவ்வளவு வாழ்ந்து பழகிய நான்
எத்தனை எத்தனை
கேட்டுக் கேட்டென்னுள்
'பித்தேறித் தாபம் பிதுங்க
வெடித்திருப்பேன்
செத்துயிர்த்து சாகின்ற வாழ்வு!
எனினும்
அத்தனையும் உனக்காக
அடைகாத்து வைத்துள்ளேன்'

நேற்றைக்கும் கூட
வழி அனுப்பல் ஒன்றுக்காய்
போயிருந்தேன்
நீ இருந்து போன
நீலக் கதிரை எல்லாம்
வேண்டுமென்றே எனக்காக
வெறிச் சோடிக் கிடந்ததடா !
துயர் நிறைந்த
பிரிவின் சொற்களைக் கொண்டு தான்
விமான நிலையத்தை
கட்டித் தொலைத்திருக்கிறார்கள் போல!

வந்து கொண்டிருக்கும்
ஆயிரமாயிரம் பயணிகளில்
நீ ஏன் ஒருவனாய்
இருந்திருக்கக் கூடாது..?

பூசை, பரிகாரம், விரதங்கள்
என்றெல்லாம்
ஓடித் திரிந்தலைந்து
அலுத்து விட்டேன் இதுவரையில்
சொன்ன கதை ஒன்றும்
சுவறவில்லை..
ஆனாலும்

நீ
வந்து போன பாதைகளின்
தடயங்களைப் பார்த்த வண்ணம்
ஏங்கிக் கிடக்கிறேன் நான்
இங்கு.

# 13. மெல்லக் கொல்கின்ற நோய்..

பருவம் வந்துள்ளே
பாதையினைத் திறந்து விட
பாவாடை இதழ் மூடி
பட படப்பில் தேனூறி
இடையாடிக் கொண்டிருக்கும்
இளைய பூ ஒன்றுக்கு
உடையுள்ளே நுளைந்து
உறிஞ்சித் தேன் குடித்து
மூழ்கி அதிலாடி
முடியும் வரை உறவாடி
காதல் செய்தபடி
கரு வண்டும்..

மூங்கிலதன்
நீளுடம்பில் நிறைந்திருக்கும்
நெடுங்காதல் இசையுணர்ந்த
காற்று அதன் மீது மோதும்
அனு தினமும்
மோத அதனுள்ளே
பொங்கி எழும் காதலிசை
போக வழி தேடி ஓடும்
பொறுக்காமல்
இதயச் சுவருடைந்து வீழும்
அதனூடு
உள் நுளைந்த காற்று உறவாட
காடெங்கும்
காதலிசை வழிந்து பாயும்
சலிக்காமல்
வளைந்தும் நெளிந்தும் தலையசைத்தும்
குளைந்த படி

மோக இசை எழும்பும்
மூங்கிலதும் காதலுற
முட்டி உரசுகின்ற காற்றும்..

பார்வையதன்
எட்டும் புலக்காட்சி இறுதியிலே
வான் மார்பை
கட்டித் தழுவுகின்ற போதில்
கடற் பெண்ணின்
உள்ளெழுமோர் மன அலைதான்
ஓடி வரும் கடலலையோ!
வான், கடலின் கலவியிலே
வழிந்தோடிப் போனவைகள்
கரைகளிலே வெண் நுரையாய்க்
கிடக்கிறதே!, நாளாந்தம்
கரைகளிலே நுரைகளினைத்
தள்ளியெனை வெறுப்பேற்றும்
கடலுக்கும் சுகித்திருக்க
வானிருக்கான்..

அதிகாலை
வேலைக் கென்றவனும்
வெளிக்கிட்டுப் போனவுடன்
ஊரெல்லாம் சுற்றி வரும் பகலும்
அந்தியிலே
அந்தக் கரையிலவன் வரும் போது
மெதுவாக
ஓடிச் சென்றவனை அணைத்துச்
சிறு நொடியில்
அவனாய் இரவாக ஆகிடுவாள்..

தனைச் சுற்றி
ஆயிரம் பேரிருந்து
அன்புருகப் பார்த்தபடி
காதல் மயக்கத்தில்
கண்களினை மின்னுவதால்
நினைப்பேறித் திரிகிறது நிலவும்

இதை எல்லாம்
பார்த்துப் பெருமூச்செறிந்து
படுக்கையிலே சுருளுகையில்
அடர்ந்த இருளோடும்
ஆழ் மௌனம் குலவுவதை
உடைந்தெரியும் மனதோடு
பார்க்கின்றேன்
இப்படியாய்..

எனைச் சுற்றி ஓடுகிற
இச் சிறிய உலகத்தில்
ஏதோ ஓர் துணைக் கரத்தில்
இறுக்கிக் கை கோர்த்தபடி
எல்லாமே சுற்றி வாழ்ந்தபடி
கடக்கிறது, எனக்கு மட்டும்
நாலு சுவரும்
நண்பரற்ற பனிக்குளிரும்
இறந்தாலும் தெரியாத இருப்பிடமும்
முன்னே ஓர்
என்னோடு நான் பேசும்
கண்ணாடி, கவிதையென
இவை தவிர எனக்கொன்றும்
இல்லையடி, இப்போதில்

மெல்ல எனைக் கொல்லும்
தனிமையெனும் ஓர் பெரு நோய்
வெறுமையினை என்னுள் விதைத்து
என் உயிரின்
மூளையினை உரித்துரித்துத் தின்கிறதே
நார் நாராய்
மூளையினை உரித்துரித்துத் தின்கிறதே..

# 14. சாவினால் சுற்றிவளைக்கப்பட்டவர்கள்..

கடவுளும் கையினை உதற உலகமும்
கத்தியத் தீட்டிக் கையினிற் கொடுக்க
திடமாய் இருந்த வாழ்வின் விடுதலை
முடமாய்ப் போனது அன்பே..

இந்தக் கடல்தான் நாம்
எழுந்தன்று நின்ற கடல்
இந்தக் கடல்மடி தான்
எம் வாழ்வைச் சுமந்த மடி
இந்தக் கடற்கரை தான்
எம் வாழ்வின் இறுதி வரை
வந்து வழி அனுப்பி
வாய் விட்டு அழுத கரை
அன்றிந்தக் கடற்கரையில்
அடித்து வந்த அமைதி அலை
இன்றுந்தான் அடிக்கிறது
எவர் சொன்னார் இல்லையென்று..?
மா சனத்தின் மனதறுந்து வீழ்ந்து விட்ட
மண் மேலே
மயான அமைதி அலை தன் மார்பில் அடிக்கிறது
இன்றுந்தான் அடிக்கிறது
எவர் சொன்னார் இல்லையென்று..?
மயான அமைதி அலை தன் மார்பில் அடிக்கிறது..
பொன்னாய் இன்றும்
பொழிகின்ற இந் நிலவே
அந் நாளும் எம் முன்றில் நின்றதடி
இதைக் காட்டி
எத்தனை கதை கதையாய்
எமக்கெங்கள் தாய்மார்கள்
சத்துணவோடூட்டி
சதை பிடிக்க வைத்திருப்பார்
அத்தனை சதையும்
இதோ இந்த நிலா முன் தான்
பித்தளைக் குண்டறுக்கப்

பியந்தறுந்து வீழ்ந்ததடி...
இப்போதும் இந் நிலவே
எம் வானில் நிற்கிறது
எடுத்தூட்டி விடுவதற்குத் தாயும்
ருசி பிடித்து
இன்னுமெனக் கேட்பதற்குக்
குழந்தைகளும் இல்லையடி
தாயும் குழந்தையுமாய்
தப்பித்து எங்கேனும்
தகரக் கொட்டைகயுள் வாழ்ந்தாலும்
நிலாக் காட்டி
ஆக்காட்டு என்று சொல்லி
ஊட்டுதற்கும் அதை ரசித்து
அன்பாகத் தலைதடவி விடுவதற்கும்
அவளிடத்தில்
தெம்பான வார்த்தை எல்லாம்
தீர்ந்தாலும் தீத்துகின்ற
அன்பொழுகும் கை கூட
அறுந்தெல்லோ போனதடி...

பதம் பார்த்துப் பறித்து உண்பதற்கு யாருமின்றி
பழமெல்லாம் கனிந்தழுகி வீழ்கிறது
மேனியிலே
இதமாய் ஏர் முனையை இழுப்பதற்குக் கைகளின்றி
எங்கும் நிலம் வெடித்துப் பிளக்கிறது
வீடழிந்து
காடெழுந்து படர்ந்து கனக்கிறது
பேச்சறுந்து
உலக வரைபடத்தில் இல்லாத நிலம் போல
ஒதுக்கப்பட்டுள்ள ஓர் நிலத்தில்
எஞ்சியுள்ள
இழக்க இனி ஏதும் இல்லாத மக்களையும்
இன்னும் ஏதுமங்கு மீந்திருந்தால்
இழக்க வைக்க
அந்நியன் மிகுந்த அவாவோடியங்குகிறான்
பன்னாட்டு நலனெம்மில்
பாய் விரித்துப் படுக்கிறது..

இத்தனை காலமாய் ஊட்டி வளர்த்த
அத்தனை உயிர்களின் ஆசையும் கனவும்
இத்தரை மீதுதான் வீழ்ந்தது உரமாய்
சத்தமே இன்றிக் கிடப்பினும் உள்ளே
சத்து நிறைந்து தான் கிடக்குது
பூமியில்
ஒவ்வொரு தேசம் விடிவதற்கென்றும்
ஒவ்வொரு காலம் உள்ளது, அன்று
எவ்வளவு இந்த உலகம் எம்மை
இறுக்கி அமுக்கி வைப்பினும் விதைகள்
அறுத்து விலங்கை உடைத்து நிமிர்ந்துமே
செழித்து வளர்ந்திடும் என்கிற
பூமியின்
அழிக்க முடியாத நியம உண்மையை
இன்னும் என் மனம் நம்புது அக்காலம்
என்னுடை வாழ்வுக் காலத்துலெழுந்தால்
எங்குதான் தேடுவேன் வார்த்தையை
அன்பே
இந்தப் பிறப்பின் பேறினைச் சொல்ல

## 15. நேரம் உறைகின்ற காலம்..

இரவென்ற ஓர் நிலையும்
இருட்டறுந்து கிழிந்து விழும்
ஒளி வண்ணம் போற் தோன்றும்
ஓர் பகலும் அது படர்ந்து
ஆயிரம் சந்ததியைக் கடந்தும்
ஆழ் மனதில் அழியாமற் படிந்து
மயக்கம் வழிகின்ற
மாலை சாய்ந்து விழும்
மருள் நிலையும் என் வாழ்வின்
காலக் கணக்கின் கண்களுக்கு
எந்த விதக்
காட்சிகளும் அதன்
கலங்கல் நிறமுமற்று
சாச் சொரியும் போது விழும்
சாயை மட்டும் தெரிகிறது

நிமிடங்கள் அறுந்து
மணி நாட்கள் அறுந்தறுந்து
மாதம், வருடங்கள் அறுந்து விழ
என் வாழ்வு
நேரங்கள் அற்ற
நிலை உறைந்து போயுள்ள
காலங்கள் நோக்கிக் கடக்கிறது

ஏனெனிலோ
உணவுண்ண வருவாயா
உறங்கி எழுந்தாயா
ஏனிரெண்டு நாளாக
எழும்பாமல் படுத்திருந்தாய்
நாளைக்குப் பின்னேரம்
நாலரைக்கு மேலாக
நானுன்னை வந்து பார்க்கட்டா
இல்லையெனில்
நீ என்னைப் பார்க்க வருவாயா
இப்படியாய்
எனை நோக்கிச் சும்மா
ஏதேனும் ஓர் வார்த்தை
ஏறெடுத்தும் கேட்பதற்கு
இங்கே யாருமில்லை

எல்லோரும் தூங்குகையில்
என் கண்கள் விழிக்கிறது
அவர் விழித்தெழுகையிலே
அயர்ந்துறங்கிப் போகின்றேன்
உணவுண்ணல் மற்றும்
எல்லாமே இப்படித் தான்
என்னோடிருக்கின்ற மனிதர்கள்
இயங்குகிற இயல்பு வழமைக்கு
எதிர்மாறாய் என் போக்கு
தலை கீழாய் நடந்து செல்கிறது

தினந்தினமும்
அடித்துடைந்த கால்கள்
அணு அணுவாய்க் கொதித்தாலும்
உடைத்துத் தெறிப்பது போல்
உள் நெஞ்சுள் வலித்தாலும்
எனக்கிங்கு துணையாக நானே தான்
அதனாலே
எனைச் சுற்றி இருப்பவைகள்
எனக்குத் தெரிவதில்லை
காலக் கணக்கெல்லாம்
மனக் கண்ணில் புரிவதில்லை
காட்டில் வளர்கின்ற மரம் போல
என் வாழ்க்கை
நாட்டில் நடந்து திரிகிறது

இப்படியே
எல்லைகள் ஏதுமற்று
இயல்பாய்க் கிடக்கின்ற
பிரபஞ்சப் பெருவெளியின்
பெயரற்ற வீதிகளில்
மனிதர்கள் தங்களது
மனம் கொண்டு போட்டிருக்கும்
புறத் தடையை எந்தன்
புறங்கையால்த் தட்டி விட்டு
நேரம் காலமற்ற
நிகழ்கால வெளி நெடுக
மூளை மனம் நின்றுவிடக்
கால் நடந்து செல்கிறது..

## 16. 'சா' பற்றி எண்ண(ச்) சஞ்சலங்கள்..

என் பின்னால் சா தொடர்ந்து
இழுபட்டு வருகிறது
பிறந்தது முன்னிருந்து
பிறப்பறுக்க வென்றெந்தன்
பின்னாலே சா தொடர்ந்து
இறப்பதற்கு வருகிறது,

நான் பெரியாள் 'நான்' என்று
நாட்டாண்மை காட்டையிலும்
பதவிக்கதிரை புகழ் பகர்கையிலும்
இழவொன்றில்
அனாவசியச் சாவென்று
அலசையிலும்,பிடரியின் பின்
சந்தர்ப்பம் பார்த்தபடி
சாலத்தில் நிற்கிறது,

உள் உருக்கும் உடல் நோயில்
ஓடுகின்ற வாகனத்தில்
மெல்ல மெல்ல குறி தேரும்
குழல் இரும்பு விசைநுனியில்
முக்கியமாய் என் வாயில்
வாழ்க்கை வரைந்திட்ட
வண்ணக் கனவுகளை
வழித்துத்துடைத்தபடி வருகிறது
வருகிறது..

நான் பிறக்கும் போதே
உடன் பிறந்து போகையிலும்
ஒன்றாக உடன்கட்டை
ஏறிடுவேன் என்பதுவாய்
எனது சகபயணி ஆகிச் சா வருகிறது

ஆயிடினும், ஊழிவரை
ஆண்டு என் வாழ்வு
அனுபவிக்கு மெனுமெண்ணம்
அடிக்கடி என் நடத்தைகளில்
தெரிகிறது, மனுசமனம்
தொல்லைகளைத் தோண்டித்
தோளாக்கிச் சுமைகனத்தும்
இருப்பென்றால இன்மை யென்றறிந்தும்
இருக்காமல்
ஓடுப்பட்டெங்கும உலைகிறது.
ஒரு கணத்தில்..

விடை பெறுதல் பற்றி
வீரர்கள் வரலாறு
உடைபட்டோடும் காலக்
காட்டாற்றில் அடிபட்டு
தடையங்களே இன்றித்
தாழும் வகை பற்றி
ஒளிப்படங்கள் போல் முன்னால்
ஓட...
இமைப்பொட்டில்
உண்மைத் தீ பற்றி
ஓங்கி எரிகிறது...

## 17. சன்னம் வரைகிற வட்டம்..

விரலொன்று விசை ஒன்றைத் தட்ட
விர் என்று
விரைகின்ற குண்டொன்று மார்பொன்றை
துளைத்துப் பாய்கின்ற
துவாரத்தின் வட்டத்துள்
ஓர் வாழ்வு மட்டுமா
உடைந்து போய்க் கிடக்கிறது..?

பெயரற்றுக் கிடக்கின்ற
பிள்ளையைப் பெற்றவளை
பெயர் சொல்லப் பெற்ற
பெற்றவரின் பெருங்கனவும்,
கையொன்றில் அவளைக்
கவனமாய்ச் சேர்க்கும் வரை
கண் துஞ்சாதவர் உழைத்த
கடின உழைப்பதுவும்,
அதன் பின்னவழும் தன்
அன்பான துணையோடு
வாழ்ந்துணர்ந் தனுபவித்த
வசந்த காலங்களும்,
அழகிழந்து போனாலும்
அது தான் தன் அழகென்று
உள மகிழ்ந்து இவனும் உள்
உதைக்கச் சுமந்ததுவும்,

பெறப்பட்ட பாடும்
பின்னே வளர்ப்பதற்கு
இரவுத் தூக்கத்தை
இழந்ததுவும், அனுதினமும்
தசை வளர்வைப் பார்க்க
தவித்த மகிழ்வதுவும்,
தனக்கு மேல் வளர்ந்து
தளிர்க்க, மாப்பிளையாய்
மனக் கண்ணால் பார்த்து
மகிழ்ந்ததுவும், எல்லாமே
ஓர் குண்டு பாய்ந்து

உள் நுளைந்து சென்று விட்ட
மார்பின் வட்டத் துவாரத்துள்
மரித்துப் போய்
அர்த்த மற்ற ஒன்றாகி
அலறித் துடித்த படி
பெரும் புண்ணாய் மார்பில்
பிளந்த வட்டக் கரை மேலே
அலைந்து அதைச் சுற்றி
அனுங்கித் திரிகின்ற
ஈக்களைப் போல
இவருலகும் அதைச்சுற்றி
சாக்களை கொண்டதிலே
சரிகிறது, இதுவெல்லாம்

விசையழுத்தும் அந்த
விரல்களுக்குப் புரியாதோ
ஒரு வேளை
மூளையும் மனமதுவும்
முழுதாகத் தூங்குகிற
வேளையைப் பார்த்துத் தான்
விரல் விளையாடுகுதோ?

இன்னொன்று
வீழ்ந்த இவன் இனிமேல்
விழிக்கான் என்றறியாமல்
விளையாடித் திரிகின்ற
இவன் குழந்தை ஓரத்தில்
ஆழ்ந்த பெரு மூச்சோடு
அழுவோரைப் பார்த்த படி
அனாதை என்கின்ற
அநாதரவு வட்டத்தை
தானறியாமலேயே
தனைச் சுற்றி வரைந்த படி
எனைச் சுற்றிச் செல்கிறது
என்பதனை இப்போதில்
இதிலே எழுதிவிட
இயலவில்லை என்னாலே..

யோகர் எனும் சித்தன்
யூகித்துணர்ந் துரைத்த
பாகுத் தமிழ் மொழியின்
பதிவே! கால நடை
ஆகி அதற்கேற்ப
அசைந்தோடிச் சூசகமாய்
சொல்லும் வகை உணர்ந்த
சுவையே! தமிழ்ச் சிந்தனையை
ஆங்கிலத்தில் அசைபோடும்
அறிஞ! நாம் அறிய
அற்றைத் தமிழிருந்து
அருங்கலைச் சொற்கள் வரை
இற்றைப் படுத்துகின்ற
எமதிருப்பே! எமை விட்டு
வானேகிப் போய் விட்டீர்
வரலாறாய், எம் பாடு
தேனில்லா அடையாகத்
தேம்பிக் குமைகிறது

## 18. காலம் ஆகினீர்..

- பேராசிரியர்
கா.சிவத்தம்பி

என் வாழ்வுக் காலத்துள்
இனி என்றும் உங்களைப் போல்
அன்புளமும் அறிவும்
அரவணைப்பும் நிறைந்தூறும்
எந்த ஒரு மனிதனையும்
இனிக் காண முடியாது
நீங்கள் போய் விட்ட
நெடு வெளியை நிரப்புதற்கு
நாங்கள் அறிந்த வரை
நம்மினத்தில் யாருமில்லை
உங்கள் காலத்தில்
உமைத் தெரிந்து உம்மோடு
எங்களுக்கும் வாழக் கிடைத்ததென்ற
ஓர் நிறைவே
உள்ளே மூச்செங்கும் எழுகிறது
பிதாமகரே..

எங்கள் செல் நெறியை எமக்கான வழித் தெளிவை
உங்களது உரையாலும் உணர்ந்தோம் எங்களது
வரலாற்றின் மைல் கல்லே வாழ்வீர் நும் புகழை
உரையாற்றும் எங்கள் உலகு.

## 19. கால வல்லரசின் கையில்..

உன் மத்தம் தலைக்கேறி
உயிர் கொதித்து உடல் முழுதும்
என்னென்று சொல்லேலா
இதமெழவும் கவி விந்து
வீசிப் பறக்கும்
விதிக் காலவெளியினிலே
ஓசைப் படாமல் ஒன்று மட்டும்
உள்ளிறங்கி
கால வாசகப் பெண்
கருவினிலே உரு ஆகும்

மற்றவைகள்
கால் வழிந்தும் கழுவுண்டும்
போகிறது ஆனாலோ
அவைக்கும் உயிருளது
ஆயினும் ஏன் காலப் பெண்
தெரிந்தெடுத்துச் சிலவற்றைச்
சுமக்கிறது மற்றவற்றில்
உயிர்த் துடிப்புகண்டும்
உள்ளெடுத்துச் சுமந்துயர்த்தி
வியப்பாக வெளியுலகில்
காட்டாமல் வெறுக்கிறது

தன்னிடத்தில்
முந்தி வந்து முட்டியுள்ளே
பாய்ந்தவை தான் ஊழியதன்
அந்தம் வரை செல்லும்
அசைக்கேலா உயர்வென்றும்
மற்றவைகள்
ஆயிரத்தில் ஒன்றாக
அவரவரின் விருப்புக்கு
பாயிரமாய்த் தெரியும் என்கிறதே..
அவற்றுள்ளும்
காலம் தான் பெரிதாய்க்
காட்டுகிற கவியைவிட
காத்திரமாய்ப் பல இருக்கு
ஆனாலும் ஏன் காலம்
ஒன்றிரெண்டை மட்டும்
உயர்த்திப் பிடிக்கிறது?

ஆழ்ந்த பொருட் சுவையும்
அழகான நுண்ணுணர்வும்
சீர்ந்த ஓசைத் தெளிவும்
கூருணர்வும் சேர்ந்தபடி
தேர்ந்த கவிதந்த
எத்தனையோ பேர் இன்று
மெல்லப் பின்னாலே
மிதந்து வந்த விந்தைப் போல்
அள்ளிக் கழுவுண்டு போய் விட்டார்
சுழியன்கள்
அந்தளவோ இல்லை
அதன் கீழோ எழுதிடினும்
உலகில் கவியாகத் திரிகின்றார்
ஆயின் அரசியலில்
கெட்டித்தனமுள்ள கவி விந்தா
இவ்வுலகை
தட்டித் தன் முகத்தைக் காட்டும்
இல்லையெனில்
கால வல்லரசு

திட்டமிட்டுத் தன்னுடைய
கோளப் பிராந்திய நலன்களுக்கு ஏற்றபடி
ஆளைத் தேர்ந்தெடுத்து
அடையாளம் காட்டிடுமோ..?

ஐநூறாய் ஆயிரமாய்க்
கவிஞர்கள் உலகிருந்தும்
பத்துப் பதினைந்தே
உலகத்தின் கண் முன்னே
உயரக் கொடியாகப் பறக்கின்றார்
பின்னுள்ள
ஆயிரத்துள் இருக்கும் ஐம்பது பேர்
முன்னுள்ள
பத்துப் பதினைந்தின் தோளொக்கும்
ஆனாலும்
கல்லில் பொறித்தது போல்
காலம் தான் சில பேரை
நில் என்று முன்னே
நிறுத்தி வைத்துப் போகிறது

வில்லங்கமான
கால வில்லின் நாணொலியில்
சொல்லங்கமாகச்
சுடர் மிளிருமிடம் பிடிக்க
பல்லங்கமாகப் பிரிந்து செலும்
பாதைகளில்
சொல்லுங்கள் எது தான்
சோதி மிக்க வழி என்று.?

## 20. ஊடுருவும் பேருறவு..

இரவு எப்போதுமே
உடுக்காய் ஆகி விடுகிறது
அதன் தோலாய்
என்னிதயத் தசை நார்கள்
உன்னினைவு விரல்கள் அதில்
உருள உருள நீ
அருகிருந்த காலங்களின்
வாசனை
மனசை உருவேற்றுகிறது

நல்லூர் மணி ஒலியின்
நாதம் போல்
உன் வாயின் வெண்கல நாசியில்
மேலும் கீழும் நாவு தட்ட
எழும் அதிர்வலையால்
உதடு பிரிந்தவிழ்ந்த
நேசத்தின் சொற்கள்
தூரத்திருந்தாலும்
ஒவ்வொரு மயிர்த்துளை வழியும்
ஓங்கார ஒலிப் பிழம்பாய்
ஊடுருவி உள் நெஞ்சுள்
அதிர்கிறது

என் பாசத்தைப் பலி கொடுக்கும்
உன் மடியாம் பலி பீடம்
ஆசைகள் ததும்பி வர
அவிழ்க்கும் கணச்சூடு
ஆண்டுகளை ஊடறுத்தும்
ஆயிரமாய் மைல் கடந்தும்

ஊசிக் குளிர்தன்னை
உட் குடைந்தும்
ஏகாந்த மன வெளியில்
இருக்கும் என்னுடைய
கழுத்தாங் குத்தியினில்
கண கணென்று படுகிறது

உன் நினைவின் நிழலில்
இழை எடுத்து
தன்னை வனைந்துள்ள இவ்விரவில்
நானும் ஓர் நூலாய்
உள் நுளையப் பார்க்கின்றேன்
நிசத்தோடு கலந்து விடும்
நிமிடங்கள் வருமட்டும்
நிழலோடு கலந்து விட நினைத்து
நானும் ஓர் நூலாய்
உள் நுளையப் பார்க்கின்றேன்

ஓராடை தன்னுக்குள்
உயிரிரெண்டும் ஒன்றாகி
நீராடி நனைந்த நினைவை
நிழலோடு
போராடிப் பெற்று விடப் பார்க்கின்றேன்

நின் நிழலே இரவாக
நீளிரவே உடுக்காக
அந் நிலையில் நான் மூழ்கி
ஆழிருட்டில் ஒளி கண்டு
அதற்குள்ளே நானிறங்கி ஆட
அறை முழுதும்
தொம் தொம் தொதொம் தொம் தொம் தொதொம்
தொம் தொம் தொதெம் தொம் தொம்

## 21. நினைவின் கனவு நீள்கிறது..

குளிரின் அம்புக் கதிர் உடலை
குத்தித் துளைக்கா திருக்கவென

அறையுள் ஏகும் காற்று வழி
அனைத்தும் இறுக்கி அடைத்து விட்டு

பஞ்சுப் போர்வைக் குளிருக்குள்
பதுங்கிப் படுத்து உடல் மூட

நெஞ்சாங்குழியின் அடியிருந்து
நீளும் மூச்சாய் நாசி வழி

மண்ணின் மணமும் நினைவுகளும்
மதர்த்து எழுந்து அறை நிறைந்து

எங்கும் போக முடியாமல்
இறுகி அடர்ந்து என் கனவுள்

நினைவாய் ஏற மண்ணவளே
நீளும் பிரிவுக் காதலெனுள்

உன்னில் ஓடி விளையாடி
உருண்டு திரிந்து உன்னுடலின்

பொன்னின் துகள்களெனில் ஒட்ட
போற்ற வாழ்ந்த வாழ்க்கையினை

எண்ணக் கண்ணின் நரம்பெல்லாம்
இதயச் சிவப்பாய் மாறுதடி!

உன்னில் பிறந்து உனில் வளர்ந்து
ஒன்றாய்க் குலவிக் களிக்கையிலே

உந்தன் காதல் புரியவில்லை
ஒன்றும் பெரிதாய்த் தெரியவில்லை

உன்னை உரைந்து வானூர்த்தி
உயரப் பறக்கத் தொடங்கையிலே

ஜன்னல் வழியால் உனைப் பார்க்க
யாரை நோவேன்? உன் உருவம்

சின்னக் குட்டிப் பொருளாக
சிதறச் சிதற என் அன்பே

உன்னைப் பிரியும் நினைப்பெனக்கு
உறுத்திக் கொல்லத் தொடங்கிற்று

தூரத் தூரப் போகத்தான்
தொடுமோ அன்பு துளைத்திடுமோ!

பார்க்க ஏலாப் பொழுதிற்தான்
பாசம் மேலும் வளர்ந்திடுமோ!

தேசப் பளிங்கே திசை முகமே
தெவிட்டாக் காதற் தேன் குடமே

உன்னோடிருந்தே உன் மடியில்
உயிரை விடவே நான் நினைத்தேன்

என்னால் முடிந்த மட்டிலெல்லாம்
இதற்காய் முயன்று நானுழைத்தேன்

வேசைக் காலம் விளங்காமல்
விலக்கி இழுத்து எனைப் பிரித்து

ஓசை அற்ற ஒரு காட்டில்
உறையும் பனியில் எறிந்துளது

உழன்று திரிந்து இம்மண்ணில்
உயர வளர்ந்து நிமிர்ந்தாலும்

உந்தன் மடியின் ஓர் கரையில்
ஒதுங்கிச் செடியாய் வாழுகிற

சொந்தச் சுவையின் கொடுப்பனவு
வந்த இடத்தில் வருமோடி?

என்றோ ஒரு நாள் எனக்கான
இயங்கும் தளமும் உருவாக

காட்டை வானைக் கிழித்தோடி
கடலை மேவி வருவேன் நான்

போகும் போதில் சிற்சிறிதாய்
போனாய் மீண்டு வரும் போதோ

அகன்று விரிந்து அழகாக
அணைப்பாய் என்னை,ஏறுகையில்

ஓடு தளத்தின் இரு கரையும்
ஓடி என்னை எதிர்த் திசையில்

தாண்டிப் போன மரங்களெல்லாம்
மீண்டும் இறங்கி வரும் போது

கடைசிக் காட்சி தந்தமரம்
கையைக் காட்டும் முதல் நின்று

உன்னில் உரஞ்சிப் பொறி பறக்க
ஓடி இறங்கும் நாளதனை

எண்ணி எண்ணி ஒவ்வொன்றாய்
இழுத்து மூச்சை விடுகின்றேன்

கனவின் நினைவுக் கண்களுக்குள்
நினைவின் கனவு நீள்கிறது...

## 22. திருகும் மனமும் கருகும் நானும்.

எடுத்ததற்கெல்லாம் இப்போ
இடிந்துடைந்து நெகிழ்ந்துருகும்
குழந்தைத் தனமான மனசே கேள்..!
பூவுலகில்
ஓடும் நீர் மேலே ஒரு முறைதான் மிதிக்கேலும்
வாடும் மனசெனினும் வழி நீள பழகி விடும்

காலம் சிரஞ்சீவி மலை கையில் வைத்தபடி
ஞாலம் முழுவதுமேன் நடந்தோடித் திரியுதடி...?
ஞாபக மறதிக்கும் நம் வலிக்குப் பூசுதற்கும்
தாபத்தில் துடிக்கும்
தளிர் மனசை விறைக்க வைத்து
கிடைத்ததனில் வாழப் பழக்குதற்கும்
அது கையில்
விடையென்றில்லாத
விடை மருந்தை வைத்திருக்கு
விடையிதுவா இல்லை,
வீண் பேச்சு எனச் சொன்னால்
உடை மாற்றிப் போவது போல்
உடம்பு, அதற்கென்ன
விடைத்தெரிவு வேறு கிடக்கிறது..?

என் கையில்
உன் வாழ்வுக்கெனத் தந்த
ஓர் பத்து விடைகளிலே
நன்றாகப் பார்த்து
நல்லதனைத் தேர்ந்தெடுத்தே
உன் கையிற் தந்தேன் உருப்படியாய்
இது பற்றி
என்னிடத்தில் ஏதும் கேட்காதே
விடைச் செடியின்
விதை என்றோ வந்து வீழ்ந்ததென்னில்
அதன் தன்மை
சதைப்பிடிப்பு, வளர்ச்சி, சாதுரியம்
என்பதெல்லாம்
விழும் விதையினுள்ளிருந்து
வந்தது தான் நானாக
எழும் செடியில்
ஏதும் மாற்றத்தைச் செய்யவில்லை
உழுது நீர் பாய்ச்சி
உரமிட்ட மண்ணொன்றில்
விழுந்தாய் விதையாக எங்கிருந்தோ
மண் தன்மை
செழித்தெழும்பும் செடியின்
சிற் சிறிய இயல்புகளில்
ஒழிக்கேலா உருவத்தை ஊற்றி விடும்
அது கூட
காலமோ அந்தக் கரு மண்ணோ
வடித்ததல்ல
தூலமாய் இருக்கும் துவக்கத்தின்
கையொன்றே
ஞாலப் பரப்பின் நடை முறையை
தன் விருப்பில்
காலமாய் மாற்றி வைத்துளது
மற்றபடி

விதைசெய்தல் விதைக்குள்ளே
வேண்டியதைப் பூட்டி வைத்து
பொதி செய்தல்
என்பதெல்லாமதன் வேலை
விதை வீழ
அதற்குள்ளே அழகாக ஆழச்செதுக்கியுள்ள
அவ்வவ் விதைகளகது
ஆற்றல்களுக் கேற்றபடி
அவற்றை வழி நடத்திச் செல்வதுதான்
என் வேலை
இவற்றை விட ஒன்றும் நானறியேன்
இன்னொன்று,
நிலாவைப் பார்த்தபடி
நீ நடக்க அது உந்தன்
கலாபக் காதலியாய்
கை நீட்டித் தொடர்ந்து வரும்,
என்றைக்கும் அது உந்தன்
பின்னாலே வருவதில்லை
எண்ணுகிறாய் உன் மனத்தால் அப்படியாய்
அது போல
நானும் ஒரு போதும் நகர்வதில்லை
என் மனசைக்
கோண ஒரு போதும் விடுவதில்லை
என்னிருப்பில்
இருந்த படியே தான் உங்களினை
இயக்குகிறேன்
வருந்தி நீவீர் தான் வருகின்றீர்
போகின்றீர்

காலம் நான்
என்றும் கடுகளவும் அசைவதில்லை
கருமச் சிரத்தையினால்
கண் கூட இமைப்பதில்லை

ஆதலினாலென்
முன்னால் அழுதழுது
கேள்விகளை அடுத்தடுத்துக் கேட்காதே
என்ற படி
தலை கோதிப் போனதடி காலம்
என் செய்வேன்

உலை கொதிக்கும் கேள்விகளை
எப்போதும் கேட்கின்ற
மனமே என் மனையாளே மாதரசே
உன்னுடைய, மனையாளென்கின்ற
பெயற் குணத்துக்கேற்றபடி
எனையாள நினைக்காதே ஒரு போதும்
எடுத்ததற்கும்
என் மேலே பாய்ந்து எரியாதே உன்னாலே
கேட்க முடியுமெனில்
துவக்கத்தை தொடக்கி வைத்த
அந்தத் தூலத்தின்
அலகுடைத்து கை முறுக்கி
நாலு கேட்டுக் கொள் நாள் முழுக்க
அதை விடுத்து
உள்ளேயே முடங்கிக் கிடந்த படி
முடியாமல் மூச்சிழுத்து விடுவதற்கே
முக்குகிற என்னிடமேன்..?

எத்தனை கேள்வி விசாரணைக்கென்று தான்
என்னாலே பதில் சொல்ல இயலும்..?
கண்ணைப்பார்..
கட்டிச் சிவப்பாகக் கலங்கிப் போய்க்கிடக்கிறது
விட்டு விடு என்னை
வீண் கேள்வி தினம் கேட்டு
பொட்டென்று போவதற்கு வைக்காதே
என் தோளை
கட்டிப் பிடித்தழுது கொல்லாதே
போ மனமே..
விட்டு விடு என்னை ..

# 23. எனது நீ..

அலை போல மனது நான்
கரை போல உறவு நீ

இமை போல பறவை நான்
எழுகின்ற நினைவு நீ

கரை தேடும் படகு நான்
துறையாகும் நிறைவு நீ

இலையான கீற்று நான்
கிளையான காற்று நீ

நிழலாக உனது நான்
நிஜமாக எனது நீ

எதுவான போதிலும்
அகலாத நண்பனே..!

விழி உள்ள மட்டிலும்
விலகாத விம்பமே

மொழி போல வாழ்விலே
ஒளியான பந்தமே

உயிர் விட்டுப் போகினும்
உதிராது நண்பனே
அயராது நாம் கொண்ட
நேசம்

உடல் விட்டுப் போயினும்
மறக்குமோ உயிருக்கு
உடல் மீது தான் மொண்ட
வாசம்..

## 24. ஓடிப் பறக்கிறது காலம்..

கண் முன்னே காலம்
ஓடிப் பறக்கிறது
நேற்றுத்தான் பள்ளியால்
வந்தது போல் இருந்தாலும்
பதினைந்து வருடங்கள்
பறந்தோடிப் போயிற்று,

துப்பாக்கிக் குண்டாயும்
ஷெல்லாயும் எமைக் கடந்தும்
நிக்காமல் வீசும் நிகழ் காற்றில்
எம்மோடு
ஒன்றாய் உடன் வந்த
எத்தனையோ தோழர்கள்
விடை கூடச் சொல்லாமல்
விதையாகிப் போனார்கள்
காற்றுக்குள் சிக்காத காற்றாக
எப்படியோ
கூற்றுவனைச் சுழித்தோடித்
திரிந்தோம், இதற்குள்ளே

நீர்வேலி அரியாலை மீசாலை இப்படியே
ஊர் வேலி எல்லாம் உரஞ்சிக்
கை நிறைய
காதல் வழிந்தோடத் திரிந்திருந்த
காலமெல்லாம்
கைகளுக்குள் சிக்காத காற்றாகப்
போயிருச்சு

மண்ணுக்காய் இப்படியோர்
மல்லாட்டம் நடக்கையிலே
சிண்ணுக்காய் வாழ்ந்து
சிதழூறிச் சாகாமல்
புண்ணாகிப் போயெங்கும்
புரையோடிப் போய்க்கிடக்கும்
மண்ணுக்கு நாமும்
மருந்திடுவோம் என எண்ணி
அவன் கண்ணுக்குள் அகப்பட்டு
கதி கலங்கிப் பொறி சிதறி
விண்ணுக்கு அவன் என்னை
அனுப்பியும் விண்ணோர்கள்
உள்ளே விட என்னை ஏற்காத
காரணத்தால் தமிழ் நாட்டு
மண்ணுக்கு வந்து
தவண்டோடிச் சிறை இருந்து
எப்படியோ..
அரை றாத்தல் பாண் வாங்க
ஆறு கிலோ ஆடையினை
சிரைச்சிழுத்துக் கட்டிப் போம்
சிங்கார தேசமொன்றின்
நரை பிடித்த தீவொன்றில்
நானொதுங்கிக் கிடக்கின்றேன்..

விறைக்கக் காற்றடிக்கும்
அட்லாண்டிக் கடலலை போல்
விறைத்துத் தலை இறுக
அடிக்கிறது நினைவலைகள்

ஐந்தாண்டோ இல்லை அதன் பிறகும்
ஐந்தாண்டோ
எப்போது ஊர் போவேன்
என்பதுவே எனக்கிருக்கும்
இப்போதைக்கான ஓர் கேள்வி

என்றாலும்
எப்பேனும் ஓர் நாளில் நான்
போகையிலே ஓடி வந்து
வா தம்பி என்று வாசலிலே
கொஞ்சுதற்கு
அப்போது யார் இருப்பார்
என்பதனை எண்ணுகையில்
மூச்சுத் தீப்பற்றி முட்டி உள்ளே
மூசுகுது..!

விமான நிலையத்தில்
விடை சொல்ல வாயெடுக்க
அம்மா அழுதழுது சொல்லிற்று!
சரி தம்பி
எனக்கும் நல்ல வயசாச்சு அப்பாவும்
தனக்கும் ஏலாம இருக்கெண்டு
சொல்லுகிறார்
இனி எப்ப பாப்பேனோ தெரியாது
ஏதுமெண்டால்
கொள்ளியினை வைப்பதற்கும்
கூட யாரும் இல்லையடா..!
பிள்ளையப் பாப்பம்
நாம் இருக்கு மட்டும், நீ கவனம்!
போய் வாடா என்றன்று
போதித்த வார்த்தை எந்தன்
தொண்டைக்குள் முள்ளாக
இன்னும் துளைக்கிறது,

இனி மேலின் ஓர் நாளில்
ஊர் போனால் அப்போது
பணப்பையைப் பார்க்காமல்
பசிக்கிறதா எனக்கேட்டு
பிடரியினை வருடிவிடும்
பேரன்பு இருக்காது

இருந்திருந்து பார்த்தவளும்
இளைத்திளைத்து மனம் களைத்து
இவனோடு வாழ்வில்லை
என்றெண்ணிப் போயிருப்பாள்
செழித்து வளர்ந்திருக்கும்
மகனுக்கும் என் நினைவு
புழித்துப்போய் மெல்ல
மறைந்திருக்கும்!

மற்றபடி
நண்பர்கள் பெரும்பாலும்
திக்கொன்றும் திசைக்கொன்றும்
கண் பார்த்துப் பேசேலாக்
காலத்தில் இருப்பார்கள்
நல்லூர் நம்முடைய செனற் இன்றி
வெறித்திருக்கும்
எங்கேனும் கள நண்பர்
வீடென்று கண்டு விட்டால்
அங்கேயும் படமும் மாலையுந்தான்
மீந்திருக்கும்
பெற்றோரின் துணையின்
பிள்ளைகளின் பெரு மூச்சே
சுற்றி வந்து என்னைச் சூழும்
சூக்குமமாய்
அவனோடு நான் நின்ற
அழகான காலங்கள்
எனைச் சுற்றி அப்போது ஓடும்
இயலாமல்
தலை சுற்றி வீழ்ந்தாலும் வீழ்வேன்
சொல்லேலா..!

காதலியோ
பிள்ளை குட்டிகளைப்
பெற்றாலும் ஊனுடம்பு
பெருத்துத் தசை போட்டுக்
கொழுத்தாலும் அப்பொழுதும்

அழுத்தம் நிறைந்த மனசோடு
இப்பொழுதும்
முகம் கூடக் காட்ட முடியாது
என்றிடுவாள்

பேரின்றி
கல்லாலும் மண்ணாலும்
கட்டி இருந்தாலும்
கனிவோடும் வாழ்கையினால்
உயிர் பெற்ற வீடின்று
சொல்வதற்கும் சுகிப்பதற்கும்
யாருமின்றி வெறித்திருக்கும்

சொல்லாத கவி ஒன்றின் சுவையாய்
ஊர் நினைவை
என்னுள்ளே எக்கி வைத்தபடி
போய்ப் பார்த்தால்
நில்லாத நீள நதியாய் எல்லாமே
சொல்லாமல் நெடுந்தூரம் ஓடி
மறைந்திருக்கும்!

எல்லாமே இழந்தாலும் இறைவ!
எந்தனுக்கு
பிறந்த இடத்திலே இறந்திடக்
கிடைக்குமோர்
அருந்தவ வாழ்வினை
அருளிடக் கேட்பேன்
அதையும் ஆண்டவன் விதி என
மறுத்தால்
ஏது தான் செய்குவேன்
என்னுயிர்த் தோழா..?

## 25. நீ வந்த நாளும் நெஞ்சார்ந்த எதிர்பார்ப்பும்..

தலைப் பயணியே எங்கள்
தாற்பரிய வேர் முடியே
அலைக் கரத்தில் அவதரித்த
உலைக் கரமே யாராலும்
விலைக்கென்றும் வாங்கேலா
வித்தகமே எம் மண்ணில்
போர்க்குணத்தைத் தோற்றுவித்த
பொருள் முதலே! கனவிலும் நாம்
கட்டுவதை எண்ணிப் பார்க்கேலாக்
கட்டமைப்பை உன்னுடைய
சுட்டு விரல் அசைவாலே
சூழந்து நிற்க வைத்தவனே..!

உலக வரை படத்தின்
எங்கோ ஓர் மூலையிலே
பெயரின்றிக் கிடந்த ஓர்
பேரினத்தின் பேண் தகவை
அகில உலகத்தின்
அன்றாடப் பார்வைகளில்
பெரும் பிம்பமாக்கி வைத்த
பெருமட! மண்ணின்று

நீ வந்த நாளின் நினைவில்
நின் இருப்பை
சோகங் கலந்திருந்தும்
சுமை நிறைந்து நெஞ்செரிந்தும்
தாகம் தீர்ப்பதற்கு வந்திடுவாய்
என ஏங்கி
பாலைவன ஒட்டகமாய்ப்
பார்த்துளது, காலத் தீ

உலகே சேர்ந்தொன்றாய்
ஊதி விட்ட காற்றினிலே
எம் காட்டை
எரித்து விட்டுப் போனாலும்
அதனுள்ளால்
நினை ஏந்திப் போயிருப்பார்
நிச்சயமாய் என்கின்ற
வானேந்தும் வார்கடலின்
வற்றாத உறுதியைப் போல்
நாமேந்திக் கொண்டிருக்கோம்
நம் நெஞ்சில், ஆகவனே..

எம்முடைய வாழ்வும்
எதிர்கால வழித் தெளிவும்
உன் பயணச் சுவடெங்கும்
உயிர் நிறைந்து கிடக்கிறது
எம் பயணம் எதுவென்றும்
எது அதற்கு வழி என்றும்
உன் பயணச் சாராம்சம்
உரத்திங்கே சொல்கிறது

கண்ணின் கதிராடி போன்றவனே
உன் வரவை
எண்ணி இமைக் கரங்கள்
எட்டுகின்ற திசைகளெல்லாம்
அண்ணா எனத்தேடி அழைக்கிறது
விழிச் செவியும்
பார்வைச் செவிப் பறையில்
படும் உந்தன் குரல் என்று
ஆர்வங் குலையாமல்
அலைகிறது, போதுமினி

ஓர்மம்
தான் பெற்ற ஒரு மகனே
எம் முன்னால்
இருக்கின்றாய் இல்லையென
இழுபடுமோர் கதை நிலவும்
இழிகாலம் வந்த நிலை
எண்ணுகையில் என்பெல்லாம்
உருகி வெடித்தொழுகிக்
கருகி உயிர் போவதற்குள்
தெரிய நீ வருவாயா
தெரியாமற் போவாயோ
அறியேன் நான் ஆனாலும்
அழியாமல் எம் நெஞ்சுள்
ஒளிகாட்டும் வரலாறாய் உள்ளிருப்பாய்,
உரந்தருவாய்..

## 26. தூரத்தில் இருக்கின்ற தோழனுக்கு..

இப்போதும் உன் பெயரைச் சொல்லி விட முடிவதில்லை
எப்போதும் அது உள்ளே ரகசியமாய் இருக்கட்டும்

மீளுவதென்பதுவோ மிகக் கடினம் எனத்தெரிந்த
ஆழ ஊடுருவும் படையணியின் கூட்டமொன்றில்
இந்த முறையேனும் எனக்கிந்தச் சந்தர்ப்பம்
தந்தாக வேண்டுமென்று அடம்பிடித்தாய் ஆனாலும்

நாலு தங்கைகட்கு நீ தமையன் என்பதனால்
ஏலும் வரை யாரும் உன்னை விடுவதில்லை
இந்த முறை மட்டும் என்னை விடுங்களென
நொந்து நீ அழுது விம்மியதால் வழியின்றி

அன்றிரவே உனையனுப்பி வைத்தார்கள், மறுவாரம்
சென்ற வழித்தடத்தை சேகரித்த செய்திகளை
எங்கெல்லாம் ஏதிருக்கு உள் நுளைந்து எவ்வழியால்
அங்குள்ளே வந்து அடைந்திடலாம் என்பதனை
இங்கே நீ அனுப்பி வைத்திருந்தாய் அன்றிரவே
அங்கிருந்த உந்தன் தொடர்பறுந்து போயிற்று

நாட்கள் நாலைந்தைக் கடக்கிறது உள் வந்த
ஆட்கள் சிலருந்தன் அடையாளம் சொல்லுகிறார்
ஊருக்கும் உறவுக்கும் உரத்தென்றும் சொல்லேலா
வேராகிக் கிடக்கின்ற உன் வீரத் தியாகத்தை
உள்ளேயே நட்டு மனத்துள்ளே அழுது விட்டு
மெள்ள வெளியாலே போகையிலே உன் தந்தை

ஏன் நீங்கள் இண்டைக்குப் பொங்கேல்லை என்றபடி
தான் எமக்குக் கொண்டு வந்த பொங்கல் பழங்களினை
எங்கள் கையினிலே கொடுத்து விட்டு மெதுவாக
எங்க என்ரை பெடி எனச்சிரித்துக் கேட்கையிலே
அங்கஞ் சிதறி ஆயிரமாய்க் கண் கொண்டு
ஓங்கி வெடித்துள்ளே உலுப்பி அழுததடா!

எப்படியோ அன்றைக்கு ஏதோ சமாளித்து
அப்பா அடுத்த முறை, எனச் சொல்லி அனுப்பி வைத்தோம்
அதன் பிறகு வந்த ஆண்டுகளில் வருகின்ற
புதுவருசம், பொங்கல்,உன் பிறந்த நாட்களென
உனைப்பார்க்க வந்து அலுத்துப் போய் மனஞ்சோர்ந்து
எனக்குண்மை சொல்லுங்க தம்பி! என அழவும்

இனிமேலும் மறைக்க இயலாமல் அவர் தோளை
கனிவாக அணைத்துள்ளே சென்று சுவர் மேலே
துணிவின் தோற்றமாய்த் தொங்குகின்ற உன் படத்தை
துணிவறுந்து முகம் தூக்கிக் காட்டியதும் அதிலேயே
குந்தி இருந்து குளறி அழுத படி
எந்த நினைவுமற்று வீழ்ந்து விட்டார் எழும்பிய பின்

வார்த்தைகள் ஏதுமற்று வனாந்தரமாயிருந்த
பார்வைகள் மட்டும் நிலம் பார்க்கும் அறை விட்டு
ஏதும் சொல்லாமல் எழுந்து சென்றார் வாசல் வரை
ஏதும் பேசுதற்கு இயலாமல் நாம் தொடர்ந்தோம்
வாசலிலே வைத்து மனமிறுக்கி மெதுவாக
கூசி நா தடக்க சொன்னோம் நாம் இதை எல்லாம்

வீட்டுக்குச் சொல்லிவிட வேண்டாம் தெரிந்தாலோ
காடே கலங்கி விட அழுவார்கள் அவரழுதால்
ஊரே அறிந்துவிடும் ஒரு செய்தி ஆகி விடும்
உங்காலும் அங்காலும் தெரியவரும் எனச் சொல்ல
தலை மட்டும் ஆட்டிவிட்டுப் போனார் அதன் பிறகு
வருசம், பொங்கலுக்கு வருவதில்லை வீட்டினிலே

என்ன தான் சொல்லி இருந்தாரோ ஆனாலும்
உன் பிறந்த நாளுக்குத் தவறாமல் வந்திடுவார்
ஏதும் பேசாமல் இருந்துள்ளே அழுது விட்டு
மெதுவாக எழுந்து போய் விடுவார் இப்படியே
ஆண்டுகள் உருண்டோடிப் போயிற்று அன்றைக்கு
ஆஸ்பத்திரிக்கேதோ அலுவலுக்குப் போயிருந்தேன்

அங்கே உன் அம்மாவும் தங்கைகளும் நின்றிருந்தார்
அப்பாக்குச் சுகமில்லை என்றார்கள் நானும் போய்
என்னப்பா என்று கேட்டிடவும் கை பிடித்து
இன்னும் நான் எதையும் சொல்லேல்லை இவையளுக்கு
என்னாலும் தாங்க முடியவில்லை ஆனாலும்
உண்ணாணை எதுவும் சொல்லவில்லை தம்பி என்றார்

உலகின் சோகங்கள் எல்லாமே ஒருமித்து
உயிரின் இதயத்தை உதைப்பது போலிருந்ததடா
பெருமிதமும் சோகப் பெருஞ்சுமையும் கண்ணாலே
பீறிட்டுப் பாய்ந்து பொழிவதற்குள் சமாளித்து
கையெடுத்துக் கும்பிட்டு, தலை தடவி, தலையாட்டி
மெய் நடுங்க மெல்ல விடை பெற்றேன், மறு நாளே

அவரிறந்து போனாராம் அறிந்தோம், சா வீட்டில்
எவரும் நீ எங்கே என்பதனைக் கேட்பதற்கு
தவறியும் விடவில்லை உன் குடும்பம், போம் பொழுதில்
அவனெங்கோ தூர நிற்கின்றான் வர மாட்டான், தம்பிகளை
அவனெங்கே எனக்கேட்டு அழுத்தத்தைக் கொடுக்காதீர்
எனச் சொல்லிப் போனாராம் உன்னப்பா.., அதன் பின்னே

ஏதேதோ நடந்து போனதடா என் நண்பா
இனியேனும் சொல்லி விடுவதற்கு அங்கேயும்
உன் குடும்பத் தொடர்போ தோழர்களோ இல்லையடா!
ஒரு வேளை
உயிரோடிருந்தால் உன் அம்மாவும் தங்கைகளும்
ஒவ்வோர் முகாம்களிலும், எப்பேனும் இருந்துவிட்டு
ஒட்டப்படுகின்ற பட்டியலின் பெயர்களிலும்
உயிரை உலுக்குகின்ற ஒளிப்படங்கள் தன்னிலுமாய்
உனைத் தேடிக் கொண்டிருப்பார்கள்
இப்பொழுதும்...

# 27. இறுதிக்கால இரவுகள்..

கனதி நிறைந்த
அன்பின் ஏக்கங்களிலிருந்தும்
இடை நடுவிலேயே
விடை பெறப்போகிற
கூப்பிடு தூரத்து
சாதனைக்கான வாழ்விலிருந்தும்
எழும்
மின்னற் கணப்பொழுதுகளில்
இறுதிக்கால இரவுகள்
எச்சிலின்
ஓர் துளியைத்தானும்
தொண்டையுள் இறங்க விடுவதில்லை

பகற்பொழுதுகளில் வீசுகிற
அதே காற்றுத்தான்,
படபடென அடிக்கிற
அதே ஜன்னல்கள் தான்,
கூரைகளிற் பாய்ந்திறங்கும்
பூனைகளின் ஓசைகள் தான்

ஈழத்து ராத்திரிகளில்
எல்லாமே
திரிபு வாதமாய்
திடுக்கிடுத்தும் பேரொலியாய்
திருகி மூச்சமத்தும்
திட்டமிட்ட கொலைக்கரமாய்
ஓ...
இறுதி ராத்திரிகள்
ஓலம் நிறைந்த
இறுதி ராத்திரிகள்

நாய்க்குரைப்பும் விழித்திருப்பும்
நமக்குப்புதியதல்ல
ஆனால்
கால நீட்சியின்
கவனம் மிகுந்த சந்திகள் தாண்டியும்
சுவரிற் பல்லியாய்
மிக இயல்பாகவே தொடருகிற இந்த
அவல ஓசைகள்
மரணப் பிராந்தியமாக மாறப்போகும்
அபாயத்துக்கான உள்ளுணர்வை
என்றும் இல்லாதவாறு
என்னுள் அதிரவைக்கிறது

மற்றபடி
அதிகாலை விழித்தலுக்கான
நிச்சயத்தையும்
ஆழ்ந்துறங்கலிற்கான
அற்புத வரத்தையும்
எங்களுக்கான இரவுகள்
எப்போதோ இழந்தாயிற்று..

ஒரு வேளை
இறுதிக்கால இரவுகள் என்பது
உலக முழுமைக்கும்
இப்படியாகத்தானோ...?

# 28. பனிப்புகை மனசுக்குள் படர்கிறது..

புகையாய்ப் பனி படர்ந்து
பூத்திருந்த காலையதன்
மிகையான குளிரலையில்
மேனிபட்டு வெடவெடக்க
சதையைக் குறைக்கவெனச்
சகித்தபடி மெதுவாக
நதிக்கரை ஓரத்தால்
நான் நடந்து கொண்டிருந்தேன்

அப்போதவிழந்த மொட்டின்
அங்கத் தளதளப்பில்
எப்போதும் தெவிட்டாத
இளவேனில் ரூபத்தில்
பனிப்புகையைக் கிழித்தபடி
பௌவியத்தின் உடல் மொழியில்
இனிக்கின்ற தென்னை
இளம்பாளைச் சிரிப்போடு
எனைக்கடந்து போனாள்
இங்கொருத்தி, அவளுடலைத்
தொட்ட பனிப்புகையின்
தோற்றம் அவளகன்று
விட்டுப் போயிடினும்
விலகாமல் என்முன்னே
அப்படியே அவளுவாய்
ஆகி, பார்த்ததெனை!

ஆசியப் பெண்களது
அழகான முகவெட்டில்
பூசிய செந்தளிரின்
பூரிப்பாய் முகம் மின்ன
கன்னத்தில்
தாளம்பூ நாகம் போல்
தவள்கின்ற முடிதன்னை
கோலமிடும் விரல்களினால்
கோர்த்து மேல் செருகி
மச்சாளின் கண்களெனை
மருட்டுகின்ற பார்வையினால்
உச்சித் துடிப்புணரவைத்து
உள் விழுங்கி?, காந்த அலை
வீசும் இமைச் சாமரத்தை
வீசி எனை அழைத்தாள்
அதிலிருந்து
அடித்த அனற்காற்றில்
அடியோடென் நிகழ்காலம்
உடைந்து எனைத் தூக்கி
எறிய முன் சென்று
வாலிபத்தின் வசந்தத்
தொட்டிலிலே வீழ்ந்து விட்டேன்!.

பனிப்புகையாய் நிற்கின்ற
பருவப் பவித்திரமே
எனையும் ஓராளாக
எண்ணி இம் மண்ணில்
ஏறெடுத்துப் பார்த்த
இங்கிதமே முதல்ப் பெண்ணே!
நீ என்னை அழைத்த
நினைப்பில் இப்போது

விறைத்த குளிர் விலகி
வியர்கத் தொடங்குதடி
சிறை மீண்ட பறவைச்
சிறகு மன உடலில்
அடித்துப் பறந்தெழுந்து
ஆர்ப்பரிக்க, மிகக் கூடித்
துடித்த இதயத்துள்
தூலத் தீ பற்றுதடி!

பேரறிஞன் என்றாலும்
பெரும் வீரன் என்றாலும்
ஊரே போற்றுகிற
உத்தமனே என்றாலும்
நேரே அவர் முன்னால்
நிலைகுலைக்கும் அழகோடு
ஈர மொழி பேசும்
இளம் பெண் வந்து நின்றால்
மூழ்காதோ அவர்களுடை
முழுத்திறனும் அவள் கடலில்!
ஓர் நொடியேனும்
உள்ளே மனந்தடக்கி
பேர் பெருமை இல்லாத
பிண்டம் போலாகாரோ!
அழகான பெண் முகத்தின்
அசைவுக்கு ஓர் கப்பல்
விலகித் துறை விடுத்து
வேறு திசை போகுமென்றால்
பேரழகி நீ உன்
பெரு மூச்சுப் பட்டாலே
போர்க் கப்பற் தளமே
புறப்பட்டு வாராதோ!
கப்பல்களுக்கே இந்தக்
கதி என்றால் எண்ணிப்பார்
அப்பாவிக் கவிஞன் நான்
ஆடிவிட மாட்டேனா!

போதும் பனிப் பெண்ணே
போய் விடு நீ கலைந்து விடு
ஏதோ என்பாட்டில்
இருந்து விட்டுப் போகின்றேன்
இனியும் நீ போகாமல்
இப்படியே நின்றிருந்தால்
கனிந்து மனமுருகி
நானேதும் கதைத்து விட
வெள்ளைக்காரியோடும்
வெளிக்கிட்டான் என்றெந்தன்
உள்ளக் கமலம் ஊரில்
ஒப்பாரி வைப்பதற்குள்
பனியோடு பனியாகப்
படந்திடு நீ, மீண்டொரு நாள்

நாவறண்ட தாகத்தில்
நான் நடக்கும் பாதை ஒன்றில்
ஓடி வரும் நதி நீரில்
உன்னைக் கரைத்து விடு
தேடி அதற்குள் நான்
தீர்த்தமாய் உனை மட்டும்
அள்ளி என் கையில் எடுத்து
அப்படியே
ஆன்ம தாகத் தீ
அடங்கக் குடிக்கின்றேன்..

நேற்றந்த நிலவினிலே
இருந்த ஈரம்
இன்றிந்த நிலவினிலே
இல்லை, பூக்கள்
எதனிலுமே உயிரில்லை
வாசமில்லை
புன் சிரிப்புக் கூட
பூக்க முடிவதில்லை

போரின் பின்
மயானம் போல் மனசு
மதகுடைஞ்சு கிடந்தாலும்
ஏன் எரிந்தார் தினமும்
என்கின்ற கேள்வியிலே
தான் எரிந்து கொள்கிறது
தன்னுள்ளே

விடுதலைப் போராட்டம்
நெடிதென் றறிந்திருந்தும்
இடை நடுவில் விடை பெற்றும்
போய் விடலாம் என உணர்ந்தும்
கடைசி வரை விலகாமல்
கை கொடுத்தார், ஏன் கொடுத்தார்?

புகழ் வேண்டும் போற்றட்டும்
வருகின்ற சந்ததிகள்
புழுகட்டும் என்ற புனைவிற்கா
இல்லையடா
போரிட்டு ஏன் மாய்ந்தோம்
என்பதை நீர் புரிவதற்கும்
ஏன் மண்ணில் போராட்டம்
எழுந்ததென்று வருங்காலம்
தானுணர்ந்து தாகத்தின்
தாற்பரியம் அறிவதற்கும்
வானுணர்ந்து போனார்கள்
வல்லவர்கள், போகையிலே
ஒன்றை மட்டும் தான்
உங்களிடம் கேட்டார்கள்

## 29. எங்களை மறந்து விடாதீர்..

வேறொன்றும் அல்ல அது
நீங்கள் ஒரு போதும்
'எம்மை மறக்காதீர்' என்பது தான்
எம்முயிரை
ஏன் கொடுத்தோம்? என்பதனை
மறக்காதீர் என்பதுதான்
தியாகத்தை செந்நீரை
வாழ்விருந்தும் துறந்ததனை
ஏன் துறந்தோம்? என்பதனை
மறக்காதீர் என்பது தான்,

காப்புக் கழன்ற கைக் குண்டாகக்
கடக்கிற காலம் மீதிலே வாழ்கிற
வாய்ப்பும் தொலைந்து வளமும் சிதைந்து
வரண்டு போயுள என்னின மக்களே!

நார் நாராய்க் கிழிந்துள்ள
நம் மண்ணும், தினமிங்கே
சாவடிந்தே ஊர் விடியும்
சந்திகளும், மனம் விம்மி
வீங்கிச் சிவந்துள்ள கண்களையும்
மகன் வளர்ந்து
ஏன் என்று கேட்டெழுந்து
நிற்கையிலே சொல்லுதற்கு
மறக்காதீர் எம் கதையை
என்பது தான், வேறெதற்கு?

நடந்து விடாதென்பதையும்
நடத்துவித்துக் காட்டுதலே
உடைந்தும் உயிர் கொள்ளும்
உயிர்த் தினவு செறிந்தவொரு
திடம் மிகுந்த விடுதலைப் போராட்டத்
திருக் கீதை, மனஞ் சோரேல்!

வலி இன்றி ஒரு போதும்
வரும் கதவு திறக்காது
சுதந்திரமும் இலவசமாய்
ஒரு போதும் கிடைக்காது..

# 30. வாழத்தெரியாதவன்..

ஒரு செய்தியைக் கூட விட்டுச் செல்லாமலும்
ஓர் வார்த்தையைக் கூடச் சொல்லாமலும்
அன்று நீ காணாமற் போனாய்..
சித்தம் கலங்கிப்போய் உன் தந்தையும்
சாவீடு போல உன் வீடும் சிதறிப்போய்க் கிடந்தது
நீ இறந்திருக்கலாமென
பலர் தமக்குள் பேசிக்கொண்டார்கள்
காலமும் ஓடிப்போயிற்று
வழமை போலவே தியாகங்களும்
நினைவுகளும் எமக்குள்
மங்கிப்போயின..

சுரணை அற்ற வாழ்வுக்காக
தொலை தேசத்திற்கு நான்
வந்திருந்தபோது
பனிப் பொழிவினிடையே
உன்னைப் போலவே ஒருவனைப் பார்த்தேன்..!
அது நிச்சயமாக நீதான்
அதே கூர் மூக்கு,தெத்திப்பல்
ஆயின்..
நீ இறக்கவில்லை..!
ஆனால் இறந்திருந்தாய்
நிற்க முடியாமலும் இருக்க முடியாமலும்
காலைச் சவட்டியபடி,

கல்லூரிக் காலங்களில்
எப்படி எல்லாம் கலகலப்பாய்
இருந்தாய்..! இப்போதோ
பேச்சுக் கொடுத்தாலும்
பெரும் மௌனம் காக்கின்றாய்..

முட்கம்பிகள் உன் குதத்தைக்
கிழித்த போதும்
மின்சாரம் உன் குறியை
எரித்த போதும்
கேள்விகளாலும் கம்பிகளாலும் நீ
துளையிடப்பட்ட போதும்
நீ காட்டிய அதே மௌனம்
இது கூட நல்லது தான் நண்பனே

ஒருவேளை
வதையின் போது நீ
வாய் திறந்திருந்தால்
ஐம்பது குடும்பமாவது
அலறி இருக்காதா..?
தேவை அற்ற இடங்களில்
நீ அதிகம் பேசி இருந்தாலும்
தேவையான இடத்தில் நீ
மௌனமாகத்தான் இருந்திருக்கிறாய்
நல்லது
போய்வருகிறேன் என் அன்பு நண்பனே..!

இனி நீ காணப்போகிற உலகும்
கடக்கப்போகிற மனிதர்களும்
ஒவ்வொரு தியாகங்களைப் பற்றியும்
இப்போது
பேசத்தொடங்கி இருப்பதைப் போலவே
உன்னைக் கடந்து செல்கின்ற போதும்
அவர்கள் பேசிக்கொள்வார்கள்

இவன்
வேறு வேலை அற்றவன்
வாழத் தெரியாதவன்
என்றும்...

## 31. எப்படித்தான் மறப்பேன் இந்நாளை.. (மே 18)

எப்படி நான் மறப்பேன்
இந்நாளை என்னவளே..
உலகே சேர்ந்து நின்று
ஒருமித்து கொலைக்கரத்தால்
அப்படியே எம்மினத்தை
அமுக்கி நசுக்கியதை
எப்படித்தான் நான் மறப்பேன்
என்னவளே எண்ணிப்பார்..

வாழ முடிந்தும் வாழாமல்
மண்ணுக்காய்
மீளோம் என்றறிந்தும் மிரளாமல்
தோள் தந்த
வீரர்கள் விதையாகிப்போக
அவர் பிள்ளை
ஊரும் இன்றி உறவென்று
யாரும் இன்றி
வீதிகளில் நின்றபடி விம்முவதை
அப்பாலே

கால்கள் இழந்தும்
கண்கைகள் சிதைவடைந்தும்
சித்தம் குழம்பிப்போய்
சிரித்தும் அழுது கொண்டும்
ஊனமாய்ப் போய் விட்ட
ஒரு பெரும் சமுதாயம்
கத்தி அழுதபடி
காரிருளில் அங்குமிங்கும்
வாழ்ந்த மண்ணை
வாயினிலும் தலையினிலும்
அள்ளி எறிந்து
ஆவிகளாய் அலைந்தபடி
ஒப்பாரி வைக்கின்ற ஓலத்தை
என் வாழ்வில்

எப்படித்தான் நான் மறப்பேன்
என் சகியே எண்ணிப்பார்..

குலை குலையாய்ச் சிதறும்
குண்டுகளின் நடுவினிலே
இளம் பிள்ளைத்தாய்ச்சி ஒருத்தி
ஒரு மடியில்
நெஞ்சில் வெடிபட்டு
நேத்திரங்கள் மூடுண்டு
கொஞ்சம் கொஞ்சமாய் உயிர்
குறைந்தோடிக் கொண்டிருக்கும்
மிஞ்சப்போகாத கணவனையும்
மறுமடியில்
குண்டின் அதிர்வும்
மன அதிர்வும் தாங்காது
கற்பக்கிரகம் தாண்டி
கசங்கிப்போய் இந்த
அற்பக்கிரகம் வரத்துடித்த
குழந்தையினை
தானே கையால் இழுத்தெடுத்து
போட்டபடி
கண்முன்னே கண்ணிரெண்டும்
கலங்குண்டு போவதனை
பெருங்குருதிப் பெருக்கோடு
பார்த்தாள்.., பிறகேனோ
வார்த்தைகள் இன்றி
வானை அண்ணாந்து பார்த்தபடி
நிற் சலனம் அடைந்த
நினைவை., சொல்லடி நீ
எப்படித்தான் நான் மறந்து
போவேன்..! இப்படியாய்
ஆயிரமாய்க் கதைகள்
ஆயிரமாய் ஆயிரமாய்
ஆருமில்லை இங்கே
கேட்பதற்கு
தட்டிக்கேட்பதற்கும் தான்

ஆனாலும்
ஒன்றாகச் சேர்தெம்மைக்
கொன்றோரே..! எண்ணாதீர்..
சிவப்பு இந்தியர்கள் கதைபோல
எம் வாழ்வும்
காட்டு வெளியினிலும்
கடற்கரையின் மீதினிலும் வெறும்
பாட்டாக ஒலித்தோய்ந்து
போகுமென்று எம் தாய்மார்
இனிச் சோறூட்டும் போதில்
இதைச் சொல்லித்தான்
வளர்ப்பார்கள்

தேரோடப்போகும் எம்முடைய
தெருக்களினால்
நீர் ஓடிப் போவீர் இது நிகழும்..!

கேளுங்கள்..!
கண்ணீரோடேதான் விதைத்தோம்
கம்பீரத்தோடேதான் அறுப்போம்..

## 32. ஆவி உயிர்ப்பாக..

கைப்பிடி அளவு காற்றுச் சுழல்கிற
மெய்யெனும் மெய்யிலா
மேனியுள் அடிக்கடி
பெய்கின்ற எண்ணப் பெருமழையில்
மிதந்தபடி
கை தொட்டுக் காட்சிகள்
கடக்கிறது அருகிருந்த

புல்லில் காலையிலே
பூப்போல மலர்ந்திருந்த
வெள்ளைப் பனித்துளி இன்றி
இப்போதில்
வெறுமிலையாய்க் கிடக்கிறது புல்லும்
மதியத்தில்
எறித்த காலக் கதிரில் அது வாழ்வை
அறுத்துப் போயிருக்கும் வானுக்கு
ஒரு வேளை
கறுத்த மேகத்திரளிருந்து மீண்டுமது

தெறித்திங்கே வீழ்ந்திடலாம் ஆனாலும்
வீழுமிடம்
கறுத்த நெடுங்கடலோ கற்பாறை இடுக்குகளோ
அடர்ந்த பெருங்காடோ ஆர் அறிவார்..?
வீழுகிற
இடமறியா ஓர் நிலைதான்
இவ்வுலகின் பெரும் விதியோ..?

கடலில் வீழ்ந்திருந்தால்
கலந்ததுவாய்ப் போயிருக்கும்
கற்பாறை இடுக்கென்றால் காணேலா
காடெனினும் அதுவே..!

அடையாளம் தெரிய
அவதரித்தல் என்பதெல்லாம்
உடையோனின் கையில் தான் இருக்கிறதோ..?

இல்லையெனில்
இடையிட்ட ஏதேனும் ஏற்பாடோ..?
நாமாக
உடை மாற்றிக் கொள்வது போலொன்றோ..?
எதுவேனும்

என் கண்ணிற் பட்டிறந்த
ஏதோவோர் பனித்துளி போல்
என் வாழ்வும் இன்றெங்கோ தெரிந்து
பெயர் சொல்லும்
ஏதோவோர் பொருளாக இழுத்தோடி
இவ்வளவும்
காலங் கடத்திவிட்ட களைப்பில்
முன்னுள்ள

கண்ணாடி தன்னில்
என் கண்ணைப் பார்க்கின்றேன்
கரைதெரியா தொடுவானக் கடலும்
அதன் மேலே
பொங்கி அடிக்கின்ற நினைவலையும்
அதனூடு
கதிர் நுனிகள் எழுவதுவும் தெரிகிறது,
அதிலிருந்து
ஆட்காட்டிப் பறவை ஒன்று
எனை நோக்கிப் பறக்கிறது
புரிகிறது..

காலைப் பனித்துளியின் காலத்தை
முடிவு செய்த
காலக் கதிரின்று எனைநோக்கி வருகிறது
இமை சுருக்கிக் கண்கள்
எதையோ நினைத்திடவும்
எனையறியாமல் என்
முழந்தாளில் இருந்தபடி
அகலக் கை விரித்து
ஆறுதலாய் மூச்சிழுத்து
அண்ணாந்து நாடியினை நிமிர்த்துகிறேன்..

அடுத்த முறை
மீண்டும் அவதரித்தால் இதுபோல
அடையாளம் நிறைத்தென்னை
விழுத்திங்கே என்றபடி
அடை ஆழம்
நிறைத்தென்னை விழுத்திங்கே
என்றபடி..

## 33. தந்ததுன் தன்னை..

பார்வைப் பொருள் உணரும்
பக்குவமே எந்தனது
வேர் உயிரின் மூச்சுவிடும்
வித்தகமே என் பயணம்
காண்கின்ற வரலாற்றின்
காற்தடமே மெய்சிலிர்க்க
நீ வந்தாய் வாழ்வில்
நிறைவெல்லாம் நானாகி,
பூ வந்த வாசம் புலர்கிறது
என் புகழாய்..
நான் என்ன செய்தேன்..?
நடந்தேன்.. உள்ளிருந்து
ஒவ்வோர் அடிக்கும்
உயிர் கொடுத்துக்கொண்டிருக்கும்
பவ்வியமாய் எனை நடத்தும்
பலமே எப்பொழுதும்
நீ பக்கம் இரு நிகழ்வாகு
நான் பெறுவேன்
பா இருக்கும் பக்க
பலம்..

# 34. இப்படியாகத்தான் தோழர்களே..

திடீரென்று ஒரு நாள்
மம்மல் பொழுதொன்றில்
எல்லைப் பிரதேசத்தில் உள்ள
என் வீட்டு வேப்ப மரத்தில்
பறவை ஒன்று வந்து
குந்தி இருக்கத் தொடங்கியது
அதன் ஈனஸ்வரமான
பசிக்குரலைக் கேட்டு
என் உணவில் சிறிதளவை
அதற்கு நான் வழங்கியும்
இருந்தேன்,

மறுநாள் கூடு கட்டவும்
குடும்பமாயும் குழுமமாயும்
வந்திருக்கவும் தொடங்கியது,
என் நாளாந்தச் சமையலுக்காக
வைத்திருந்த விறகுகளை
குச்சிகளாய்ப் பிரித்தெடுத்து
கூடு கட்டுவதை நான்
கவனித்தேன்,

சில நாட்களில் முட்டை இட்டுக்
குஞ்சும் பொரித்தது,
அதன் பின்னர் ஒரு போதும் அது
உணவு கேட்டுக் கத்தியதில்லை
எனக்குத் தெரியாமலும்
தெரியவும் கூட
என் சமையற் கட்டுக்குள்
புகுந்து உணவுகளை
எடுக்கத் தொடங்கியது
அதில் பலவந்தம் இருந்ததை
நான் அவதானித்தேன்
சொந்தம் கொண்டாடுவதையும்,

குஞ்சு பொரித்த காலங்களில்
மரத்தின் கீழே எமைப்போக விடாமல்
கொத்தியும் கலைத்தது
பயத்தால்தானோ என எண்ணி இருந்தேன்
பொரிக்காத காலங்களிலும் கூட
இது தொடர்வதை
மரம் பறவைக் கூட்டத்தின்
கட்டுப்பாட்டில் வந்த
சில காலங்களின் பின்னர் தான்
உணர்ந்தேன்,

இப்பொழுது
என் வீட்டு வேப்பமரத்தில் மட்டுமல்ல
ஊரில் உள்ள அத்தனை மரங்களிலும்
பறவைகள்
திட்டமிட்டுக் குடியேறி இருந்தன,
ஆனாலும்
கேக்கிற பெடியள்
கேக்கத்தான் செய்தார்கள்
தட்டியும் முட்டியும்,
ஆயிரம் நியாயங்கள் இருந்தும்
ஏனோ..? காலம்
அவர்களையும் வீழ்த்திவிட்டது.

அதன் பின்னர்
கதவற்ற வீடாய்ப் போன
எம் வாழ்வில்
அவைகளின் இரைச்சலும்
கழிச்சலும் புகைச்சலும்
தாங்கொணாது
ஊரினைப் பெயர்ந்து
அவைகளால் வரையறுக்கப்பட்ட
மரங்களின் கீழே
அதே ஈனஸ்வரத்தில் முனகியபடி
கலங்கிய கண்களோடு
காலம் கடக்கிறோம்..

இருக்க இடந்தேடி
ஒண்ட வந்த பறவைக்கு
ஒரு மரம் மட்டுமல்ல
பெரிய கானகமும் ஊருமே
இப்படியாகத்தான் தோழர்களே..!
சொந்தமாக்கப்பட்டது..

# 35. இனிதே நிறைவுறட்டும்..

இத்தோடு என் வாழ்வு
இனிதே நிறைவுறட்டும்
பத்தோடு பதினொன்றாய் ஆகி
பலர் பார்வை
பரிதாபமாய் என்னைப்பார்த்து
அடபாவம்..!
'செத்தே இவன் வாழ்ந்து செத்தான்'
எனச்சொல்லும்
சிதழூறும் வார்த்தைகளைக்
கேட்பதற்குள் ஆண்டவனே!
இத்தோடென் வாழ்வு
இனிதே நிறைவுறட்டும்,

பட்டுப்பட்டு மனம்
பக்குவம் தான் பட்டாலும்
வெட்டுப்பட்ட தடம்
வெறுங்கோடாய்ப்போனாலும்
'கட்டை விரல் சிதைந்தவலி
காலெடுத்தும் இருப்பது போல்
அறுத்தெறிந்த பல்லி
வால் கிடந்து துடிப்பதுபோல்'
சுட்ட நினைவலைகள்
சூடேறி மன என்பின்
மச்சை கொதித்துருகி
வெடித்தொழுகவைக்கிறது,

*அதிக கொதி நிலையில்*
*அளவற்ற மனச்சுமையில்*
*இதயம் இயலாமற் பொசுங்கி*
*மற்றவர்கள்*
*ஆவியாய் நான்*
*ஆகிப்போவதனைக் கண்ணுற்று*
*தேவையா? எனச்சொல்லித்*
*தெருவெல்லாம் வடிப்பதனை*
*பாவியேன் பார்த்தழுந்த*
*வேண்டுமோ..? நல்லூரா!*

*இருக்கின்ற நிமிர்வோடும்*
*எதைக்கண்டும் கலங்காத*
*தருக்கன் எனும் கலகப்பேரோடும்*
*அன்புக்கு*
*உருகித்தலை சாய்ந்துயிர்*
*கொடுப்பான் என்கின்ற*
*இன்பப்பொழுதொன்றின்*
*இதத்தோடும் தடத்தோடும்*
*இத்தோடென் வாழ்வு*
*இனிதே நிறைவுறட்டும்..*

## 36. ஈர்ப்பில் துடிக்கின்ற இயக்க விசை..

வசந்த காலத்தின்
வண்ணத்தில் தோய்த்தெடுத்து
வாழ்வு ஒரு மரத்தை
வரைகிறது, அதிலடர்ந்த
பச்சை இலைகளிலும்
பரந்த கிளைகளிலும்
இச்சை ஊறுகின்ற
ஈரமன வண்ணத்தில்
உணர் கொம்புள்ள உயிர்த்
தூரிகையால் கரையாமல்
காதலும் ஓர் கூட்டைக்
கட்டியதாய் வரைகிறது
போத உணர்வுடனே
பொங்க மீண்டுமந்த
வாழ்வு வசியத்தைத் தடவி
உயிர்ப்பாக
அன்பூறும் பறவை ஒன்றை
அக் கூட்டுள் வரைகிறது

இப்படியாய்
ஒவ்வொரு வாழ்வும் தம்
உள்ளளவுக் கேற்றபடி
ஒவ்வொரு மரத்தை வரைய
உயிர்க் கூட்டை
காதலும் அம்மரத்தின்
கனதிக்கு ஏற்றபடி,
வாழ்வும் அதற்கேற்ப
பறவை ஒன்றை,
விகிதங்கள்
ஊறும் உயிரளவில்
உயர்ந்திறங்கி இருந்தாலும்
ஈர்ப்பென்ற ஒன்று
எதன் மேலோ இருப்பதனால்
இன்றும் உயிர் நீட்சி
இயங்கி தொடர்கிறது..

## 37. நானும் மகனும்..

அப்பா..! என்னைப் பார்க்க வரமாட்டீர்களா..?
முடியாது மகனே..
ஏன் முடியாது..?
வந்தால் கொன்று விடுவார்கள்
ஏன் கொன்று விடுவார்கள்...?
நான் என் மக்களுக்காகப் பேசினேன்
ஏன் மக்களுக்காகப் பேசினீர்கள்..?
பறிக்கப்பட்ட அவர்களின் உரிமைகளுக்காக,
ஏன் உரிமைகள் பறிக்கப்பட்டன..?
சமமாக வாழ நினைத்தபோது
ஏன் தான் அப்ப பறிக்க விட்டீர்கள்..?
நாங்கள் இல்லை மகனே, எம் முன்னவர்கள் விட்ட பிழை
ஏன் அவர்கள் பிழை விட்டார்கள்..?
அவர்கள் மட்டும் பிழைப்பதற்காக,
அவர்கள் பிழைத்தார்களா..?
பெயரளவில் பிணமில்லை என்பதுவாய் பிழைத்தார்கள்
என்னவோ பிழைத்தார்கள் தானே..?
இதெல்லாம் ஒரு பிழைப்பா மகனே..

சரி, நீங்கள் மட்டுந்தானா கேட்டீர்கள்..?
இல்லை மகனே என் போல் பல்லாயிரம் பேர்..
ஆயின், என் போல் பல்லாயிரம் மகன்களுமா..?
ஆம் மகனே
ஒவ்வொரு மகனும் உன் போலவே
ஆயிரமாயிரம் கேள்விகளுடன்..
விடை கிடைக்குமா அப்பா..?

என்ன சொல்ல மகனே..!

விடுதலைப் போராட்டம் நெடிது தான்
ஆயினும்
என்னுடைய பிராத்தனை என்னவெனில்
உன்னுடைய காலத்திலும்
எங்கோ ஓர் மூலைக்குள்
என் போல் நீயும் என்புருகிக் கொண்டிருக்க
உன் மகனும்
விடைகளற்ற கேள்விகளுடன் மட்டும்
வளர்ந்து விடக்கூடாது என்பதே..

# 38. பார்வைகள்..

உலகாளுவோரின் ஒருபார்வை வேண்டி
உயிர்வேகும் எங்கும் ஒருகூட்டம்
நிலம்நோக்கி மெல்லத்தலை நோண்டி
நெஞ்சின் முகம் நோக்கிடாது ஒருகூட்டம்
வளமான சொல்லின் வகைதேடின் வீச்சு
வருமாமோ கண்ணின் ஒருபேச்சில்..?
இளமாதர் அண்மை இனிக்காது பார்வை
இருக்காத போதில் இழுக்காது,

இரவோடுகூடல் இணைகின்றபோதில்
எழுகின்ற கொற்றம் எதுவென்றால்
ஒருவாறு மெல்ல விழிபார்த்து செல்ல
மொழிபேசுகின்ற முனகல்தான்

எமதோர்கள் வைத்த காமாட்சி என்ன
ஒளிர்கின்ற சின்ன விளையாட்டா..?
தமதுண்மை கண்டு தமைஉண்டு கொண்டு
தகவன்மை கொண்டு பெறும் திருவாழ்வே

உலகத்துவாழ்வின் ஒருகோடி இன்பம்
ஒளியூடு ஓடிஉயிராகி
நிலை பெற்றவாழ்வு நிறைவுற்று நல்ல
கவியாகி தெய்வ மொழியாகும்

கலையான பார்வை கனமானபார்வை
கதிதேடும் பார்வை எனவாக
பலவேறு பார்வை பலவாகும் வாழ்வின்
பலமான பார்வை பதிவாகும்.

# 39. இதே இரவில்..

நீண்ட மழை ஓய்வின் பின்னால்
இலைகளிலி?ருந்து சொட்டுகிற
துளியின் ஓசைகளை
என்னைப் போலவே சிலர்
இந்த ஜாமத்திலும்
கேட்டுக் கொண்டிருக்கக்கூடும்...

இதே இரவில்..
குடும்பமே படுத்துறங்குகிற
அகதிக் கூடாரத்துள்
அருகிலேயே கிடக்கின்ற
அம்மாவும் பிள்ளைகளும்
உறங்கியிருக்கலா மென்கிற
ஐயப்பாட்டுடன்
தன் இளம் மனைவியின் முடியை
கோதிக் கொண்டிருக்கிற கணவன்
தாயின் செருமலைக் கேட்டு
கையை இழுத்துக்கொள்வான்

இதே இரவில்..
தூங்கும் போது எப்போதுமே
கணவன் மீது கால் கை போடுகிற
பழக்கமுள்ள மனைவி
அவன் காணாமல் போய்
காலாண்டாகியும், அதே பழக்கத்தில்
காலையும் கையையும் தலையணைமேல்
வீசிக்கொண்டிருப்பாள்..!
அதே வீட்டில்
கதவு தட்டப்படுவது போல் சத்தம் கேட்டு
கனவில் திடுக்கிட்டெழுந்த அவனது தாய்
ஒரு வேளை மகனாக இருக்கலாம்..?
என்கிற அப்பாவித்தனமான நம்பிக்கையில்
ஓடிப்போய்க் கதவைத்திறந்து பார்ப்பாள்

இதே இரவில்..
வெளவால் போல் தலைகீழாக
வதை முகாம்களில் தூக்கப்பட்டிருக்கும்
எம்முடைய பிள்ளைகள்
தாங்கொணா வதைகளில் தளர்ந்துபோய்
உலர்ந்து போகிற ஓலங்களை
எழுப்பிக்கொண்டிருப்பார்கள்

இதே இரவில்..
இப்போதைய குடாநாட்டின் இளைஞர்கள்
எதுவுமே நடந்துவிடவில்லை என்பதுவாய்
மது விருந்தில் திளைத்தபடி
ஊர்ப் பெண்ணொருத்தியை
நடிகையுடன் ஒப்பிட்டுப் பேசிக்கொண்டிருப்பார்கள்
இதே இரவில்..
அடர்ந்த காட்டிற்குள்
விழுப்புண்களோடும் வேதனைகளோடும்
தோழர்கள்
வேகமாக நழுவிக்கொண்டிப்பார்கள்

இதே இரவில்..
கடவுளாலேயே கை விடப்பட்டவனான
நான்
இத்தனை வருடகால விலை கொடுப்பும்
ஒரு கனவினைப்போல்
இரவோடிரவாக முடிந்து விட்டதென்பதனை
நம்ப முடியாமலும் தாங்க முடியாமலும்
அழுதுகொண்டும் புலம்பிக்கொண்டும்
ஏதோ ஓர் வைராக்கியத்தில்
வேதனையைத் தீர்க்க
வெற்றுத்தாளில்
வரைந்து கொண்டிருக்கிறேன்

சிதைகள் ஊன்றப் படுவதற்கான
காரணத்தையும்
விதைகள் முளைக்கப் போவதற்கான
காலத்தையும்...

மணற்பூமியில் முளைப்பதே
இயலாததாய் இருந்த காலம் அது
ஆனால் நாம்
வளர்வதற்கென முடிவெடுத்ததோ
கருங்கல் நிறைந்த தரைகளில்,

ஓர்மம் உடலில் மட்டுமல்ல
உயிரிலும் நிறைந்திருந்ததால்
கற்களைப் பிளந்து நிமிர்தல்
ஓர் காரியமாய்த் தெரியவில்லை,

ஒருமித்த கரங்களின் உதைப்பே
பிளந்து வருதலுக்கான
சாத்தியம் என்பதையும்
அப்போது
நாம் உணர்ந்திருக்கவில்லை,

கற்களைப் பிளந்த கைகள்
வெளி வந்தமைக்கான
உரிமையை வேண்டி
தனித்தனியாகிவிட்ட காலமிது,

முழுவதுமாக நிமிர்வதற்கு
இன்னும் எஞ்சி இருப்பதோ
வெறுமனே ஓர் 'மரப்பலகை'
தனித்தனியாகி விட்ட
கைகளினால் இப்போது
தட்டத்தான் முடிகிறதே அன்றி
ஓர் இஞ்சிதானும்
உயர்த்தக்கூட முடிவதில்லை,

உடைத்தெழலிலும் பார்க்க
வருவதற்கான சத்தமெழுப்பல்
எவ்வளவு ஆபத்தானதென்பதை
வெட்டப்படும் ஒவ்வொரு கைகளும்
இப்போது விளங்கிக் கொள்கின்றன,

## 40. எமக்கான சூர்யோதயம்..

இப்போதும்
எஞ்சி இருக்கிற
ஒன்றிரெண்டு கைகளின்
ஒருமித்தலை வேண்டி
கெஞ்சி அழுகிறது
எமக்கான சூர்யோதயம்..

# 41. சும்மா இருத்தலின் சுகம்

சோதனைகளால் நிறைந்து
வழிகிறது வாழ்க்கை
வழுக்கி விழுதலின்
ஒவ்வோர் பொழுதுகளிலும்
உண்டாகும் காயங்களை
தாங்குகிற மனசுக்கு
அதனால் உண்டாகும்
அழுத்தங்களைத் தாங்க
முடிவதில்லை,
தேர்த்திருவிழாவின்
நிறைந்த கூட்டத்தோடு
கூட்டமாய்
அள்ளுண்டு செல்லுதற்கே
அவாவுகிறது மனம்,

வடத்தை
இழுத்துத்தான் தேர் அசைவதில்லை
பிடிக்கவே அசையும்
இது
சேர்ந்திழுத்தலின் சிறப்புமட்டுமல்ல
ஆரென்றே தெரியாமல்
இழுத்துவிடுகிற
அற்புதவரமும் கூட,
ஏனெனில்
நானும் இழுத்தேன் என்கிற
புகழின் மகிழ்வைக்கூட
மனசால் இப்போது
தாங்கமுடிவதில்லை
அதாவது..
ஏதும் சுமைகளற்று இயங்குதல்
விடை பெறுதல்.

# 42. வாழ் கனவே..

வாங்கிய புதுப் பேனா
வரைகிறதா எனப் பார்க்க
ஏதோ சும்மா ஒன்றைக் கிறுக்கினேன்
இரவு வந்து
நாக்கில் விரல் தொட்டுத்
தாள் தட்ட கிறுக்கலதாய்
காலங்களைக் கடந்த
கனவான உன் பெயர்
விக்கித்துப் போனேன்!

எனக்கே தெரியாமல்
எப்படி நான் உன் பெயரை
மன மூளை சொல்லாமல்
வரைந்தேன்! ஒரு வேளை
காலம் அரித்து விட்ட
காதல் நினைவெல்லாம்
விரல் நுனியில் தானிருந்து
விம்மிடுமோ..!

இல்லையெனில்
எண்ண வலை பின்னும்
மனச் சிலந்தி ஓர் இளையை
விரல்க் கரையில்
ஒட்டிவிட்டுப் போயுளதோ?
விளங்கவில்லை!

என்னை நீ பிரிந்து
இன்னொருவன் கை தொட்ட
இந்த நீண்டாண்டுகளின்
இடைவெளியில் சில முறை நான்
உன்னை நினைத்ததெல்லாம்
உண்மை, மனஞ் சிதைந்து
காதற் கொடும் பிரிவின்

முற்காலப் பகுதியிலே
கத்தி அழுததுவும் உண்மை

அது பின்னர்
வற்றி வழிந்தோடி
மௌனமாய் நிழல் தேடி
எச்சில் விழுங்கையிலே
இறுகுகின்ற தொண்டை என்ற
இயல்பளவில் மெல்ல இறங்கி
பழகிப்போய்
நாளாந்த வேலைகளுள்
நலிவடைந்து போயிற்று

எனக்கென்றோர் துணை
வந்த முதல் நாட்களிலே
உனைக் கண்டால் எப்போதும்
ஊறித் ததும்புகிற
மனக் காட்டாற்றின்
மயக்கும் இசை ஓரத்தில்
புறாவின் குறு குறுப்பைச்
சுமந்தபடி என் உடலில்
கிறு கிறுக்கும் நினைவுகளாய்த்
திரிந்ததனை மறுக்கவில்லை

அதுவும்
துணை தந்த அன்பின் முன்
நாளடைவில்
விலகித் தன்பாட்டில் போயிற்று
மகன் பிறக்க
எல்லாமே அவனாய் ஆன பின்னர்
உன் நினைவு
ஒரு போதும் எனைச் சுற்றி
வந்ததில்லை

இன்றென்ன..
ஆண்டு பல கடந்தும்
அடியோடு மறந்திருந்தும்?
எப்படி எங்கிருந்து
என்னறிவுக் கெட்டாமல்
விரல் வழியாய்த் தாளில்
விழுந்தாய்! ஒரு வேளை
நீ கூட என்னை
நினைத் தாயோ?
எதுவேனும்..
என் புலனுக்கறியாமல்
தாள் மீது ஒரு கவியாய்
விழுந்த உன் பெயர்
வியப்பூற உயிர் பெற்று
விம்பமாய் என் முன்னெழவும்
உன் வாசம்
நாசிதனில் ஏறிப் புரக்கடித்து
கண்ணோரம்
ஆசைக் கனவாக வழிகிறது

வாழ் கனவே..!

கால நதிக்கரையில்
நாம் நடந்த காற் தடத்தை
ஆண்டுகளின் ஆற்றோட்டம்
அரித்தாலும் எஞ்சியுள்ள
சுவட்டுக் கரைக் குருதிச்
சுற்றோட்ட வெப்பமென்னில்
இறக்கும் வரை வாழ்வாய்
என் காலம் கடந்தவளே..

## 43. எல்லாம் நன்மைக்கே ..

வீட்டின் விருப்பம் போல்
விளங்கத்தான் முடியவில்லை
நாட்டின் விடியலுக்கு
நம்மவர்கள் செய்கின்ற
கூட்டு முயற்சிக்கேனும்
கொடுப்போமெம் தோளை என
நன்றாகப் பட்டுணர்ந்து
நடை முறையை உள் வாங்கி
வென்றாக வேண்டும் எங்கள்
விடுதலையை என்பதற்காய்
சென்றிருந்த காலங்கள்
சில ஓட ஊரெல்லாம்

போரின் கறுத்த மேகங்கள்
பொழிந்திறுக, பொறி தாண்ட
நீருள்ளால் நெருப்பை
நிசப்தமாய் நனையாமல்
நீந்திப் போவதொத்த
நெடும்பாதை என்பதனால்
அத்தனை காலமாய் சேர்த்துவைத்த
அத்தனையும்
மொத்தமாய் தூக்கிப் போட்டுவிட்டு
வெறுங்கையாய்
செல்வதற்கு மனமின்றி நிற்கையிலே
என் அம்மா
எல்லாம் நன்மைக்கே
எழும்பு எனஅனுப்பி வைத்தார்

ஊர் விட்டுப் போன பின்பும்
உழுதல் தொடர்ந்திடவும்
நார்நாராய் நகம் நகமாய்
நம்மை அவன் கிழித்தெறிய
நாட்டை விட்டு அயல்
நாட்டுக்கு நடைப்பிணமாய்
செல்லும் விமானப் பாதையிலும்
அம்மா தான்
எல்லாம் நன்மைக்கே
ஏறென்று ஏற்றி விட்டார்

நாட்டை விட்டு விட்டு
நாம் நகர்ந்து போனாலும்
போட்டிடலாமோ எம்
பொறுப்பை எனப் புறப்படவும்
நாடி நரம்பாகப் பிரித்தெடுத்து
நம்மை அங்கும்
போட்டுள்ளே பூட்டி வைத்திருக்க
எப்படியோ
தொலைபேசித் தொடர்பெடுத்த
அம்மா பெருமூச்சோடு
அலைபோல எனையடித்த வார்த்தை
'அப்பாடா
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தாய்
என் பெருமான்
எல்லாமே நன்மைக்கே இடியாதே'
என்பது தான்

எப்படியோ அங்கும் இழுத்துச் சுழித்தோடி
தப்பி ஒரு கண்டத்தைத் தாண்டிவிட
எல்லையிலே
அப்படியே பிடித்தென்னை
அந்தக் களைப்போடே
அடரிருட் சிறையொன்றுள்
அடைக்க அதனாலும்
தப்பி வரும் சட்டங்களூடு
தாள் திறந்து

இப்போது பொது வெளியில்
இருந்தாலும் எனைச் சுற்றி
அந்த நிழற்படிவு
அகன்ற பெருந்தனிமை
இந்த நாட்டின் வெளிகளிலும்
இன்றுவரை
என்னை விட்டகல முடியாமல் இருக்கிறது
காலநீட்சி தந்த
களைப்பில் கலக்கத்தில்
ஏலும்வரை சொல்லி வந்த
அம்மாவும் இப்பொழுதில்
எதுவுமே எனக்குச் சொல்வதில்லை
என்றாலும்
எதிர்காலம் என்கின்ற
ஏதேனும் ஓர் கீற்றும்
இனி முன்னே எழும்பாது
என்பதனை உணர்ந்தாலும்

காலம் மிகப்பெரிய
கடப்பாரை தன்னாலே
கீலம் கீலமாய் எனைக்
கிழித்துப் பார்ப்பதெல்லாம்
ஏதோ நான் வருந்தி
எழுதுதற்கோ? என்றபடி
எனக்குள்ளே நானிப்ப
எப்பொழுதும் சொல்லுகிறேன்
எல்லாம் நன்மைக்கே
எழுதடா நீ எழுதி நட...

# 44. தப்படா இந்தப் பிறப்பு..

பிரிவுத் தீயின் வெறுப்புத் தழலில்
பிறக்கும் விரக்தித் தணற்ப் படுக்கை
உடலாய் ஆகி உயிரைக் கருக்கும்
உயிரின் உள்ளம் உருகி விழும்
மழலைப் பேச்சை மயக்கும் சிரிப்பை
மைல் பல தாண்டி வைத்து விட்டு
உழலும் வாழ்வில் ஓர்மம் சிதற
உறவின் பாசம் ஓங்கி அழும்

எப்படா வருவாய் என்றவள் கேட்ட
இமைப்பில் நெற்றிப் பொட்டுடைந்து
ஆக்ஞை திறந்து அன்பின் சுனையால்
ஆவி வழிந்து பறந்து சென்று
என்னை உருக்கும் படியாய் இறுக்கி
இயன்ற வரைக்கும் உயிர் அணைக்கும்

இங்கே உடலோ அந்தச் சுகத்தை
எண்ணிப் பிதற்றி மனம் பிறழ்ந்து
தற்கொலை செய்யவும் எண்ணும் ஆனால்
தளிரின் சிரிப்புத் தடுத்து விடும்
எப்படா அந்தச் சிரிப்பும் அணைப்பும்
எந்தனைச் சேரும் சொல் முருகா!

தப்படா இந்தப் பிறப்பு மேலும்
தவறடா இத்தகை வாழ்வு எங்களை
எப்படா சேர்ப்பாய் என்னுயிர் தன்னை
எப்படா மீட்பாய் வேலா..

## 45. சாகாமல் இருப்பதற்கே..

சாகாமல் இருக்கவே நான்
சத்தியமாய் எழுதுகிறேன்
வேறெதுவும் எண்ணம்
கிடையாது என்னுடைய
விற்பனத்தை விறைப்பாய்க்
காட்டுதற்கோ உள்ளாடும்
கவிஞனாய்ச் சாதல் என்ற
கனவினையோ என்னாலே
கற்பிதம் பண்ண இப்போ
முடிவதில்லை சந்தையிலே
சாப்பிடுதற்கென்று நான்
வாங்குவது மருந்தொன்றே
சதமளவும் வேறு
வாங்கி வர நினைத்ததில்லை

உடலுள்ளே ஸ்கான் காட்டும்
உட் காயப்பகுதிகளின்
இடத்துக்கு ஏற்ற மருந்திட்டும்
இன்று வரை
இன்னும் ஸ்கானுக்குத் தெரியாத
மன நோவின்
அடி காயம் இன்னும் யாருக்கும்
தெரியவில்லை
நாள் முழுக்கத் தூங்கி
நாளை மற அது உந்தன்
ஆழ் மனதை ஆட்டுமென
அவர் தந்த மருந்தாலும்

தூக்கத்தின் உள்ளே
தொடர்கின்ற கனவுகளை
தொண்ணூறு மணி நேரம்
நான் தொலைந்து போனதனை
விறைக்கும் குளிருள்ளும்
வியர்த்தூத்திக் கொட்டுவதை
வீரிட்டு நான் கதறி
விழுந்துருண்டு போவதனை
இடுப்பின் பூட்டிருந்து
எழுந்து வரும் தண்டூடு
எழுந்தலையாய் வருகின்ற
மின்சாரம் பிடரியிலே
அடித்தடித்து ஆட்ட
ஆற்றாமல் நாக்கினை நான்
அழுத்திப் பற்களிடை
கடிப்பதனை, கத்தியினால்
இழுத்தெங்கும் கிழித்து விட்டு
இளைத்துப் போயிருக்கும்
எனையறியாதென்னை, நான்
இயல்பறுந்து தண்டிக்கும்

இந்த மனக்காய வலியின்
அடிகாயம்
எந்த இடத்திற் தான்
இருக்குதென்றும் இதற்கினிமேல்
என்ன மருந்தைத் தான்
கொடுப்பதென்றும் தெரியாமல்
இந்த மருத்துவர்கள் திணறுகிறார்
என் மகனே..!
நீ தான் மருந்தென்று
நெடித்துயர்ந்து வளர்ந்துள்ள
நீள் மூஞ்சி வெள்ளைக்குப் புரியவில்லை
உன்னுடன் நான்

ஓடி விளையாடி உப்பேத்தி எறிஞ்சேந்தி
உள் வந்து பள்ளியிலே
விட்டு விட்டு ஒழிஞ்சிருந்து
உன் பள்ளி விளையாட்டை
உயிர் சுவைத்துப் பார்ப்பதற்கே
உயிரை இழுத்தின்னும்
நானிருக்கேன்,உயிர் நூலும்
அறுந்திப்போ வீழாமல்
இருப்பதற்கு எனக்கிப்போ
தெரிந்த வழி ஏதோ
எழுதுதல் தான், இதை விடவும்
தற்காலிகமாயுயிரைத்
தக்க வைக்க வேறு வழி
எனக்குத் தெரியவில்லை இப்போது

என் மகனே..!
இதற்காக மட்டும் தான்
இப்பொழுது எழுதுகிறேன்
எனக்கு வேறு வழி
தெரியவில்லை உனைச்சேர

எனக்கு வேறு வழி
தெரியவில்லை உனைச்சேர
இதற்காக மட்டும் தான்
இப்பொழுது எழுதுகிறேன்..

## 46. பசுந்தரையாகப் படருவேன்..

நாட்களின் நீளமும்
நம்மிடை இடையெழும்
வாட்களின் நானுனி
வார்த்தையின் கீறலும்
கௌரவம் பார்க்கின்ற
காதலும் இற்றையில்
பேச்சறுந்த ஓர்
பெருவழிப் பாதையில்
மூச்சறுந்த ஓர்
முரண் நிறை வாழ்க்கையும்
வீச்சறுந்து வீழ்
விந்தினைப் போலவே
பாச்சொரிந்த வாழ்(வு)
பலமிழக்குதோ..?

என்னுடை
முள்ளுடல் தன்னிலே
முன்பெலாம் உன்னிதள்
முட்டினால் மொக்குகள்
தோன்றிடும், இன்று ஏன்
செவ்விதள் தன்னிலே
சிந்திடும் சொற்களில்
மொக்குகள் முட்களாய்
ஆகுது..?

கட்டிலில்
இன்னுமாய் இன்னுமாய்
என்னிலே உன்னுடல்
பின்னடா என்று நீ
மின்னையில் உன்னிமை
ஒவ்வொன்று மொவ்வொரு
உயிருடற் கைகளாய்
கவ்வி அழைத்தது கட்டி
இன்று பார்!

உன்னிமை வெட்டிடும்
ராவண வெட்டிலே
என்னுயிர் முண்டமாய்
வீழுது, ஒவ்வொரு
இமைகளாய்த் தொங்கிடும்
கத்திகள் எந்தனை
கனவிலும் தள்ளுதே
ஏனடி...?

கலவியில்
உன்னை நான் தயிரெனெ
என்னை நீ மத்தென
உருட்டி உணர்ந்துமே
கடைகையில் திருப்தியின்
அமிர்தமாய் ஓர் துளி
உன் கடை விழிதனில்
உருள்கையில் தெரிகிற
வானவில் பிரிகையின்
புதிர் நிறை முடிச்சினை
புன் சிரிப்பவிழ்த்திடும்
கதிர் நிறை காலமும்
கடந்ததோ..? இன்று உன்
கண்களை எண்ணினால்
கண்களை நிறைக்கிற
தன் களை இழந்திடும்
தாப நீர் முட்டியே
விண் களை இழந்ததாய்
விரக்தியாய், பார்க்கையில்
வெண் களை இழந்துபோய்
வெறுங்கரு நீலமாய்
கண் முழிக்கறுப்பதாய்
காட்சிகள் அற்றதாய்
என் விழி அறியுதே
ஏனடி...?

அன்பினால்
ஆசை நரம்பினை
இழுத்தெடுத் திருவரும்
பாச நரம்பினை ஒட்டிய
பதியமும்
வீசி வளர்ந்தது விருட்சமாய்
இடையிலே
மோசம் மிகுந்தவோர்
காலம் எழுந்தெமை
முக்கிப் பிரிப்பதைக் கண்டியோ..?
அறிவிலாய்!
பாச நரம்பினைப் பற்றியுன்
கைகளால்
கூசுதலின்றி முட்சுவரிலே
தேய்துமே
வாச நினைவினை அறுக்க
நினைக்கிறாய்
தேய்த்து தேய்த்து நீ
அறுக்க முயல்கையில்
தெறித்தெழும் கீச் ஓசையில்
பல்லெலாம்
கூசி உடைந்து சிதறுது
குழந்தையே!

பாலைவனமதாய் நிற்பதாய்
எண்ணி நீ
பதைப்பதை இங்கு நான்
பார்க்கிறேன், ஒரு முறை
கைகளை நீட்டி நீ
கண்களைக் காட்டினால்
எம்மிடை வீசிடும்
பெருமணற் புயலினை
என் மனமலையினால் தடுத்துமே
உன்னை நான்
பசுந்தரையாக்கிப் படருவேன்
பாரடி..!

# 47. வேரறுந்த சோக வலி..

எம்முடைய இரவுகளில்
எழுகின்ற வேட்டொலியில்
அம்பிட்டிருக்காது
அவன் வாழ்வென்கின்ற
நம்பிக்கை தடுமாறும்
நாதி அற்ற வேண்டுதலை,
விம்மி வெடித்தழுது
வீங்கி உள்ள முகங்களினை,
துண்டுகளாய்ச் சிதறியதால்
திறக்கேலாப் பெட்டிகளை,
எட்டாம் நாள் முடிந்து
எல்லோரும் போய் விடிய
எமக்கே எமக்கான
ஏதுமற்ற வெறு வெளியை,

இவை தவிர யுத்தம்
வேறெதனை நமக்கென்று
இயைபாக்கி விட்டு
வைத்துப் போயுளது..?
வெற்றிவரின்
வீரத் தமிழ்க் கதைகள்
பேசுவதும், வேளைகளில்
மற்றவனின் காற்று
மாறி அடித்திடையில்
பெற்ற மனம் பற்றிப்
புலம்புதலும் வழக்காச்சு!

'போரின் அகோரப்
பொறிக்குள் உணராத
வேர றுந்த சோக வலி எல்லாம்
விண் என்று
போரோய்விற் பொங்கி
வெடிக்கும், அப்பொழுதில்
பெற்ற சுதந்திரத்தின்
பெருமை இதன் முன்னால்
குற்றவாளியைப் போல்
குறுகிவிடும்'
உண்மையுந்தான்..

வீடே வெறிச்சோடிப்
போய் விட்ட பொழுதொன்றில்
நாடே தான் வந்தென்ன
நமக்கிங்கு, என்பதுவாய்
காடே அதிரும் படி
கதற மனம் சொன்னாலும்
ஆடிய தசைகளின் ஆட்டம்
அடங்குதில்லை
நாடிய வாழ்வும் நமக்கான
விடுதலையும்
தேடி அடையும் வரை
தீராதோ இவ்வுணர்வு..?
பாடையிலே போம் பொழுதும்
பற்றிடுமோ விடுதலைத் தீ..?

## 48. காற்றுக்களும் காலமும்..

காற்றாகி நெஞ்சக் கனவுக்குள்
பல பூக்கள்
நேற்றோடு சருகாகிப் போச்சு
வரலாறு
தேற்றிக் கொள்ளவெனத்
திசை காட்டும் இடை வெளியில்
ஆற்றுப்படுத்தி
மன ஆறுதலை நாளைக்கும்
வான் பாய்ந்துடைக்கா
வழி சமைப்போம்
ஏனெனிலோ
எம் மண்ணில் பருவங்கள்
பல காற்றை உற்பவிக்கும்

தெற்கின் மேலிருந்தும்
வடக்கின் கீழிருந்த
கிழக்கிருந்தும் தேவை எனில்
வங்காள விரிகுடா தாண்டி
வலுப் பெற்றும்
காலச் சுழல் காற்று
எம் வாழ்வுக் காலத்தின்
கோலத்தையே மாற்றி
ஆச்சரியம் கேள்வி என
குறிகளென்ற அளவினிலே
குறித்திருக்கு, மனசொன்றி
வசனத்தைப் போட்டு
வரி வடிவம் தருவதுவும்
பந்திகளாய் ஆக்கி
பக்கங்கள் கூட்டுவதும்
காற்றடித்த இடம் காலம்
சரி பிழைகள் பற்றி எல்லாம்
விதி என்ற சொல்லாலே
விலகாமல் அளப்பதுவும்
போடுவதைப் போடுவதும்

இடுவதனை இட்டு நிரப்புவதும்
வரலாற்றை
வடிவான ஓர் நூலாய்
வார்ப்பதுவும் எம் கடமை.

ஆனாலும் ஓர் கவலை
உரைப்பன் யான்!

நேற்றெல்லாம்
வீட்டுக்கு வீடு வந்து
விடுதலைக்காய் பா பாடி
சாப்பாட்டுப் பாசல் பெற்று
சரிக்குச் சரி எம்முடனே
ஒன்றாய் இருந்து, உறவுணர்ந்து
மென்காற்றாய்
வேர்வைக் குரு குளிர வீசி
ஆழ் மனதுள்
அசைக்கேலா இடம் பெற்றமர்ந்து
அன்புச் சோலையினில்
கிளியாய் மாங்குயிலாய்
மனசு தொட்ட காலமெல்லாம்
இன்றைக்கு
இருக்கின்றார், இல்லையென்ற
பேச்சிடையே இடறுண்டு
வியாபாரக் காற்றாக வீசும்
கொடுமையினை
கண் முன்னால் கண்டு
கலங்கலன்றி என் செய்வோம்!

ஆற்றுப்படுத்த இங்கு
யாருமற்ற வேளையிலே
சோழகம் எழ
உங்கள் சுய ரூபம் மேலெழுந்து
காலெழுந்த படிக்குக் கடக்கிறது
நில்லுங்கள்..!

தேசத்துக் காற்றின்
திசைக்கன்று ஏற்றபடி
கட்டி அமைத்திட்ட
பாய் மரங்கள் மேலெழும்பும்
உலகத்துக் காற்று
ஒழுங்கின் மாறலுக்கு
ஈடு கொடுத்திழுத்தோடும்
இயல் வலுவை அடைந்திடு முன்
சூறைக் காற்றொன்று
சுழன்றடித்து எம்முடைய
வீடும் நாடும்
வெறிச்சோடிப் போயிற்று!

பாய் மரம் அறுந்தாலும்
படகெல்லாம் மூழ்கவில்லை
தோணிகள் அங்கங்கே
துணை அற்றுக் கிடந்தாலும்
துறை இன்றும் மூழ்காமல்
துடிப்புடனே இருக்கிறது!

எல்லோரும் கை கொடுத்தால்
வசம் இழுத்துக் காற்றொழுக்கை
வேராக மட்டும் மீந்திருக்கும்
மண்ணுயிர்க்கு
நீராக ஊற்றி நிறைப்போம்
விருட்சம் எழும்!
பிறகென்ன
தென்றல் தெருத் தெருவாய்
வீசும்!

## 49. அணையாத தீபம்..

அந்த விளக்கு இன்னும்
எரிந்து கொண்டே இருக்கிறது

நீ பிறந்திருந்தபோதில்
பாம்பெறும்பு அண்டாமல்
பக்கத்தில் ரா விளக்காய்
இதுவே எரிந்து கொண்டிருந்தது

வெட்கத்தை விட்டுச் சொல்வதானால்
நீ கருவில் உருவாகையிலும் கூட
காமாட்சி விளக்காய்
கை கொடுத்ததும் இதுவே,

மின்சாரத் தூணையே காணாத
எம் ஊரின்
கும்மிருட்டு வீடுகளில்
பகலில் கூட
இதனைத் தணித்து வைக்கவே
முடிந்தது,

நீ பள்ளிக் காலங்களில்
படிக்கின்ற போதும்
பாசறைக் காலங்களில்
படைக்கின்ற போதும்
உனக்கு
வெளிச்சமாய் இருந்ததும்
இவ்விளக்கே..

வழமை போலவே இன்றும்
காதைப் பிளக்கின்ற
குண்டோசைகளை நோக்கி
'பாலை மரம் போல
நீ போனாய்
பலர் சூழப் படத்துண்டாய்
வீடு வந்தாய்'
வாழ்வே இருண்ட பிறகு
வீட்டில் என்ன வெளிச்சம் என
எண்ணியும் கூட
அந்த விளக்கை என்னால்
அணைக்க முடியவில்லை

கால நினைவுகளைச் சுமந்தபடி
இப்பொழுதும்
அதே அந்த விளக்குத்தான்
ஒளி சிந்திக் கொண்டிருக்கிறது
உந்தன்
படத்தின் முன்னால்...

## 50. குஞ்சு பறந்த முட்டைக் கோது..

பரந்த வானத்தின் கீழே
இராணுவ வண்டிகளும்
குண்டுச் சிதறல்களும்
பிணங்களுமாய்க் கிடக்கின்ற
வீதியின் நடுவே
நமக்கு வழங்கப் பட்ட
வாழ்க்கை
நடந்து செல்கிறது..
பழைய நினைவுகளும்
கவிதைகளும், சில பாடல்களும்
பின்னிருந்து தள்ள
அப்பழுக்கற்று
நெஞ்சால் சிரிக்கிற
பல்லின்னும் முளைக்காத
பால் வாயின் புன்னகையில்
கிறங்கி
முன்னால் அடி எடுத்து வைக்கிறது
பாதம்
குஞ்சு பறந்த முட்டைக் கோதாய்
திரும்பலுக்கான
சாத்தியங்களற்று வழுகிப்போன
வாழ்க்கை
ஆயிரம் அவலங்களின்
நடுவிலும்
சிலிர்க்க வைக்கிற இப்படியான
சின்னச் சின்ன
உணர்வுகளுக் காகத்தானோ
இன்னமும் கூட
சீவித்துக் கொண்டிருக்கிறது..?

# 51. அதே வாசல்..

உரத்த நெஞ்சுகளிலும்
ஒளி சுடரும் கண்களிலும்
விடுதலைக்கான தேவை
ஊற்றெடுத்துப்பாய
எல்லாரும் ஒன்றாகி நின்று
போகும் வழி தேடினோம்
பல வாயில் கதவுகள்
திறந்திருந்த போதும்
உணர்வுகளின் அன்றைக்கான
ஒருமித்த தெளிவு
நாம் போகவேண்டிய
வழிக்கான கதவை
உடைத்துத்திறந்தது,
கையைக் கோர்த்தபடி
ஒன்றாக உள்நுளைந்து
உரக்கக் கேட்டோம்
எமக்கான உரிமையை,

விடுதலைக்கான
நெடிய பாதையில்
இடறுப்பட்டு
ஒரே கொள்கை வழிக்கதவால்
உள் நுழைந்ததை
காலமும், நினைவுகளும்
எம்முள் மறக்கடிக்க வைத்தது,
விறாண்டி விட்டுக்கடிக்க மறக்கும்
எமக்கான அறணை விதி
அகப்பட்ட வெடிப்புகளிலெல்லாம்
எம்மை அடைக்கலம் புகச்செய்தது,

எட்ட நிற்கின்றவர்கள்
மட்டுமல்ல தன்னுடைய
வீட்டின் வெடிப்புகளுள்
இருக்கின்ற எம்மவர்களும் கூட
எந்நேரமும் ஞாபகம் வந்து
தன்னைக் கடித்து விடலாம்
என்ற பயத்தில்
அடிப்பதற்கான ஆயத்தங்களோடு
எப்போதும் அவன் இருக்கிறான்,

மரண பயமும்
கொஞ்சம் சுரணை உணர்வும்
நாம் வெளியேறலுக்கான
கதவினைத் தேட வைக்கிறது,
எல்லாரும் ஒன்றன்பின் ஒன்றாக
ஆளாளுக்குத் தெரியாமல்
கிடைத்த ஓர் கதவின்
வாசல் வழியாக வெளியேறுகிறோம்..
நாம் உள்ளே வந்ததும்
இதே வாசல்
வழியாகத்தான் என்பதனைத்
தெரியாமல்...

## 52. இது நடக்கும்..

தமக்கென்றோர் மொழி
தமக்கென்றோர் கலாச்சாரம்
தமக்கென்றோர் வாழ்வு முறை
தன்னை வடிவமைத்து
தன் போக்கில் வாழ்கின்ற
இனக் குழுமம் ஒன்றை
இடையிட்டுப் பெருகிவந்த
இன்னோர் இனம் வந்து
இடித்துத் தன் காலுள்
கண் முன்னே போட்டுக்
கதறக் கொழுத்தையிலே
அழுக்கம் தாளாமல்
அதை எதிர்க்க அவ்வினத்தின்
உள்ளே இருந்தொருவன்
எழுதல் உலக விதி
அவனின் பின்
முழு இனம் திரண்டு
மூச்சைக் கொடுத்திடுதல்
எழப் போகும் ஓரினத்தின்
இருப்பின் வரலாறு

நீண்ட போராட்ட
நெடு வெளியில் மண்ணுக்காய்
மாண்ட வீரர்கள்
மன வலிமை ஓர்மத்தை
தூண்ட, துவளாமல்
தொடர்கையிலே அவன் பற்றி
இடைவெளியில் மனம் சோர்ந்து
இடிந்தோர் விதையற்று
வடிக்கின்ற விமர்சனங்கள்
வாய் நாற்ற வீணீர் தான்
தவிர்க்கேலாதெனினும் ஓர்
தடையல்ல, படிக்கற்கள்
இதையெல்லாம் தாண்டியவன்

எடுத்தாண்டு நகர்கையிலே
இடைவெளியில் ஏதேனும்
இடர்கள் நேர்ந்திடலாம்
விடை கூடச் சொல்லாமல்
விம்பம் மறைந்திடலாம்
உடைந்துருகிச் சிலகாலம்
ஒடுங்கிடலாம் அவன் படைகள்

ஆனால்
நாடென்றால் இது தான்
நாமிதனை அடைவதற்கு
நாடிய வழிமுறைகள்
நம்பிக்கை இவைகள் தான்
தேடி உலகெல்லாம்
திரிந்தாலும் இறுதியிற் கை
கூடும் வழி இது தான்
என்கின்ற குறிப்பெங்கள்
நாடி நரம்புகளில்
நாளாந்தம் வளர்தசையில்
ஓடித் திரிகிறது உள்ளே,
அவன் இருப்பு
இறுகிய பாறை அல்ல
இயங்காமல் இருப்பதற்கு
திறந்த குபுகுபுக்கும்
நீரூற்று, அதிற் தோய்ந்த
சிறந்த மன வேர்கள்
சிந்தனைகள் எல்லாமே
உகந்த ஓர் நாளில்
ஒன்றாகும் அன்றைக்கு

திறந்த வானிருந்து
வருவது போலொருவன்
பிறந்து வருவது போல் வருவான்
அவனடுத்த
படை நடத்திச் செல்வான்
பார்த்துணர்ந்த மாதிரி யை
உடைய வழியாலே
ஒழுங்கமைப்பான் அவனொன்றும்
வேற்றுக் கிரகத்தின்வாசியல்ல
விழிப்படைந்த
நேற்றுவரை எம்மோடு
நிமிர்ந்து தோள் கொடுத்த
நம்முள் ஒருவன் தான்
நமக்காக வாழ்பவன் தான்

காலம் அவன் பெயரைக்
கட்டமைக்கும், அவனுடைய
வானத்தில் நிற்பதற்கு
வடிவமைத்த அவன் மேகம்
கானகப் பரப்பினைக்
கடக்கும், ஓர் நாளில்
நாமெல்லாம் அதனை
நம்தேச மேகம் தான்
ஓம் என்று சொல்லி
ஒன்றாய்க் கை கோர்க்கையிலே
மேகம் திறந்து
விடியல் மழை பொழிந்தெங்கள்
தாகம் தணிந்து தளிர்க்கும்
இது நடக்கும்..

# 53. வாழ்தலுக்கான ஆசை..

ஊரடங்கு பிறப்பித்த
உரத்த மௌனத்தைக் கலைத்தபடி
கந்தக வாசனை அடிக்கும்
எம் வளவுப் பதுங்குகுளிக்குள்
மறு பிறப்பை அண்மித்த
அலறலுக்கு மத்தியில்
அவன் பிறந்தான்,

வளர்ப்பதற்கென எமக்கு
வழங்கப்பட்டிருந்த சூழல்
மெல்லிய காற்று மேனியை வருட
ஏகாந்தமாய் இசையை முணுமுணுத்தபடி
கை வீசிச்செல்லும் காலமாய்
இருக்கவில்லை,
கிரந்தி எண்ணை சளித்தொல்லை என
ஒவ்வொரு வகுப்பாய்
பல்கலை வரைக்கும்
சும்மா அவனைக்கொண்டுவர
முடிந்ததில்லை

ஆட்டாத தலை பார்த்தும்
ஆட்கடத்தாத்தெரு பார்த்தும்
கோட்டைச் சமருள்ளும்
கொடிய இடப்பெயர்வுள்ளும்
மாட்டாது காப்பாற்றி வளர்த்து
அவன் வாழ்வு
மலர்கின்ற காலக்கனிவை
கொடுப்பனவை
தாகம் நிறைந்த தவிப்போடு
பார்த்திருக்க..
எங்கிருந்துவந்தீரோ வந்தீர்

மிக இயல்பாய்
பெயர் சொல்லிப் பிள்ளையினை
அழைத்து சிரித்தபடி
கன்னா மண்டையிலே வைத்து
விசை அழுத்திவிட்டு
என்ன பெரிதாய் நடந்து விட்டதென்பதுவாய்
உம் பாட்டில் போய்விட்டீர்..

எங்கள் இத்தனை காலக்கனவுகளும்
காத்திருப்பும்
அணுஅணுவாய்ப்பார்த்து
ஆக்கிவைத்த அத்தனையும்
ஓர்குண்டில் உடைந்து சிதறி
பிடரி வழி
பெருங்குருதிப்பெருக்காக ஓட
கண் முன்னே
பிரண்டுகிடக்கிறான் பிள்ளை

வாழ்வின் ஒவ்வொரு அடியையும்
தூக்கி வைக்க
எத்துணை விலை கொடுத்தோம்
என்பது பற்றி
கொலை உணர்வை விரல் நுனியில்
வைத்திருக்கிற உமக்கு
எதுவுமே உறைத்துவிடப் போவதில்லைத்தான்
ஆயினும்
நெஞ்சால் ஒன்றும்மைக்கேட்கிறேன்

வாழ்தலுக்கான எங்களின்
இத்துணை ஆசையிலும்
மேலானதா
கொல்வதற்கான உங்களது
தேவை..?

வாழ்வே சோர்ந்தொடுங்கி
வதங்கிப் போய்க் கிடக்கிறது!

## 54. இருக்கின்றான் என்பதுவே..

வாசலிலே வரும் போதே
வயிறு தட்டிப் பசிக்குதென்று
ஆசையாய்க் கேட்கின்ற
அருமை மகன் நேற்றிரவு
வீடு வரவில்லை!
ஏனென்றே புரியாமல்
வீதி எல்லாம் அழுதபடி
திரிகையிலே மூலை ஒன்றில்
சைக்கிளும் செருப்பும் அவன்
கைவார் அறுந்த மணிக்கூடும்
கண்டெடுத்தோம் மற்றபடி
ஓர் முடிவும் தெரியாமல்
உறைந்திருந்தோம்..

போக்கறுந்த
சாத்திரத்தின், சகுனத்தின்
சாப்பிழைப்பு வாழ்விடையே
நெஞ்சினிக்கும் சேதி ஒன்று
நிகழ்ந்த தின்று!

பற்றை ஒன்றில்
உருக்குலைக்கப்பட்டு
உயிராடிக் கொண்டிருக்கும்
இருதயம் மட்டும்
இழுத்திழுத்துத் துடிக்கின்ற
இன்னும் உணர்வறுக்கா
இளம் பெடியன் சாட்சியத்தில்

இரண்டு நாள் முன்பாக
இன்னாரின் வதை வீட்டில்
காற் குதிகள் வெட்டுண்டும்
கை முறிந்தும் மூக்காலே
கொப்பளித்துக் குருதி வர
குளறி விழும் என் மகனை
தப்பிக்க முன்னர்

தான் கண்ட துன்மை
உண்மையென
ஒப்பித்தான் என்னிடத்தில்
உயிர் சிலிர்த்தேன்
உலகமெலாம்
என் வசமென்றானதுவாய்
உணர்ந்தேன்,

வேங்கடவா!
வைத்த நேத்தி வீண் போகவில்லை
வருடங்கள்
பொய்த்தோடி நான்கைந்தாய்ப்
போனாலும், புத்திரனை
கண் முன்னாற் காணாத
கவலை எனைச் சுட்டாலும்
தலை பிடித்து மூக்கிழுத்து
எண்ணைக்குள் தோய்த்தெடுத்து
பார்த்துப் பார்த்து நான்
வளர்த்து விட்ட மகன் உடலம்
கீலம் கீலமாய் கிழிந்து
சிதைவடைந்து
அம்மா! என அவன் அலறும்
குரல் உணர்ந்து என் வயிறு
உள்ளுக்குள் சிதறி
ஒன்று மற்றுப் போனாலும்

யாரேனும் எங்கும்
என் மகனை
அவர்கள் இன்னும்
நார் நாராய்க் கிழித்துப்
போடுகின்ற செய்தியினை
எந்தனுக்குச் சொல்லுங்கள்
மகிழ்ந்திடுவேன்! ஏனென்றால்

'இருக்கின்றான்' என்பதுவே
இப் பிறப்பில் எந்தனுக்கு
அப்பாவித்தனமான
ஆறுதலாய் ஆகட்டும்..

# 55. அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்

இம் மண்ணின் விடிவுக்காய்
எழுந்துரத்த கரங்களுக்குள்
உன்னுடைய கையும்
ஓர் திருக்கை

எம்முடைய விடுதலையைப்
பெற ஆர்த்த குரற் சேர்வில்
உன்னுடைய குரல் நாணும்
ஒன்று

உன் பற்றி
ஏராளம் வீரக் கதைகளெல்லாம்
பெடியளிடை
பேசப் பட்டதுவாய் நினைவுண்டு
அதற்குள்ளே
ஏதோ சனி பிடிச்சாட்ட
நீ வழி மாறி இப்பொழுதில்
காதாற் கேக்கேலா வகையில்
உன் கதைகள்

உன் தரப்பு நியாயங்கள்
ஒரு பக்கம் இருக்கட்டும்
உண்மை யதார்த்த நிலை
என்ன..?
வான் கோள்கள்
ஒன்றின் ஈர்ப்பிற்தான்
வலம் வருது அதிலொன்று
சற்று நிலை மாறி
ஒழுக்குடைத்துத் தடம் புரளின்
எரி கல்லாய்த் தான் போகும்
ஈதுலக நியதியடா

எல்லாம் சொல்லி உனை வளர்த்த
பெருந் தலைவன்
எரிகல்லைப் பற்றி மட்டும்
ஏனுனக்குச் சொல்லலையா?

போராட என்று
புறப்பட்டு வந்திட்டு
வீரச் சாவின்றி
வீண் சாவாய் ஏன் போறாய்?

மண்ணுக்காய் பல காலம்
மார் தந்து நின்றிட்டு
மாவீரர் படுக்கையிலும்
மண்ணற்று ஏன் போறாய்?

சுத்தி உனை நிற்கும்
காரணத்தால் சுடப்படுவோர்
தறுதலைகள் என்றாலும்
தமிழ்த் தலைகள் அல்லோடா?

வேண்டாம் வீண்சாக்கள்
ஒதுங்கி விடு வெடி விழுந்தால்
தமிழ்த்தாயின் மகனெல்லோ
தலை சிதறிச் சாய்கின்றான்!

பின்னால் நிற்கின்ற
பெடியள் வீண் என்பதன்றி
உன்னால் இனி ஒன்றும்
ஆகி விடப் போவதில்லை,

பசை இருக்கும்வரை
பயன்படுத்தி வேசையினை
கசக்கிப் பிழிந்தெடுத்து,
காய்ந்தவுடன் கழற்றி விடல்
நீ அறியாததல்ல
நின் வாழ்வும் அப்படியே!

மாற்றுக் கருத்தெண்டும்
மயிரெண்டும் கதையளந்தே
காட்டிக் கொடுத் தழித்தோர்ஒரு பக்கம்,
நீ வேறு
கூட்டிக் கொடுத்தெம்மைக்
கொல்லுகிறாய்!

நாளைக்கே
விதை பிளந்து நாற்றுக்கள்
வீரியத்தோடெழும் போது
களை எடுத்தே தம் கதையைத்
தொடங்கும் அப்பொழுதும்
விலை கொடுக்கப் போவது யார்
விளங்குஉன்னுடைய
இப்போதைக்கான
எழுமாற்று இருப்புக்காய்
தப்பாக பெடியள் போர்க்குணத்தை
உனக்காக
அப்படியே மாற்றி நசுக்காதே,

ஒரு வேளை
நீ இறந்து போனாலும்
உன் எலும்பை, பரம்பரையை
கட்டாயம் வரலாறு
காறித் தூக்கிலிடும்!
எட்டப்பர் எனச்சொல்லி
இகழும் மறவாதே!
வெடிபட்டு மண் வீழும்
வீரம் உனக்கில்லை
அடிபட்டுச் சாகாதே
அரக்கு ஒதுங்கி விடு..!

## 56. நிச்சயமற்ற காலமும் நினைவுகளும்..

யாழ்ப்பாண இடப்பெயர்வின்
துயர் நிறைந்த நாள் ஒன்றில்
ஆளாளைப் பார்த்து
அனுதாபம் சொன்னபடி
மீளோலாத்துயர் தோய்ந்து
மிகும் மாலைப் பொழுதிடையே
வீதிக் கரையோரம்
உனைப் பார்த்தேன் பக்கத்தில்
யாரும் உன் ஆட்கள் இல்லை
நீயோ தனியாக
போகுமிடம் புரியாது நின்றிருந்தாய்
நான் மெதுவாய்
ஏதும் உதவி..? எனக் கேட்க
பேச்சில்லை
சரி நகர்வோம் என எடுக்க
என் சைக்கிள் தனைப் பிடித்தாய்
நான் புரிந்து நின்றேன்
நாலைந்து மணி நேரம்
பேச்சேதுமில்லை
பிறகுன் வீட்டார் வர
அழைத்து வந்தெந்தன்
வீட்டினிலே இருக்க வைத்தேன்
ஆயிரம் நன்றி என்பதுவாய்
உன் கண்ணால்
பாயிரம் ஒன்று பாடாக் குறையாக
சிமிட்டி வைத்தாய்,

மாலைகளில் எல்லாம்
மாமரத்தின் கீழிருந்த
தென்னங் குத்திகளில் இருந்து
தேனீரை என்ன ருசி என்று
குடிப்பதுவும் இடைக்கிடையில்
கண்ணால் கண்ணுண்டு
களித்துருவிப் பார்த்தபடி
பேசிக் கொண்டிருந்தோம்
எத்தனை நாள்..

சைக்கிளிலே டைனமோ சுற்றி
வயரிழுத்து வானொலியில்
பூட்டி பெடல் சுத்த பாட்டு வரும்
நேரடியாய்
பேசேலாச் செய்திகளை
அதனூடு பேசிடுவோம்

சாமம் தடவி நான்
வீடு வரும் வேளைகளில்
பசிக்கேல்லை அதுதான்
எனப் பெரிய பொய் சொல்லி
என்னோடிருந்தே உணவுண்பாய்
உன் அப்பா
மெல்லச் சிரித்திருமி
திரும்பிப் படுத்ததனை
பல முறை நான் கூர்ந்து
பார்த்திருக்கேன்,

கோயிலுக்கு
ஒன்றாகத்தான் சென்றோம்
பல முறை நாம்
ஒருதடவை
கும்பிட்டுவிட்டு வந்து
பனங்குத்தியினில் இருந்தபடி
பேசிக் கொண்டிருக்க
இடை நடுவால் குரங்கொன்று
பாய்ந்தோட
நீ பயந்தடித்து ஓடிவந்து
பற்றினாய் என் தோளை
அப்போதில் உன் கைகள்
அனலாய்க் கொதித்ததையும்
உடம்பும் வரும் மூச்சும்
தணல் போல வீசித் தகித்ததையும்
பார்த்துவிட்டு
காய்ச்சலோ எனக்கேட்க
நீ சிரித்தாய் கண்ணிரெண்டும்
சிவப்பேறி நீ மாறிப் போயிருந்தாய்
கை மெதுவாய்

நடுங்கிக் கொண்டிருந்ததையும்
கவனித்தேன், மறு திங்கள்

அடுத்த இடப் பெயர்வின்
அரங்கேற்றம் தொடங்கிற்று
வன்னிக்குப் போவதென நீங்களும்
இன்றைக் கேலாதென நாங்களுமாய்
அந்தக் கடைசி மாலையும் வந்தது..!
வாகனம் கூட வந்தாயிற்று
நீங்கள் புறப்பட
பிணமெடுத்த வீட்டின்
பேரமைதி எங்கும்,
எல்லாரும் ஏற நீ மட்டும் ஏறவில்லை..!
'சொல்லேலா வார்த்தைகளின் சோகத்தை
அப்படியே
அள்ளி அழுதூத்தத் தொடங்கிவிட்டாய்'
என்னாலும் ஒருவார்த்தை
தன்னும் இயலவில்லை முடியாமல்
இறுகிப் போய் நின்றிருந்தான் அசையாமல்
வாய்திறந்தால்
'கண்ணிரெண்டும் சிதறிக்
கதறி அழ வேண்டிவரும்
விண் தின்ற வெவ்வழலை விஞ்சி
என் நெஞ்செரியும்'
என்கின்ற பயத்தில் நான்
இறுகி நின்றேன் அசையவில்லை
நீயோ நிறுத்தவில்லை
அழுதழுது கொண்டிருந்தாய்
ஓமோம் என்பதுவாய்
உன் தந்தை தலை அசைக்க
ஏதோ சொல்லவென வாயெடுத்தாய்
நானுந்தான்,

அதற்கிடையில்
சன்னங்கள் சிதறிவிழ
மாமரத்து இலைகளெல்லாம்
சடசடத்து
பயமுறுத்தத் தொடங்கிற்று!

ஓட்டியுமோ
இனியும் நிக்கேலா
எனக் கத்தத் தொடங்கிவிட்டான்
'வாய் திறந்தும் வார்த்தை
வருவதற்குள்.. முடியாமல்
நீ ஏற வேண்டி ஆயிற்று
வாகனத்துள்,

கை காட்டி விடை சொல்லும்
நெஞ்சழுத்தம் எனக்கில்லை
தலை ஆட்டி மட்டும்
விடை கொடுத்தேன்
நீயுந்தான்
வாகனம் போக வாசல் வரை
ஓடி வந்து
ஒழுங்கையால் அது போய்
திரும்பு மட்டும் படலையிலே
பசு பார்த்த கன்றாய்
நின்றிருந்தேன்,

மறு நாளே
வன்னிக்கும் யாழுக்கும்
தொடர்பறுந்து போயிற்று
இன்றைக்கு பதினாறு
ஆண்டுகளும் ஓடிற்று..!
'இதுவரையும் எந்தத் தொடர்புமில்லை'
ஆனாலும்
ஏதோ.. நான் இருக்கேன்
எங்கே நீ உள்ளாயோ..?
சூதோ சூழ் வினையோ போகட்டும்

நண்பர்காள்..!
எங்கேனும் என் உறவைக்
காண்பதற்கு நேரிட்டால்
ஒரே ஒரு தகவல் சொல்லிடுங்கள்
எனக்கிப்ப
"மகன் ஒருத்தன் பிறந்திருக்கான்"
என்று மட்டும்.. என்று மட்டும்

## 57. ஒரு கணம்.. ஒரு தருணம்..

ஆக்கிரமிக்கப் படுகின்றன
எம்முடைய நிலங்கள்,
எதிர்த்தெழும்
குரல்கட் கெதிராக
வடிவமைக்கப் படுகிறது
மரண முற்றுகை.
மூச்சான சுவாசங்களை
மணந்து பிடித்து
பட்டியலிடப் படுகிறது
பேச்சறச் செய்யவுள்ளோர் பெயர்கள்,

கால நீட்சியிலும் கந்தக மழையிலும்
களைத்துப் போனதெம் மனசு,
எந்தவழி சென்றாயினும்
இருப்பைக் காப்பதும்
ஏதோ..வாழ்ந்தியற்கையாய்
இறப்பை எய்தலும்
கொள்கை விளக்கமாய் ஆனது,

போகப் போக
சிறுக்கும் துண்டு நிலமும்
பெருக்கும் போர் அழுத்தமும்
கேள்விக்குறி ஆக்குகின்றன
சகல விலை கொடுப்புகளையும்,

ஒரு கணம்..
ஒரு தருணம்..
மாற்றி விடப்போகிறது
சகலவற்றையும்..!

நம்ப முடியாதவையாய்
எமைச் சுற்றி நின்ற எல்லாமே
நம்பும் படியாய்
நம் முன்னே வீழ்ந்துடையும்..
அவலக் குரல்களாய்

அலைந்தெங்கும் திரிகின்ற
அத்தனை தியாகக் குரல்களுமே
சாந்தியுற்று
ஆசீர்வதிக்கின்ற அசரீரி
எம் கண்ணில்
ஆனந்தக் கண்ணீராய் ஒழுகி
நிலம் நனைக்க
இனிப்பான மண்ணுண்ணும்
எறும்பெல்லாம்,

கருக்கல் பொழுதொன்றில்
வானம் எம் வசமாகும்

விடிகின்ற அதிகாலை
துயரங்களாலும்
இழப்பின் விம்மல்களாலும்
நிறைந்திருப்பினும்
சுவாசத்திற்கான காற்று
திருப்தி நிறைந்ததாக
எமைச்சுற்றி வரும்,
கூச்சல்களாக ஒலித்த
அதி காலைக்குருவிகளின்
கீச்சிடல்கள்
சுகானுபவம் மிக்க
இனிய சங்கீதமாகத் தோன்றும்,

இவை எல்லாம் அமைந்து விடப்போவது
எதிர் பார்க்கப்பட்ட
பெரியதொரு போர்முடிவில் அல்ல
மிகச்சிறிய சம்பவத்தில்
தனி மனிதனொருவனின்
வீழ்ச்சியிலும் கூட,

உண்மைதான்..
உலகெங்கணுமே இப்படித்தான்
சாத்தியமாயிற்று
ஓர்மத்துக்கும் மெய்ம்மைக்குமான
பரிசு.

## 58. கொடுப்பனவு..

போகின்ற பாட்டுக்கு
போகட்டும் என வாழ்வை
ஆகின்ற படிக்கு அதன்வழியே
போட்டு விட்டு
வேகமோ எந்த ஒரு விவேகமோ
அணுகலின்றி,
சும்மா நடந்துலகை
சுற்றித்திரிந்த என்னை
பந்தம் ஒன்றில் இட்டுப்பதித்தாய்
நல்லூரா...
வண்டாடிப்பூமலரும் வடிவழகை
மகன் சிரிப்பிற்
கொண்டாடி மகிழ்கின்ற
கொடுப்பனவை எனக்களித்தாய்

சமதரையில் நடத்தலே இனிச்
சாத்தியமிங்கில்லையென
உமலாகிக்கிடந்த என் உள்ளத்தில்
எப்படியும்
வரம்பு பல கடந்தும் வாழோணும்
எனும் பிடிப்பை
மழலைச்சொல் உதிர்ப்பொன்றில்
மலர்வித்தாய், என்மண்ணில்
கால் நூற்றாண்டாகக் கண்டுணர்ந்து
வாழ்வறிந்து
பட்ட அனுபவத்தில் பதப்பட்டு
வாழ்வொன்றை
திட்டமிட்டு அமைப்பமெனத்
தெளிய, பொசிப்பின்றி
உயிர்பிரியும் மிகஅருகில் எனைஉரசி
மண்ணை விட்டு
பெயரளவில் பிணமில்லை என்றாக்கி
இடம் பெயர்த்தாய்,

அந்நிய வாழ்வொழுக்கும்
அணுவளவும் ஒவ்வாத
மண்ணின் வாசனையும் மனிதர்களும்
என்வாழ்வின்
இறுதியினை முடித்து வைக்கும்
வரந்தந்தாய், இருக்கட்டும்
கல்லூரிச் செம்பாடும்
கவிஅரங்க மேடைகளும்
நல்லூரின் ராவீதி நனவுலகும்
குருதியிலே
குளித்துத்தனை வளர்த்த
போர்க்கால வரலாறும்
தெரியாமல் என்பிள்ளை வளர்வானோ...
கதிர்வேலா...!

புரியாத வாழ்வும்
புதிர் நிறைந்து ஓடுகிற
தெரியேலாக்காலத் திருப்பங்களும்
ஒருவேளை
எரியாமல் விட்டுவைக்கும்
ஏழெட்டுக் கவிதைகளில்
என்கவியும் ஒன்றாக எஞ்சுமெனில்
அதன் அர்த்தம்
புரியாது விட்டாலும்
மகன் அதனைத் தன்பெயரின்
மரியாதைக்காகவேனும்
மடித்தெங்கோ வைத்திருப்பான்
உரிய காலம்வர உணர்வான்

அப்போதில்
தெரியவருவேன் நான்
அது போதும் இப்பேற்றை
அருள்வாயா நீ எனக்கு
வேலா..?

## 59. நிறுத்தமற்ற பயணம்..

என்னை எதிர்த் திசையில்
இயல்பாகக் கடந்தபடி
மலை ஆறு மின்கம்பம் மரநிரைகள்
மனிதர்கள்
ஓடிப் போய்க்கொண்டே இருக்கின்றார்
ஓய்வின்றி

உயிர் வாழ்தல் என்கின்ற
ஒற்றை வரத்துக்காய்
நான் ஓடிக் கொண்டெங்கோ
போவது போல் எதிர் கடப்போர்
தாமும் போய்க் கொண்டே
இருக்காரோ..

என் பயணம்
வீட்டைக் கடந்து வீதியைக் கடந்து
சாவைக் கடந்து சந்தியைக் கடந்து
ஊரைக் கடந்து நாட்டைக் கடந்து
உலகினில் உள்ள
பெரிய சிறைகளின் கம்பிகள் கடந்து
குறுகி அழுதும் குலைந்து சிதைந்தும்
வெறியாய் உள்ளே எரிகிற ஒன்றில்

தெரியா வீதி திசைகள் கடந்தும்
புரியா நிலைமை முன்னே புதிராய்
எரியும் போதிலும் இத்தனை காலமாய்
வந்த பயண வீதிகள் எல்லாம்
வரண்டு வெடித்துச் சிதைந்தது கண்டும்
திரும்பிப் போனால் வந்த அப்பாதை
இருந்த இடமே இல்லையாய் ஆயினும்
தொடக்கப் புள்ளியை

சுற்றும் உலகின் சுழலும் வழிகளால்
எப்படியேனும் அடைவேன் என்று
ஏதோ உள்ளே மனசு சொல்வதால்
இன்னும் பயணம் நீளுது..

என்னுடன்
ஒன்றாய்ப் பயணம் வந்தவர் இடையே
ஒவ்வொன்றாகக் கழன்று போவதும்
விதியின் வழியில் புதியோர் சில பேர்
எதுவோ டென்னோடிணைவதும்
போவதும்
ஒவ்வொரு கண்டத் தகட்டிலும்
எத்தனை எத்தனை தோழர்
என்னுடன் சேர்ந்து
ஒன்றாய்ப் பயணம் செய்தார்
இடையில்
எந்தத் தொடர்புமே இன்றி
அவரவர்
தன் தன் பாட்டிலே போயினார்
பறக்கையில்
எதிரே தாண்டும் பறவை ஒன்றை
இன்னொரு பறவை ஏதோ மொழியில்
சின்ன வார்த்தை சொல்லிப் பறப்பதாய்
எந்தன் பயணம் செல்லுது..
எத்தனை பாதை எத்தனை பயணம்
எத்தனை மனிதர் ஆயினும் இன்னும்
எந்தன் பயணம் முடியுதே இல்லை
அந்தத் தொடக்கப் புள்ளியை
அடையுமுன்
எந்தன் மூச்சு நிற்குமோ என்ற
எண்ணமும் இடையிடை எழுகுது
ஆயினும்
சொந்த விருப்பம் கேட்டா உலகைச்
சுற்றிச் சுற்றிப் பாதைகள் நீளுது..?

எந்தன் கவலை இதுதான்
இத்தனை
பட்டுச் சிதைந்து பாதியாய்க் கரைந்து
திட்டுத் திட்டாய் உறவும் பிரிந்து
சொட்டுச் சொட்டாய் இறந்து
இறுதியில்
சொட்டாதிருக்குமோர்
சொட்டு உயிருடன்
தட்டித் தடவி அந்தப் புள்ளியை
அடைந்தேன் என்று வைப்பினும்
இத்தனை
பட்டுக் கரிந்த வலியின்
பாதியில்
பாதிக்காவது ஈடாய் அந்த
எண்ணப் புள்ளியும் இருக்குமோ என்ற
எண்ணம் என்னுள் இறகாய்
முளைத்தும்
ஏதும் நிறுத்தம் இன்றிப் பயணம்
நீளம் நீளமாய் நீளுது
நீளுது...

# 60. துயரப் பெருவெளி..

துப்பாக்கி வேட்டுகளுக்குப் பயந்து
ஐம் பூதங்களும் அன்று
அடங்கியிருந்தன

நீரின் ஆவி போதாதென்று
குண்டு துளையிட்ட
துவாரத்தின் வழியால்
மேலே மேலே தொடர்ந்தெழும்
வீரனின் ஆவிதனையும்
ஆசை மிகுந்து
அள்ளி அள்ளிக் கையால் வழிய
கொள்ளை விருப்பில் குடித்தது
வானம்

ஈரம் ததும்பி வழிந்தும் நிலமோ
இன்னும் அடங்காத் தாகம் நிறைந்து
ஓடிய குருதி வெள்ளம் முழுதும்
ஓவென திறந்த வாயால் குடித்தும்
அவா நிறைந்து இன்னமும் தேடி
குருதியை உறிஞ்சிக் குடித்தது

காற்றும்
உலகச் செவிகளிலே
உரத்துப் படும்படியாய் எங்கள்
அவலக் குரல்களை
அள்ளிச் செல்லவில்லை
வெடியின் அதிர்வில் காற்றுக்கும்
வெடித்துச் செவிப்பறை
கிழிந்தொழுகி
குழந்தை கதறும் அழுகை ஒலி
வழுகிக் காதால் விழுந்ததுவோ..

உள்ளே கனென்று எரிந்த தீயில்
நாடே அல்லவா எரிந்திட வேண்டும்
பாடை கூடப் பற்றிடவில்லை
சாம்பல் பூத்துக் கிடக்கலாம் உள்ளே..
ஊதி வளர்த்த ஓர்மக் காற்று
வாயே திறக்க மறுத்ததால் தீயும்
ஆர்வமற்று அடங்கிக் கிடந்ததோ..?

தேவை அற்ற பொழுதின் போது
தென்னை அளவு கிளரும் கடலும்
மூசிப் பேசும் வழக்கம் நிறுத்தி
மூச்சை நிறுத்திக் கிடந்தது
அலை தான்
கையைச் சுழற்றி எறிந்தால் அந்தக்
கரையில் வீழும்
கல்லெறி தொலைவில்
இருக்கும் எங்கள் தொப்புள் கொடிகள்
எத்தனை கோடி ஆயினும் அவர்கள்
கிராமக் கோடி ஒன்றில் தினமும்
அடி உதை வாங்கும் குடியன் மனைவி
எதுவும் பேசத்திராணி அற்று
அழுதும் தொழுதும்
விதியினை நொந்தும்
அறைக்குள் சுருண்டு படுப்பதைப் போல
எதற்கும் துணியா பழக்கம் வந்து
கடலும் தனக்குள் அழுது கொண்டு
அவர்களைப் போலக் கிடந்தோ
அறியேன்..?

உண்மையில்
நடந்த கொலைகளின்
வன்ம அழுத்தம்
மூச்சை அழுத்தி முழிகள் பிதுங்கி
பொறியும் சிதற ஐம் பூதமும்
கிளர்ந்து

புயல் அடித்தும் நிலம் பிளந்தும்
அதன் நடுவால் தீ எழுந்தும்
ஊடறுத்துக் கடல் புகுந்தும்
வானுடைந்து நிலம் விழுந்தும்
நாடே இரு துண்டாய்ப்
பிளந்திரண்டு நாடாக
ஆகி இருக்கோணும் அம்மாணை
ஆனால் எதுவும் நடக்கவில்லை..!

எந்த மண்ணிலே பிறந்தாரோ
எந்த மண்ணிலே வளர்ந்தாரோ
எந்த மண்ணினை ஒவ்வொரு துளியாய்
விரும்பிப் போரிட வந்தாரோ
எந்த வானினைப் பார்த்துத் தங்களின்
திசையினை அறிந்திடத் தெரிந்தாரோ
அந்த மண்ணில் ஒரு பிடி தன்னும்
கைகளால் தொட்டிட முடியாமல்
அந்த வானின் அழகு முகத்தை
ஆவி பிரிகையில் பார்க்காமல்
எங்கிருந்து மரணம் வருகுது
என்பதும் கூடத் தெரியாமல்
இருண்ட கண்களில்
எல்லாம் இருண்டிட
சுருண்டு வீழ்ந்ததை எண்ணுகையில்
ஒவ்வொரு மயிர்த் துளைக்
கண்களும் கண்ணாய்
அழுது துடிக்குது ஆற்றாமல்.

அவளின் வாழ்வோ
வார்த்தைகள் அற்ற துயரப் பெரு வெளி
இறுதிக் கட்டப் போரின் வெடிப்பில்
கடலின் களத்தில் கணவனை இழந்தாள்
அவனின் நினைவாய் கையில் குழந்தை ,
பச்சை உடம்புப் பத்திரம் துறந்து
கண்ணைத் துடைத்து நடந்தாள்
குழந்தையும்
மாத்தளன் மண்ணில் சிதறி விழுந்தது

எல்லாம் போன நிலையிலும்
மண்ணை எண்ணி இன்னமும்
ஏறி நடந்தாள், இறுதியில்
கயவனின் பிடியில் காயம் வருந்தி
சிதைந்து சிதைந்து வருந்தி மடிந்தாள்

கொத்தாய் குலையாய்
குடும்பமாய் இன்னும்
எத்தனை கொடுத்தும்
விடியா மண்ணே..
என்ன தான் கேட்கிறாய்
இன்னமும்..?

ஆனால்
இறந்த வீரரின் ஆடையைக் கழற்றி
பிறந்த உறுப்பினைப் பார்த்து ரசிக்கிற
அறுந்த கேவலச் சாதியே நீங்களும்
திறந்த மேனியாய் எங்களின் வீதியால்
பறந்து ஓடலைப் பார்த்ததன் பின்னரே
இறக்கும் என்னுடல் அன்றுதா னுடலினைத்
துறக்கும் என்னுயிர்த் தாசு.

## 61. சுதந்திரத்தின் பின்னான சோகம்..

நேற்றையைப் போலவே
இன்றுமோர் காலையும்
மாற்றமே இன்றி விடிந்தது
ஆயினும்
தேற்றவோ அன்றித்
தேம்பி நின்றுருகவோ
வெற்றியைப் பற்றி
விளக்கவோ விடுதலை
வென்றமை பற்றி
விண்ணாணங்கள் பேசவோ
நாட்டிலே யாருளார்
நம்முடன்..?

பெற்றதைப் போற்றுதல்
யாருடன்? பீற்றுதல் யாருடன்..?
காற்றினில் சுதந்திர
கானங்கள் கேட்பினும்
வீற்றுளார் யாரினி
எம்மிடை...? இச்சுவை
சாற்றிட "சம காலத்திலெம்முடன்
போற்றிட வாழ்ந்தவர்
போரிடை போன பின்"

பூத்தான் வளர்ந்தென்ன ?
புல் தான் மலர்ந்தென்ன ?
ஆர் தான் ஆண்டென்ன
அடுத்தென்று ஓர் வெறுமை
போர்வைக்குள் என்னைப்
புதைத்தாலும், மறு நொடியே
ஏர் பூட்டி இன்னும்
உழுவதற்கும், பாத்தி கட்டி
நீர் பார்த்து உள்ளே விடுவதற்கும்
இளம் பயிர்கள்
எந்தத் தடையுமின்றி எழும் வரையும்
உந்தனுக்கு
சொந்தச் சுகமுமில்லை ஓய்வில்லை
என்றன்று
போனவர்கள் சொன்ன கதை
போர்வையினை இழுத்தெறிய
நானிரவைக் கிழித்தபடி
நகருகிறேன்.. நகருகிறேன்..

## 62. நலனற்றுப்போதல்..

மேனி குளிர்ந்து மென்காற்றில்
புல்லரிக்க
ஊனத்தசை எல்லாம்
உன் மணியின் ஓசையினில்
ஞானத்தசையாகி நமைய
வாசலிலே
நான் வந்து நிற்கின்றேன்
நல்லூரா! மனசெல்லாம்
ஏதென்றியம்பேலா இன்ப
அதிர்வலைகள்,
ஓங்கிக்கை கூப்பி
உள்ளிருப்பை ஒருப்படுத்தி
தாங்கேலா நினைவெல்லாம்
தளர்த்த, உள்ளிருந்து
ஓடிவரும் காற்றுயிர்பெற்று
இரு செவியின் கரைவழியால்
மெல்லக்கரையும்
ஓங்காரம்
உள்ளெரிந்துயர்ந்து உருவாடும்,
மணிவேலா..!
"நான் இறப்பேன் இருப்பேன்
நலனற்ற நானாவேன்
ஏன் என்ற ஏதுமற்றுப்போவேன்"
இனி மேலும்
உன் வாசல் வந்தேகும்
போது..

## 63. கத்தி நீ சொல்லுவாய்..

வேலிகள் தானும் வேய்ந்திடா வண்ணம்
எங்கள் தென்னையைப்
பனையைத் தலையால்
அப்படியே நீர் அறுத்தெடுத்துளீர்
ஆயினும் இன்று
முட் கிழுவையும் முன்னரே வேய்ந்த
ஓலை வேலியும் கொண்ட
சராசரி
ஈழமக்களின் இளகிய
இதயமாய் ஏதோ வாழ்கிறோம்
இன்னமும், நாங்களும்
நல் ஒழுக்கமும்
வீரமும் கொண்ட ஓர்
சொல்லப்பட்ட
இனத்தைச் சார்ந்தவர்
பயத்தம் உருண்டையைச்
செய்யினும், இறுக்கி
ஒட்டி, ஒட்டியே
பணியாரமாக்கிடும்
உறவுகள் அன்புணர்வுகள் உள்ளவர்
காதல் செய்வதில்
கரை பல கண்டவர்
காம வெற்றியைக்
கடவுளாய்க் கொண்டவர்

பாவாடையும் மேற் சட்டையும்
அருவியில் குறுக்குக் கட்டுக்
குளியலும், சாரமும்
கட்ட சம்பலும் சோறும்
கருப்பணித் தயிருமென்றிருக்கும்
சராசரிச் சமூகமே!
வீட்டைக் கொழுத்தி, நீர்
வீதியில் போட்டெமை
நாட்டினில் சேர்ந்து
வாழ்ந்திடச் சொல்கிறீர்,

எங்கள் அழுகையும்
உயிர்களும் தியாகமும்
எந்த விதத்திலும் குறைந்தவை அல்ல
ஆயினும் நாமுமைக்
கேட்பது சாந்தியே..
மீண்டும் கந்தக
விளைச்சலை வெறுக்கிறோம்
வெறுப்பினும் நாம்
வீரமாய் இருக்கிறோம்..

ஆதலால் சொல்கிறோம்
ஆதிக்க வாதமே..!

இனக்கொலை புரிந்த நும்
அச்சுறுத்தல்கள்
சனக் கொலை மட்டுமே
செய்திட முடிந்தது
பிணங்களாய் நீர் தினம்
ஆக்கிடும் எம்மவர்
நிணங்களில் எரிந்திடும் தீயது
எங்களின்
மனங்களில் தினம் தினம் மூண்டிடும்
தீயினுள்
அனுங்கியே சன்னமும் உருகிடும்
உடல்களைத்
துளைத்திடா தென்பதுன்
தூண்களிற் கேட்கையில்..

உழைப்பும் ஓர்மமும் கொண்ட
ஓர் விடுதலை, தளைக்கும்
அதைத் தடுத்திடல் என்பது
மலைக்கு மேல்
மண்ணள்ளிப் போட்டதை
மறைக்க நினைத்தலுக் கொப்பதே
என்பதை
கத்தி மேல் நடக்குமுன் கால்களும்
கிழிகையில்
கத்தி நீ சொல்லுவாய் காதுகள்
கிழி பட
கத்தி நீ சொல்லுவாய் காதுகள்
கிழி பட...

# 64. விடுதலைக்கான பாடல்

செவிடு படுத்தும் ஒலியுடன்
சீறிவரும் விமானங்களை
எமக்கு முன்னரேயே
உணர்ந்து விடுகிறது
நாய்,
வாலை மடக்கிய படி
ஈனஸ்வரத்தில் அது உணர்த்தும்
அபாய அறிவிப்பின்படி
பதுங்கு குழிக்குள் பாய்வதில்
நாயை முந்தி விடுகிறோம்
நாம்.
வசிக்கிற காலம்
வீட்டினும் அதிகம் என்பதால்
எப்போதுமே அணையாது ஒளிர்கிறது
பதுங்கு குழிக்குள் ஒற்றை விளக்கு,
வாழ்வு பற்றியதான
தொலை தூரப்பார்வை
புகை மண்டிய பதுங்குகுழி போலவே
எங்கும் இருளாக இருப்பினும்
எரிகின்ற விளக்கின்
சிறிய ஒளி போன்றதான
தென்தெட்டு நம்பிக்கைகளே
சுவாசம் முழுவதிலும்
துயர் நிறைந்திருப்பினும்
துணிவையும் நிறைத்து வைத்திருக்கிறது.

எதற்கென்றறியாது
ஒருவரை ஒருவர்
பார்த்துக்கொள்ளுகையில்

கண்களில் பிரதிபலிக்கும்
மஞ்சள் ஒளிக்கொழுந்து
ஆழக்கிணறு தோண்டுகிற
குண்டின் அதிர்வுகளால்
விளக்கில் மட்டுமல்ல
கண்களிலும் நடுங்குகிறது,
இதனிடையே, நாம் வாங்குகின்ற
உள் மூச்சும், வெளி மூச்சும்
லயப்பிடிப்பொன்றில்
விடுதலைக்கான ராகமொன்றை
தயார் செய்கின்றன,

இது உலகெங்கணும்
உரத்துப்பாடப்படும் நாட்களில்
ஒருவேளை
இசைதந்த அனைவருமே
இல்லாதிருக்கலாம்....
ஆனால் இதுதான்
உலகின் விடுதலைக்கான பாடல்
உணர்வின் உன்னதத்துக்கான பாடல்.

## 65. கண்ணாடி முன்னின்று கதைத்தல்..

உனைச் சுற்றி இருந்தோர்கள்
ஒவ்வொருவராய் மெல்ல
தனக்கான வேளை வந்துவிட சிரித்தபடி
தலையாட்டி விடைபெற்றுப் போய்விடவும்
இப்போதில்
நீயும்,கவிதைகளும் நெடுமூச்சு வளர்கின்ற
நினைவுகளும் மட்டும் எஞ்சிக்கிடக்கின்றீர்

எல்லோரும் போய் உன்னை
ஓர் புறத்தில் தனியாக
சொல்லாட விட்டு விடும்
சுகம் உனக்கும் பிடிக்கும் தான்

எதை நினைத்துக் கொண்டிப்போ
இருக்கின்றாய் என்பதுவோ
இதையிப்போ ஏன் நினைத்தாய்
என்பதுவோ இப்போதில்
உந்தனுக்கு ஏனோ ஒன்றும் புரிவதில்லை

எதுவோ ஒன்றை நீ
எண்ணுதற்குள் விரைவாக
அது உன்னைக் கடந்து
அப்பாலே செல்கிறது

எதற்காக நீ இப்போ
இரங்குகிறாய் என்பதுவோ
எதற்காகச் சிரிக்கின்றாய்
இடிகின்றாய் என்பதுவோ
உனக்கிப்போ ஒன்றும்
உறைப்பதில்லை, உன்னுடைய

கவலைதானென்ன? ஏன்
கலங்குகிறாய் என்பதுவும்
உனக்கே நிசமாக
ஒன்றும் தெரியாது

கண்கள் நிலைக்குத்தி
ககனத்தில் அலைகிறது
உன்னிதயத் துடிப்பை நீ
உணருகிறாய், தலைகோதும்
அன்பான ஓர் வார்த்தை
ஆறுதலாய்ச் சாய்ந்து விட்டு
தெம்பாக எழுந்திருக்கத்
தெய்வீக மடி ஒன்று
என்பாலும் வாராதா
என்றெண்ண அலைஅலையாய்
தன் பாலம் கடந்தவையும்
தாண்டி எங்கோ போகிறது

வெடித்தது போலுள்ளே
வீணிதயம் வலித்தாலும்
உடைந்து விடாதென்ற
உறுதி உனக்குள்ளே

உனக்கான ஓர் நாடு
உயிர் நீத்த வீரர்கள்
தனக்கான வாழ்வைத்
தவிர்த்து அவர் கொடுத்த
விலைகள், அதற்கின்னும்
விடையில்லை என்பதுவும்
உலைபோல ஒரு பக்கம்
உருகிக் கொதிக்கையில் நீ
மலை உடைந்து வீழ்வது போல்
மனம் வீழ்வாய், உனக்கிப்போ

வழங்கப்பட்டுள்ள வாழ்வினையும்
நீ கண்ட

## 66. நிசம் உணர்ந்தணிந்த நெருப்பாடை...

நீறாவாய் என அறிந்தே
நெருப்பாடை தனை அணிந்தாய்
மாறாமல் நீள்கின்ற
மண்ணின் விதி இதனால்
தேறி விடும் எம்
திசையெங்கும் ஒளி சுடரும்
பாறி அடியோடு
படுகுழியில் வீழ்ந்துள்ள
விடியல், உனையெரித்தால்
வெளிக்கும் என உணர்ந்தே
வாழ்வை வசந்தத்தை
வழிந்தூறும் காதலினை
ஊழ்வினை எனச் சொல்லி
ஒதுக்கி குழந்தைகட்காய்
தகிக்கும் என் அறிந்தும்
தரித்தா யிவ்வாடையினை

என்றோ ஓர் நாளில்
எமக்கான கிழக்குதிக்கும்
அன்றைக்கு, அதன் முன்னே
ஆருயிரை நீ துறந்து
சென்றிடலாம், வெற்றிச்
சிறப்பதனைக் காண்பதன் முன்
கண் மூடி உன் காலம்
காலம் ஆயிடலாம்
என்றறிந்தும் எதற்காக
இதைத் தரித்தாய்? மகிழ்வாக
ஓடைக் குளிர்மலரின்
உணர்வொத்த ஆடைகளை
உன்னுடைய சந்ததிகள்
உடுக்கட்டும் எனத்தானே!
காலி முகத்திடலின்
கடற்கரையில், பூங்காவில்
வேலிக்கரையோரத்தில்

வலிகள் நிறைந்தூறும்
வழிகளையும் என்னாலே
வாழ்க்கை என்ற சொல்லாலே
வரைந்து விட முடியவில்லை
வாழ்க்கை என்கின்ற
வலிமை நிறை சொல்லுக்குள்
போக்கறுந்த உன் வாழ்வு
பொருந்தாது ஆதலினால்

உன் போக்கைச் சொல்லுதற்கு
உரிய தகு சொல்லொன்றை
எனக்கான மொழியெங்கும்
இயன்றவரை தேடுகிறேன்
எப்படியும்
வார்த்தையை வனைந்தெடுத்து
வருவேன் அதற்குள் நீ
சோர்ந்துந்தன் ஆயுளுக்குச்
சோரம் போய் வீழாதே
சேர்ந்து வருவேன் நான்
சிந்தாதே அது மட்டும்
ஊர்ந்து போகும் உன்
உயிரை விரைவாக
ஓடிப் போவதற்குத் தூண்டாதே
வருவேன் நான்..

வீட்டிற்குப் பின் புறத்தில்
காது மடலுரசி
கன்னத்தை நனைய வைத்து
பாதி விழி செருகப்
பார்த்து இரு விரலால்
முதுகூசி தன்னை
முனகலுக்குள் கழற்றி விட்டு
எதுவோ சாதித்த
இறுமாப்பில் பல்லிளிக்கும்
சுதி வாழ்வை உந்தனுக்கும்
சுகித்துவிடத் தெரியாதா?

வெடித்த குண்டுகளின்
வீச்சில் சிதறிப் போய்
துடித்துக் கொண்டிருக்கும்
துண்டுத் தசைகளிடை
சாதியினை மட்டும்
சரியாகப் பிரித்தெடுத்து
நாலு சொல்லு
பெண்ணியத்தை அதற்குள்
பிரட்டிக் குழைத்து விட்டு
மாற்றுக் கருத்தாளன்
என்கின்ற மறைப்புக்குள்
மாற்றானின் திட்டத்தை
மறைத்து மேட்டிமையில்
ஏட்டில் சுரக்காயென்றெழுதி
இது எங்கள்
நாட்டுக்குரிய நல்ல கறி
என்று சொல்லி
ஓட்டத் தெரியாதா
உந்தனுக்கும் வாழ்வதனை?

வாழ்வதற்கு உனக்கிங்கே
வழி இருந்தும் அதற்கான
வாழும் முறை தெரிந்தும்
வளையாமல் உன் வாழ்வை
சுளையாக இம் மண்ணின்

சுக விடிவுக்காகவென்று
பிழைக்காய் என அறிந்தும்
பெருங்கொடையாய்த் தந்து சென்றாய்

கழுத்தில் நஞ்சணிந்த சிவனாய்
களத்தில் நீ
எழுதி விட்டுச் சென்றதிங்கே
ஏராளம், சுய விருப்பில்
நெருப்பாடை தன்னை
நீயணிந்து கொள்ளவில்லை
உருப்படா நீசர்கள்
உனையணிய வைத்தார்கள்
கொம்புக்கு மண்ணெடுக்கும்
குணமில்லை உந்தனுக்கு
அம்புக்கு எதிரம்பு
அடித்தாய் அவ்வளவே

உன்னுடைய காலத்துள்
உய்யும் என எண்ணி
உன்னாலியன்ற வரை
உழைத்தாய் ஆனாலும்
தன்னுடைய காலமின்னும்
தாண்டவில்லை காலத் தீ
அடுத்து வரும் சந்ததியின்
அழகொழுகும் மேனிகளில்
உடுத்தி விட நினைக்கிறது
உன் உடையை, அவர்களுக்கும்
அதையணிந்து செல்வதற்கு
ஆசையில்லை, எதிரிகளாய்
அதையணிய வைத்தால்
அவர்களுந்தான் என்ன செய்வார்...?

## 67. மனத்தின் பயணம்..

சாகாவரை மனதிற்
சஞ்சலங்கள் சஞ்சரிக்கும்
போகாது உயிரின் முன் புறப்பட்டு
நோகாமல்
இருந்தால் மனமில்லை அதன் பெயரும்
விட்டு விடு
வருந்திப் பின் வழிக்கு வரும்

வரும் நேரம் வாழ்க்கை
வசந்தத்தின் சாவிதனைத்
தருமென்று எண்ணிடுதல் தவறு
உருவழிந்து
வந்த தடம் கூட வழிகளிலே
இருக்காது
இந்த நிமிடந்தான் இனி

இனிக்காலம் எம்மை
எம்மை எதற்கும் தயாராக
தனிக்காட்டின் நடுவிற் தள்ளி விடும்
நுனிப் புல்லில்
பனித் துளியாய் வாழ்வு பழகி விடும்
தன் வாழ்வை
தனித்துணையாய் கொண்டு தான்

தானென்ற தன்மை
தாண்டு விட இவ்வருகை
ஏனென்ற கேள்வி எழுகையிலே
வானென்ற
அகண்டவெளி வீடாகும்
ஆகும் மனமது போல்
இகம் பரமொன்றாகும் இதம்

இதத்தை இன்மையினை
எதனையுமே உணராத
பதத்தில் மனமான பருத்திப் பூ
மிதந்தபடி
வெளிக்கப்பால் வெளிகடந்து விரைய
அன்பென்ற
ஒளிக்கப்பல் உனையேற்றும் உள்

உள்ளே ஒளி கசிய
உணர்வெழுந்த சித்தார்த்தன்
தள்ளி அரியணையைத்
தவிர்த்தான் தான் ஆனாலும்
அரசவையின் பொறுப்பை
அதன் சுவையை உணர்ந்திட முன்
தெரிந்தவன் சொல்லி வைத்த
தெளிவான சொல்லை விட

ஆண்டு அனுபவித்து
அதன் சுவையை உணர்ந்து வெற்றி
பூண்ட பின்பும் அதைப்
புறந்தள்ளிப் போட்டு விட்டு
பேசாமற் சென்று விட்ட
பேரரசன் அசோகனவன்
பேசாத வார்த்தைகளே
பேருண்மை வழியாகி
ஒருண்மையாய் உள்ளே
ஒளிரும்..

## 68. பயணத்தின் நாட்கள்..

கண்ணிருட்டி வெண் பூச்சி
பறக்கிறது, கை கால்கள்
பல மற்று நடு நடுங்கித்
துவள்கிறது, மெதுவாக
எழுந்தெழுந்து வரும் மூச்சும்
இடையிடையே நின்று விட்டு
எழுவதுவும் வீழ்வதுமாய்
இருக்கிறது, விறைக்குமிந்த
குளிரினிலும் வேர்த்தொழுகி
நனைகிறது, உள்ளிழுத்து
மூச்சு விட இயலாமல்
எலும்பெல்லாம் விறைத்திறுகி
கொதித்துக் குடைந்தென்னைக்
கொல்கிறது

கால் வலிக்க
இழுத்திழுத்து நடந்தாலும்
எப்பேனும் ஓர் நாளில்
துளிர்ப்பேன் எனுமெண்ணத்
தூவான முகில்களெல்லாம்
கலைந்தென்னைக் கடப்பதனைக்
காணுகிறேன், இல் வாழ்வில்
அன்பும் அறனுமின்னும்
அப்படியே இருந்தாலும்
தெம்பும் திறனும் என்னில்
தீர்வதிப்ப உணருகிறேன்

வதை வீட்டில்
கூரிரும்பை ஆண்மைக்
குறிக்குள்ளால் அடிவயிற்றில்
இழுத்திழுத்துத் தள்ளி
இடிக்கையிலும், வாய் திறந்து
ஓர் வார்த்தை தன்னும் நான்
உதிர்க்காத கோபத்தில்
கன்னப் பூட்டுடைத்து
வாய் கிழித்துக் கேட்கையிலும்
என்னமோ தாங்க முடிந்தது தான்

இப்போது
பட்ட இடமெல்லாம்
பற்றிக் கொதித் துயிரை
வெளியேறு எனக்கெஞ்சி
விம்முவதும், பொறுக்காமல்
உடலின் கால்கள் முன்
உயிர் விழுந்து கும்பிட்டு
போக விடு என்னையென்று
புலம்புவதும் கேட்கிறது

காற்று வீசுவதாய்
கடல் அலைகள் எழுவதுவாய்
வீற்றிருந்த வாழ்வு
மிக இயல்பாய் பூ மலர்வாய்
தூக்கத்தில் என்னைத்
துறந்தால் மகிழ்வுடனே
திருப்பிப் பார்க்காமல்
செல்வதற்கு ஏற்றபடி
எண்ணப் பைகளெல்லாம்
எடுத்தடுக்கி வைத்துவிட்டு
பார்த்துக் கிடக்கின்றேன்
பயணத்தின் நாட்களுக்காய்..

# தமிழோசை பதிப்பக நூல்கள் விலைப்பட்டியல்

| வ.எண் | தலைப்பு | விலை (ரூ.) |
|---|---|---|
| 1. | **ஹோசிமின்** (வாழ்க்கை வரலாறு) (ரசிய மொழியில் - யெவ்கனி கொபலெவ் ஆங்கிலத்தில் - லிக் ஸ்நீர்சன், செர்கே ஈவான்சுலாகி, தமிழில் - க.விசயகுமார்) | 250.00 |
| 2. | **மார்க்சியம் தோற்றமும் சாராம்சமும்** (தியோடோர் ஒய்சர்மான்) | 30.00 |
| 3. | **வீரன் செண்பகராமன்** - கவிஞர் வானம்பாடி | 30.00 |
| 4. | **எனது வாழ்வும் போராட்டமும்** (சுயசரிதை) எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் (தமிழில் - க.விசயகுமார்) | 100.00 |
| 5. | **குர்து தேசிய இன வரலாறு** - ஹாசன் அர்ஃபா (தமிழில் - க.விசயகுமார்) | 180.00 |
| 6. | **1941 கிள்ளான் தொழிலாளர் கிளர்ச்சி**(மலேசியா) எச்.ஈ.வில்சன் (தமிழில் - க.விசயகுமார்) | 35.00 |
| 7. | **தமிழிசைத் தளிர்கள்** - நா. மம்மது (இசை குறித்த கட்டுரைகள்) | 50.00 |
| 8. | **நான் அமெரிக்கனல்ல** - மால்கம் X சொற்பொழிவு - (தமிழில் - க.விசயகுமார்) | 15.00 |
| 9. | **நான் ஒரு சிறைப்பறவை** - பான்பாய் சௌ வியட்நாமிய விடுதலைப்போராட்டத் தலைவரின் சுயசரிதை - (தமிழில் - க.விசயகுமார்) | 65.00 |
| 10. | **நீண்ட பயணத்தில் தலைவர் மாவோவுடன்** சென் சேங்ஃபெங் (தமிழில் - க.விசயகுமார்) | 50.00 |
| 11. | **சயாம் மரண ரயில்** - சண்முகம் (மலேசியா) சயாம் மரண இரயில்பாதை உருவாக்கத்தில் பங்கேற்ற ஓர் இளைஞனின் அனுபவம் நாவல் வடிவில் | 50.00 |
| 12. | **முல்லைப் பெரியாறு அணை - வரலாறும் தீர்வும்,** இரா. வெங்கிடசாமி | 45.00 |
| 13. | **வியட்நாமில் பிரெஞ்சுப்படைகளின் சரணாகதி** பிரெடெரிக் ஃ;எப். கிளெய்ர்மோன்ட் (தமிழில் - க.விசயகுமார்) | 30.00 |
| 14. | **போராட்டம் தொடர்கிறது** (இலங்கை தேயிலைத் தோட்டத் தொழிற்சங்கங்களில்பெண்களின் நிலை குறித்த ஆய்வு) ஆங்கிலத்தில் : மேனகா விஜயலட்சுமி கந்தசாமி. (தமிழில்-க.விசயகுமார்) | 40.00 |

| வ.எண் | தலைப்பு | விலை (ரூ.) |
|---|---|---|
| 15. | ***ஆப்கன் அவலம் - உலக நாடுகளின் அலட்சியம்,*** மோசென் மக்மல்பாஃப், தமிழில் - வெ.கோவிந்தசாமி | *45.00* |
| 16. | ***பலுசிஸ்தான் விடுதலைப் போராட்டம்*** க.விசயகுமார் (பாகிஸ்தானில் நடைபெற்று வரும் தேசிய இனப்போராட்டம் குறித்த நூல்) | *50.00* |
| 17. | ***சிறீலங்காவின் தேசியத் தற்கொலை*** - பிரமிள் 1983 யூலையில் கொழும்புவில் நடைபெற்ற கலவரம் குறித்த ஒரு கட்டுரை | *30.00* |
| 18. | ***கிரேக்கத்திற்குப் போன தமிழிசை*** தொகுப்பு - க.விசயகுமார் (ஒப்புரவு இதழில் வெளிவந்த இசை குறித்த கட்டுரைகள்) | *40.00* |
| 19. | ***பாலக்காடு சித்தூர் தமிழர் வாழ்வியல்*** மா. பேச்சிமுத்து | *60.00* |
| 20. | ***சயாம் - பர்மா மரண இரயில்பாதை : மறக்கப்பட்ட வரலாற்றின்உயிர்ப்பு***-சீ.அருண். (சயாம்-பர்மா தொடர்வண்டிப்பாதை உருவாக்கப் பட்ட வரலாற்றுக் குறிப்புகளும், கட்டுமானத்தில் வேலை செய்த தொழிலாளர்களின் நேர்காணலும், கட்டுமானப் பணிகள் தொடர்பான ஒளிப்படங்களும்) | *180.00* |
| 21. | ***புதியதோர் உலகம்*** - அ. ரெங்கசாமி (மலேசியா) சயாம் மரண இரயில்பாதை உருவாக்கத்தின்போது சப்பானியப் படைவீரர்களிடம் பிடிபடாமல் காட்டுக்குள் ஒளிந்து வாழ்ந்த முதியவர்கள், பெண்களின் வாழ்க்கையை விவரிக்கும் வரலாற்று நாவல்) | *115.00* |
| 22. | ***மலேசியாவில் தமிழர்கள்*** - மா.செ. மாயதேவன் 1950களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு) | *50.00* |
| 23. | ***மலேசியத் தமிழர்கள்*** - இரா.ந. வீரப்பனார் 1870 தொடங்கி 1990கள் வரையான மலேசியத் தமிழர் அரசியல் சமூக பொருளாதார வரலாறு | *115.00* |
| 24. | ***விடியல்?*** (மலேசியா), 1941 கிள்ளான் தொழிலாளர் கிளர்ச்சிப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நாவல் | *80.00* |
| 25. | ***நினைவுச்சின்னம்*** அ. ரெங்கசாமி (மலேசியா) சயாம்-பர்மா மரண இரயில்பாதை நாவல்) | *400.00* |

எமக்கான பருவம் என்று
ஒரு நாள் வரும்..!
அன்று
கூட்டம் கூட்டமாய் நாங்கள்
கூடு திரும்புவோம்
எங்கள் மண்ணும், காற்றும்
வயல் வெளிகளும், மரங்களும்
எங்களுக்காகத்தான்
தோழர்களே !
காத்துக் கிடக்கின்றன

**தமிழோசை பதிப்பகம்**

